காவேரி

பக்ஷிராஜாவின்
காஞ்சனா
அமோகமான வரவேற்பு
சென்னை
பிரபாத், வெலிங்டன்
இரு தியேட்டர்களிலும்
மற்றும்
மதுரை, பெங்களூர்,
கோயமுத்தூர், திருச்சி,
தஞ்சாவூர், மைசூர்,
சேலம், திருநெல்வேலி,
காரைக்குடி, திண்
டுக்கல், விருதுநகர்,
வேலூர், கரூர், காஞ்சி
புரம், புதுச்சேரி,
கூனூர், ஈரோடு, மங்க
ளூர், ராபர்ட்ஸன்பேட்,
நாமக்கல், தவனகிரி,
தர்மபுரி
முதலிய இடங்களில்

2279

இந்தியாவின் கிராம

புனருத்தாரண திட்டங்களுக்கு

தி அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்

இவர்களின் வியாபார மானேஜர்கள்

தீ சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

SISTA'S. CMI. A TAMIL

நீங்கள் உங்களுடைய

நிலத்தை உழுவதற்கு ஓர் யானையை வாங்குவீர்களா?



சுத்த மடத்தனம் அல்லவா? ஆயினும் பாட்டரி ரேடியோ உபயோகிக்கும் அநேகர் குறைந்த சக்தி செலவில் திருப்திகரமாக ரேடியோ கேட்க முடிந்தாலும்கூட, மிகவும் சக்தி வாய்ந்ததும் அதிக செலவு அளிக்கக் கூடியதுமான, ஸெட்டுகளை உபயோகிக்கிறார்கள்.

அதிகப்படியான வால்யூம் அளிக்கக்கூடிய ஓர் ரேடியோ ஸெட் பாட்டரியின் சக்தியை வெகு சீக்கிரத்திலேயே வீணாக வற்றச் செய்கிறது.

குறைந்த சக்தியால் வேலை செய்யும் ஓர் ரேடியோ பாட்டரி சக்தியை சிக்கனமாக செலவிட்டு உங்களுடைய பணத்தையும் எப்பொழுதும் மிச்சப்படுத்துகிறது. ஆகையால் நீங்கள் ஒரு பாட்டரி ரேடியோ வாங்கும்பொழுது குறைந்த சக்தியை உபயோகிக்கும் ஸெட்டையே பார்த்து வாங்குங்கள். அதுவே உங்களுக்குப் போதிய, தெளிவான வால்யூமை அளித்து, பெருங்கூச்சலை தவிர்க்கிறது.

நீங்கள் எப்பொழுதும்

EVEREADY

TRADE-MARK

ரேடியோ பாட்டரிகளையே உபயோகியுங்கள்

அவைகளே உலகத்தில் மிகச்சிறந்த ரேடியோ பாட்டரிகள்

ஒரு நாஷனல் கார்பன் தயாரிப்பு

இனாம்! இனாம்!! இனாம்!!



எமது நெ. 501 கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும், வளரச்செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 1—15—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும் மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (c. k.)

JULLUNDUR CITY.

ரொக்கப்பரிசு ரூ. 1000

(அபூர்வ சக்தியுடையது)

மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகா. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணாமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal, Bengal Mesmerism House (C. K.)

JULLUNDUR CITY. Pb.



டீலர்கள்:—
கமானி இன்ஜினீயரிங் கார்ப்பொரேஷன் லிட்., சாகர் மான்ஷன், ஜோன்ஸ் தெரு, பிராட்வே, மதராஸ் 1; ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (தெ. இ) லிட், கோயமுத்தூர்-கள்ளிக்கோட்டை-உதகமண்டலம்-திருவனந்தபுரம்; வெப்ஸ் பார்ம் மெக்கானைசேஷன், 30, மகாத்மா காந்தி ரோட், பங்களூர் & மைசூர்;

ஸ்டாகிஸ்ட்ஸ்:—
காமினேனி பார்மிங் கார்ப்பொரேஷன், வாரகப் பட்டணம் & குடிவாடா; S. பாப்பன்ன ஸெட்டி, ஹாஸ்பட்; சுந்தரம் & ஸன்ஸ், 67, ப்ரிட்ஜ் ஸ்டேஷன் ரோட், தன்னக்குளம் போஸ்ட் மதுரை: பார்மிங் மெஷினரி & ஸர்விஸ், பெனண்ட் ரோட், பக்கிங்காம் பெட் போஸ்ட், விஜயவாடா.

உன்னத தாந்திரிக மோதிரம்

சூரிய கிரஹண புண்ய காலத்தில் குரு க்ஷேத்திரத் தலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது மந்திர சக்தி வாய்ந்தது.

காரண்டி :—ஆறு மாதத்திற்குள் பலனளிக்காவிட்டால் விலை வாபஸ் செய்யப்படும். இதை உபயோகித்தால் மனத் தளர்ச்சியும் இன்னல்களும் பறந்தோடிவிடும். ஏழ்மை உங்களைவிட்டு அகலும், விரும்பும் பெண் உங்களை மணக்க முன்வருவாள், புத்திரப்பேறு இல்லாதவர்களுக்கு குழந்தைகள் பிறக்கும், வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும் புதையல் கிடைக்கும். லாட்டரி, கிராஸ்வேட்ஸ், வியவகாரம், ரேஸ், பரீக்ஷை இவைகளில் வெற்றி நிச்சயம். தேக அசௌகரியம் நீங்கும். என்றும் நல்ல காலம் ஓங்கி நிற்கும். விலை ரூ. 5—12—0. ஸ்பெஷல் ரூ. 6—12—0. எலெக்டிரிக் கரண்டு போல் வேலை செய்வது ரூ. 7—12—0. வெள்ளி ஸ்பெஷல் மோதிரம் ரூ. 21—0—0. தங்கம் ரூ. 51—0—0. தபால் செலவு ரூ. 1—8—0 பிரத்யேகம்.

MOHINI BHANDAR (Regd.) (c. k.) DELHI-6.

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானோ உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் விகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டன, மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மைசெய்தும் வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimathi. BIBI CHARAN PIARI

Sant Nagar (C. K.) Jullundur City

Govt. Regd. No. 816

பரிசு ரூபாய் 10000

முதற் பரிசு ரூ 7000

மற்றபரிசுகள் ரூ 3000

(சரியான விடைக்கும், 1, 2, 3 தவறுள்ள விடைகளுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.)

சீல் விடை - சென்னை ப்ரீமியர் பாங்கில்

★ பிரவேசக் கட்டணம்: கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணா நான்கு மட்டுமே. ★

சலுகை: பத்து கூப்பன் அனுப்பும் ஒவ்வொருவரும் மேற்கொண்டு இரண்டு கூப்பன் இலவசமாக அனுப்பலாம்.

முடிவு தேதி 11—6—52

		விடைகள் 1	2
1	ஏழைத் தகப்பனார் தன் பெண் கலியாணத்திற்கு இது கொஞ்சமாவது வேண்டுமே என கவலைப்படுவார்	நகை	துகை
2	பஞ்சப் பிரதேசத்து ஏழை மக்கள் இது ஏதாவது கிடைக்குமா என வெளியிடங்களைத் தேடிச் செல்வதுண்டு	சோலி	கூலி
3	ஆப்த நண்பர்களிடம் .... வைத்துக்கொள்ளலாமா?	பேதம்	பேரம்
4	என்னதான் பொல்லாதவனாயினும் இவனுக்கு மரியாதை செய்யவேண்டியது முறை (நீத்தவன்=இறந்தவன்)	நீத்தவன்	மூத்தவன்
5	இவன் நானாவித சாமான்களை வாங்குவான் என்று சொல்ல முடியுமா? அனுத்தன்=ஆசையில்லாதவன். உலுத்தன்=உலோபி	அனுத்தன்	உலுத்தன்
6	முக்கிய விருந்தாளிகள் வருவதாயிருந்தால் மனைவி, விசேஷ இது செய்யக் கூடும்	ஏற்பாடு	சாப்பாடு
7	கடும் வெயிலில் கால்நடை பிரயாணம் செய்தவன் தன் களைதீர குளிர்ந்த ஒரு இதை விரும்புவான்	பானம்	ஸ்நானம்
8	பெட்டியின் சாவி காணமற் போய்விட்டால் அதைத் திறக்க வேறு ஏதாவது ......உண்டா என பார்ப்போம்	சாவி	வழி
9	......களை அன்புடன் ஆதரிக்கவேண்டும்	அகதி	அதிதி
10	வகுப்பில் இப்படியாக இருக்கும் மாணவன் சதா உபாத்தியாயரின் கோபத்திற்கு இலக்காகக் கூடும்	வாண்டு	மண்டு
11	தன் ஒரே மகனை போர்க்களத்திற்கு அனுப்பும் தாய் அவள் இப்படியாகத் திரும்பிவர வேண்டுமே என பிரார்த்திக்கக் கூடும்	சீக்கிரம்	சாக்கிரதை
12	எப்பேர்ப்பட்ட அறிவாளியானாலும் சில சமயம்......பிழைகள் செய்வது இயற்கையே	சில	சிறு
13	வரலக்ஷ்மிப் போட்டியின் .....மேன்மேலும் ஓங்க வேண்டுமென நேயர்கள் ஆசி கூறுகிறார்கள்	புகழ்	பெயர்

மேலே உள்ள கட்டத்தில் பதின்மூன்று குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதா காகிதத்திலும் எழுதலாம், அச்சுக் கூப்பன்களும் இலவசம். விடைகளை வார்த்தைகளாகவோ 1-2 எண்களை உபயோகித்தோ எழுதவும். இப் போட்டியின் சரியான விடை காவேரி ஆனி இதழில் வெளிவரும். சகல விஷயங்களிலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகளும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம்:—

மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி "ஸ்ரீவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

நமது அடுத்த போட்டி முடிவு தேதி 26--5--52 கூப்பன்கள் எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

போட்டி 26-ன் சரியான விடை:-

(1) பரிசு (2) ஏனம் (3) வித்தை (4) வியப்பு (5) விழி (6) நஷ்டம் (7) வாயாடி (8) சிறியது (9) கண்ணடி (10) விந்தை (11) மாத்திரை (12) கொஞ்சல் (13) லஞ்சம் 1122221222122

போட்டி—25-ன் பரிசு விவரம். முதற் பரிசு சரியான விடைக்கு ரூ. 72—14—0-ம் அழகிய வெள்ளி டம்ளரும், 2-வது பரிசு தலைக்கு ரூ.2—0—0 விதமும், 3-வது பரிசு தலைக்கு ரூ 1—0—0 விதமும், 4-வது பரிசு தலைக்கு ரூ.0—8—0 விதமும் வழங்கப்பட்டன. பரிசுத் துகைகள் 8—5—52 அன்று அனுப்பப்பட்டன. முழு விபரங்கள் வரலெக்ஷ்மி கிராஸ் வர்ட்ஸ் நெ. 27-ல் பார்க்கவும். இதழ் இலவசம்.

எங்கும் கலக்டர்கள் தேவை. நல்ல கமிஷனும் மெரிட் பரிசும் உண்டு.

வெயிலைப்பற்றி
எனக்கு பயமில்லை



வீட்டிலே
போனிக்ஸ்
விசிறி இருக்கிறது

போனிக்ஸ்

(A.C & D.C) விசிறிகள்

ஸோல் ஏஜெண்டுகள்

R.M.S. & CO., LTD.,
16, BROADWAY MADRAS-1

மதுரை ஆபீஸ்:-
6, மேல கோபுர வீதி மதுரை

—o—

தஞ்சாவூர் ஜில்லாவிற்கு
ஸப்-டிஸ்ட்ரிப்யூட்டர்கள்

மெஸர்ஸ். செல்வா எலக்ட்ரிக்
ஸ்டோர்ஸ்

79, பொற்றமரை தெற்கு,
கும்பகோணம்.

இத்தருணத்தை

நழுவ விடாதீர்கள்

பின்பு கிடைப்பது துர்லபம்

முற்றிலும் இலவசம்

எந்த உதவிக்கும் சார்ஜ் கிடையாது.

வேலையின்றியோ, கஷ்டத்திற்கு உள்ளாகியோ, வேலை தேடி, பயன் காணுமலோ, உங்கள் வருவாய் குன்றி வேறு வசதி இல்லாமல் இருத்தலோ உங்கள் திட்டங்கள் அனைத்தும் எதிர்பாராத காரணத்தால் பாழாகி விட்டிருந்தாலும், நீங்கள் காதலிக்கும் நபரிடமிருந்து எவ்வித பதிலும் வராமலிருந்தாலும், நீங்கள் வியவகாரத்தில் ஈடுபட்டு, உங்கள் பேருக்கே இழுக்கு நேரிடும்படியிருந்தாலும், பரீக்ஷை, தேர்தலைக் குறித்துக் கவலையாகயிருந்தால், தீராத நோய்வாய்ப்பட்டு பீடிக்கப்பட்டால், பேய் பிசாசுகளினுல் வதைக்கப்பட்டால்,

நீங்கள் உடனே ஓர் புஷ்பத்தின் பெயரையும், உங்கள் பெயர் விலாசத்தையும் எழுதி எங்களுக்கு அனுப்புங்கள்.

எங்களுக்கு ஊதியம் ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை. தபால் செலவுக்காக மட்டும் 6 அணு தபால் பில்லைகள் அனுப்பினுல் போதுமானது, உங்கள் அபீஷ்டங்கள் அனைத்தும் இறைவன் அருளால் சித்திக்கச் செய்வோம். பன்னிரண்டு மாதத்திய எதிர்கால ஆருடம் உங்களை இடையூறுகளினின்று காப்பாற்ற உங்களுக்கு வந்து சேரும்.

Amil Shah, Post Box 1509

(c. k.) Delhi.

இனாம்!   இனாம்!!   இனாம்!!



எமது நெ. 501 கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்துபோவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும், வளரச்செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 1—15—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும் மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

LONDON TRADING Co.,

(c. k.)

JULLUNDUR CITY.

பொருளடக்கம்

நந்தன மலர் 11		வைகாசி இதழ் 10

புதிய ஜனாதிபதி 11
கே. ஸ்ரீ

டில்லித் தபால் 18
கே. ஸ்ரீநிவாஸன்

ஆசையும் விவேகமும் 20
ஏ. எஸ். ராகவன்

சினிமாப் பகுதி 29
கண்ணன்

பிரயாணக் குறிப்புகள் ... 33
சி. வி. ராமகிருஷ்ணன்

நினைவு 41
முத்து-சுப்ரமணியன்

ஜுலேகா 47
ஜெகசிற்பியன்

புரட்சியின் குருபீடம் 59
எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

நாகரீகம் எங்கே? (தொடர் கதை) 65
ஜி. எஸ். மணி

வாழ்வு 74
கே. வி. கே.

குறிப்பு: 'காவேரி' யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்ராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

ARMSTRONG
THE BETTER BICYCLE

199334
சென்னை-600 008

ஆம்ஸ்டிராங்
சிறந்த பைசைகிள்



சிறந்த பைசைகிளாகிய **ஆம்ஸ்டிராங்** ஒன்று உங்களிடம் இருந்தால் போதும்; வேலை நிமித்தமாகவோ வேடிக்கையாகவோ எவ்வித தொந்தரவும் இன்றி நீங்கள் ராஜபாட்டைபோலச் சவாரி செய்யலாம். ஒரு **ஆம்ஸ்டிராங்** வாங்குங்கள். சைகிள் தொழிலில் பிரசித்திபெற்ற தயாரிப்பாளர்களின் சிறந்த தயாரிப்பு உங்களுக்குச் சொந்தமாயிருக்கிறது என்கிற பெருமை உங்களுக்கு விரைவில் ஏற்படும். அதன் பெயரே குறிப்பிடுவதுபோல், வலிவாகவும், இந்தியாவின் கரடுமுரடான ரஸ்தாக்களில் நீடித்து நின்று வருஷக்கணக்கில் நம்பிக்கையளிக்கத் தக்கவாறு உழைப்பதாகவும் அது விளங்குகிறது. **ஆம்ஸ்டிராங்** — மிகவும் பிரபலமான பைசைகிள்—ரஸ்தாவில் அதை நம்புங்கள். அதற்குக் கொடுக்கும் விலை அதற்குத்தகும்.

விநியோகஸ்தர்கள்

ராயல் சைகிள் அண்டு மோட்டார் கம்பெனி

13/14, பிராட்வே, தபால் பெட்டி நெ. 219, சென்னை-1.

ARMSTRONG
THE BETTER BICYCLE
ARMSTRONG CYCLES
BIRMINGHAM

காவேரி

நந்தன ௵ மலர் 11 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | வைகாசி இதழ் 10

புதிய ஜனாதிபதி

கே. ஸ்ரீ.

ஆசார்யா ஸ்ரீ வினோபாபாவே சென்ற வருஷம் டில்லிக்கு வந்திருந்த சமயம். ராஜ்காட்டில் (மகாத்மா காந்தியின் சமாதி இருக்குமிடம்) அவருக்கென்று அமைக்கப்பட்டிருந்த பிரத்தியேக குடிசையில் ஸ்ரீபாவே ஸ்ரீ ராஜேந்திரப் பிரஸாதுக்காகக் காத்திருந்தார். ஜனாதிபதிக்குண்டான மரியாதைகளுடன் ஸ்ரீ ராஜேந்திரபிரஸாத் ராஜ்காட்டை அடைந்ததும் தம் மெய்காப்பாளரைக்கூட வெளியே இருக்கும்படி சொல்லிவிட்டு, தாம் மாத்திரம் ஸ்ரீ வினோபா இருக்கும் குடிசைக்குள் பிரவேசித்தார். இருவரும் ஒருவரை ஒருவர் ஆத்மார்த்தமாகக் தழுவிக் கொண்டனர். பிறகு ஸ்ரீ பாவே தம் பூமிதான இயக்கத்தைப்பற்றிச் சொல்லிவிட்டு ஸ்ரீ ராஜேந்திர பிரஸாதைக் கேட்டார்: உங்கள் "ஜனாதிபதி வேலை எப்படி நடக்கிறது?" ஸ்ரீ பிரஸாத்தின் கண்களில் நீர் மல்கிற்று.

"நண்பரே, என் உத்தியோக பந்தங்களிலிருந்து என்னை விடுவிக்க உம்மால் முடியாதா? நானும் உங்களைப்போல் காந்தியத்தைப் பரப்புவதற்கு உதவிசெய்ய ஆசைப்படுகிறேன்" என்றார்.

ஸ்ரீ ராஜேந்திரப்பிரஸாதை அறிய இந்த ஒரு சம்பவமே போதுமானது. இந்தியாவிலேயே பெரிய பதவியான ஜனாதிபதி பதவி வகிக்கும் இவர் பெரிய காந்தீயவாதி. சாந்தமும் உண்மையில் அடக்கமும் குடி கொண்ட இவருக்கு அரசியலில் விரோதிகள் என்பதே கிடையாது. இதனாலேயே தான் இவரை ஜனாதிபதியாக நியமிக்க வேண்டும் என்று காங்கிரஸ் தீர்மானித்தது.

1946இல் தாற்காலிக மத்தியமந்திரிசபை ஸ்ரீ நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட பொழுது ராஜன்பாபு உணவு மந்திரியானார். ஆனால் தம் புகழுக்கு இணங்க 1949இல் ஸ்ரீ கிருபளானி ராஜினாமா செய்ததும் மறுபடியும் "நெருக்கடி அக்கிராசனர்" ஆனார். 1946ஆம் வருஷம் டிஸம்பர் மாதம் இந்திய அரசியல் சபை இவரைத் தன்நிரந்தர த்தலைவராகத் தேர்ந்தெடுத்தது மறுபடியும் 1949இல் இவரை இடைக்கால ஜனாதிபதியாகவும் தெரிந்தெடுத்து, நாட்டில் மிகவும் தூய்மையும் ஒழுக்கமும் உயர்ந்த குணமும் உள்ள சிலரைக் கௌரவித்தது.

ராஜன்பாபு எப்பேர்ப்பட்டவர்? மிகவும் சாந்தஸ்வருபி. கோபம் என்பதற்கும் இவருக்கும் வெகுதூரம்; அரசியல் நிர்ணய சபை இவரைத் தாற்காலிக அக்கிராசனராக நியமித்தபொழுது இவர் தம்முடைய சிறிய வீட்டைவிட்டுப் பிரும்மாண்டமான ராஷ்டிரபதி பவனுக்குச்செல்ல இஷ்டப்படவில்லை. காரணம் டாம்பீகம் இவருக்குப் பிடிக்காத வஸ்து. ஆனால் பந்தா, தோரணை முதலியவைகளைப் பெரிதும் கைப்பிடிக்கும் ஸ்ரீ நேரு அவரை வலுக்கட்டாயம் செய்து அங்கு ஜாகை ஏற்கும்படி செய்தார்.

ராஜன் பாபுவுக்குப் படாடோபத்தைக் கண்டால் எவ்வளவு பிடிக்காதோ அதே போல் வீண் கர்வம் என்றாலும் பிடிக்காது. ஜனாதிபதியான புதிதில் அவர் வெளிகாட்டி

விருந்து வரும் ஒரு ஸ்தானீகரை வரவேற்க விமான நிலையத்திற்குத் தாமே வந்துவிட்டார். ஸ்ரீ நேருவுக்கு இந்தச் செய்தி தெரிந்ததும், அவரும் நிலையத்திற்கு வந்து மறைமுகமாக ராஜன் பாபுவுக்கு அவர் செய்வது பந்தா இல்லை என்றும், அவர் பதவி மகா பெரியதென்றும், அவர் எந்த வெளிக் காரியத்திற்கும் அவருடைய ராணுவக் காரியதரிசியை அனுப்பவேண்டுமென றும் சொன்னார். ராஜன் பாபுவும் அரைகுறை இஷ்டத்துடன் பந்தாவுக்கு இணங்கி, ராஷ்டிரபதி பவனுக்குத் திரும்பினார்.

ராஜன் பாபுவின் மனம் எப்பேர்ப்பட்டது என்பது அவரை நன்கு அறிந்தவர்களுக்குத் தெரியும். பிறர் துக்கம் காணச் சகியாதவர். அகதிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட பரிதாபாத் (Faridabad) நகரத்திற்கு அவர் விஜயம் செய்தார். புரோகிராமின் கடைசியில் ஒரு மைதானத்தில் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்று நடந்தது. ஸ்ரீமதி ஆசாதேவி அரியநாயகம் ராம்தூன் நடத்தினர். மேடைக்கு முன்னால் இருந்த சில பெண்மணிகள் மெய் மறந்து கண்களில் கண்ணீர் மல்க, "ஈச்வர அல்லா தேரே நாம்" என்னும் அடியை சொல்லிக்கொண்டிருந்தனர். ராஜன் பாபுவும் தம் கண்களைத் துடைத்துக்கொண்டார். கூட்டம் முடிந்த பின்னர், ஏன் கண்களை துடைத்துக்கொண்டீர்களென்று அவரைக் கேட்டேன். "நாம் சுதந்திரம் அடைந்துவிட்டோம். எப்படி அடைந்தோம்? பல லக்ஷம் ஜனங்கள் தங்கள் பொருள், சுற்றத்தார் வீடு வாசல்களை இழந்த பிறகு. அதோ போகிறார்களே அந்தப் பெண்மணிகள்தான் இன்று மீண்டும் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பிக்கப் போகிறார்கள். எவ்வளவு கஷ்டப்பட்டுஇருப்பார்களோ, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். இருந்தும் எவ்வளவு நம்பிக்கை அவர்களிடம் குடிகொண்டு இருக்கிறது? நான் ஜனாதிபதிதான். அப்படியிருந்தும் ஒரு அகதிக்காவது நேரடியாக உடனடிஉதவி செய்ய முடியுமா? இதை நினைத்துத்தான் வருந்துகிறேன்" என்றார்.

ராஜன் பாபுவுக்கு அன்றுபோல் இன்றும் தம் கிராமத்திற்குச் சென்று எளிய வாழ்க்கை நடத்தவேண்டும் என்பதுதான் அவா. இதை அவர் ஒரு பேட்டியில் என்னிடம் சொன்னார். அவர் மனைவி ஸ்ரீமதி ராஜவன்ஷி தேவி பதிசேவையையே பெரிதாகக் கருதுபவர். அவர்களுக்கு மூன்று பிள்ளைகளும் பல பேரப் பிள்ளைகளும் உண்டு. ராஜன் பாபுவுக்குத் தம் பேரப்பிள்ளைகளுக்குக் கதை சொல்லி அவர்களுடன் பொழுது போக்குவதில் மிகவும்பிரியம்.

பெரிய சரித்திராசிரியரும் மேதாவியுமான அவருக்கு உள்ள மாபெரும் குறை என்னவென்றால் ஜனாதிபதி என்ற பதவியினால் தமிஷ்டப்படி நடக்க முடியவில்லை. "படிக்க முடிவதில்லை; எழுத முடியவில்லை. "மனிதனுக்கு வாழ்க்கையின் இறுதியிலாவது தன் பொழுது தன்னுடையது என்ற கட்டம் ஏற்படவேண்டும். அந்தச் சுதந்திரம் எனக்குக் கிட்டாதுபோல் இருக்கிறது" என்று ஆதங்கப்படுகிறார், ஸ்ரீ பிரஸாத்! காசநோய் உபாதை உள்ள ஸ்ரீ பிரஸாத் உடல் குணம்பெற்று, பல்லாண்டுகள் நாட்டுக்கு வழிகாட்டுவார் என்று பிரார்த்திப்போம.



டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

"இந்தியாவில் வகுப்புவாதத்தைக் குழி தோண்டிப் புதைப்பேன்" என்று மார்தட்டிய நேருஜி தம் காரியத்தை அகில இந்திய அளவில் செய்துமுடித்தார் என்றாலும் அவர் நினைத்த ஹிந்து முஸ்லிம் க்ஷாத்திரமும் துவேஷமும் மற்றொரு வேஷத்தில் இந்தியாவுக்கு மிகவும் முக்கியமான எல்லைப்புற மாகாணமான பெப்ஸுவில் (PEPSU) தலைதூக்கி யிருக்கின்றன. பெப்ஸுவில் தலைவிரித்தாடும் ஹிந்து—சீக்கிய அன்னியோன்ய மின்மையையே குறிப்பிடுகின்றேன்.

பெப்ஸு பாடியாலாவைத் தலைமையில் கொண்ட பழைய சமஸ்தானங்கள் அடங்கிய ஐக்கிய மாகாணம்; சர்தார் படேலின் அரிய சாதனைகளில் ஒன்று. பாடியாலா சீக்கியர்கள் பிரதானமாக உள்ள மாகாணம். அதன் மகாராஜா பெரிய கிரிக்கெட் முதலிய ஆட்டபாட்டங்களில் அக்கறை காட்டும் உயர்ந்த குணாளர். என்றாலும் மதம், சமூகம் என்று வந்துவிட்டால் எவ்வளவு உயர்ந்தவர்தான் தாழாமல் இருக்கிறார்? ஆகவே பாடியாலா மகாராஜாவைச் சீக்கியர்களின் மதவெறி ஸ்தாபனமான அகாலிதளம் அவர் ஒரு பக்ஷமாக இருக்க வேண்டும் என்று நம்பவைத்திருக்கிறது என்றால் மிகையாகாது.

சென்ற தேர்தலில் காங்கிரஸ் சில மாகாணங்களில் முதுகுகாட்ட நேரிட்டதல்லவா? பெப்ஸுவில் மதவெறி நிபுணர் மாஸ்டர் தாராஸிங் அதற்கு ஒரு பெரிய சவால் விடுத்தார். காங்கிரஸ் பொது ஜனங்கள் ஸ்தாபனம் என்றால் அது அந்த மாகாணத்தில் வெற்றிபெற்று மந்திரி சபை அமைக்கட்டும் பார்க்கலாம் என்றார். தேர்தல் சுற்றுப் பிரயாணத்தின்போது நேருஜி பாடியாலாவுக்கும் விஜயம் செய்தார். ஒரு பிரும்மாண்ட பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. அதில் நேருஜி பேசுகையில் அகாலிகள் (மதவெறி சீக்கியர்கள்) ஆர்ப்பாட்டம் செய்து, தங்களுக்குப் பஞ்சாபி பேசும் மாகாணம் வேண்டும் என்று கோஷம் செய்தார்கள். நேருஜி பொறுமையாக அவர்களிடம் சொன்னார். பாஷாவாரி மாகாணம் கொடுப்பதுபற்றிக் காங்கிரஸ் ஏற்கனவே ஒப்புக்கொண்டிருக்கிறது, இது பற்றிக் கிளர்ச்சி தேவையில்லை என்று.

நேருஜியின் தெளிவுபெற்ற உறுதிக்குப் பிறகும் அகாலிகள் கலாட்டா வலுக்கவே நேருஜி பொறுமையிழந்து சொன்னார்; எவ்வளவுதான் உங்கள் மாகாணப் பிரச்னை முக்கியம் என்றாலும் பெப்ஸு எல்லைப்புற மாகாணம்; ஆகவே பாஷையை அடிப்படையாகக்கொண்ட புது மாகாணம் நிறுவுவது பற்றி உங்களுக்கு மாத்திரம் அக்கறை இல்லை; இதில் இந்தியா பூராவுக்கும் பங்கு உண்டு.

நேருவின் பட்டவர்த்தனப் பேச்சிற்குப் பிறகு சீக்கியர்கள் பெரும்பாலும் அகாலித் தளத்திற்கும் ஹிந்துக்கள் காங்கிரஸிற்கும் வோட்டுக் கொடுத்தனர். பஞ்சாபில் சீக்கியர் வகுப்புவாதம் மண்ணைக் கவ்வியது என்றாலும் அது பெப்ஸுவில் ஓரளவு வெற்றி பெற்றது. ஆனால் ஆக்கப் பொறுத்தவருக்கு ஆறப் பொறுக்கவில்லை. அகாலிகள் வகையராவுக்கு 30 ஸ்தானங்களும் காங்கிரஸுக்கு 30 ஸ்தானங்களும் கிடைத்தன. அகாலிகள் சர்க்கார் அமைக்க இடம் கொடுக்கக்கூடாது என்றும் காங்கிரஸே சர்க்கார் அமைக்கவேண்டும் என்றும் சில காங்கிரஸ்காரர்கள் வாதாடினார்கள். நேருஜி காங்கிரஸுக்குச் சந்தேகமில்லாமல் பலம் இருந்தால் ஒழியச் சர்க்கார் அமைக்க முயற்சிகூட செய்யக்கூடாது என்று கக்ஷியாடினார். ஆனால் ஆத்திரம் மிகுந்த பாடியாலா காங்கிரஸ் முந்திரிக்கொட்டைகள் தங்கள் கக்ஷியைச் சாதித்துக்கொண்டன.

ஈயத்தைக்கண்டு இளித்ததாம் பித்தளை என்பார்களே அதுபோல் பாடியாலா காங்கிரஸ்காரர்கள் சென்னையில் வலுவற்ற காங்கிரஸுக்கு ராஜாஜியின் தலைமையில் வலுவிலே மற்றக் கக்ஷிகளின் ஆதரவு கிடைப்பதுபோல் தங்களுக்கும் வெகு சில மெம்பர்கள் ஆதரவு கிடைக்கும் என்று பகற்கனவு கண்டு மந்திரிசபை அமைத்து

அசெம்பிளியையும் கூட்டினார்கள். பிரதமர் கர்னல் ரகுபீர்ஸிங் மிகவும் வெகுளி. சற்றும் எதிர்பாராத விதமாக அவர் மந்திரி சபையில் இருந்த உதவிமந்திரி ஸ்ரீ கஹன் ஸிங் என்னும் ஹிந்து நாலுமூலைத்தாச்சி விளையாடி எதிர் கக்ஷியில் சேர்ந்து, சபாபதி வேலையையும் பிடித்துக்கொண்டார். மற்றும் இரு மெம்பர்கள் எதிர்தரப்பில் சேர்ந்து இப்பொழுது ஐக்கிய முன்னணி சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது.

ஸ்ரீ கியானிஸிங் ராரேவாலா எவ்வளவு வேஷம் போட்டாலும் அவர் அகாலி அகாலியே. ஆகவே தம் ஆத்திரத்தால் நிலைக்கும்படி சர்க்கார் ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தைக் காங்கிரஸ் நழுவவிட்டது. ஐக்கிய முன்னணி சர்க்காரும் எந்தச் சமயமும் கவிழலாம்; ஏனென்றால் பெப்ஸூவில் ராஜீய வட்டாரத்தில் வியவஸ்தை கிடையாது. ஆறு மாதங்களுக்குள் ஜனாதிபதி ஆட்சியும் நிலவலாம். ஆனால் ஒரு புதரகவகுப்புவாதம் தலைதூக்கி யிருப்பதுபற்றி யாரும் சந்தேகம் கூறமுடியாது. இந்த நிலை மிகவும் வருந்தத்தக்கது. ஏனென்றால் ஆராய்ந்து பார்த்தால் சீக்கியர்கள் ஹிந்துக்களிலிருந்து பிரிந்து ஆவேசத்தில் ஒரு மதத்தை ஸ்தாபித்து, முஸ்லீம் கொட்டத்தை அடக்கினவர்கள். தேசப் பிரிவினையின்போது ஹிந்துக்களுடன் தோளுக்குத்தோள் நின்று முஸ்லிம் அட்டூழியங்களை மேற்குப் பஞ்சாபில் சகித்தவர்கள். அந்தச் சமூகத்துக்கும் ஹிந்து சமூகத்துக்கும் இடையே துவேஷம் தோன்றினால் அது வருந்தத் தக்க விஷயம்.

* * *

பிரதமர் நேருவுக்கு உள்ள பல தலைவலிகளில் காஷ்மீர் மிகவும் கடுமையானது. சென்ற இரண்டு வாரங்களில் இது மண்டையிடியாகி, குட்டை குழப்பி வருகிறது. இப்பொழுது சிக்கல் ஐக்கிய நாட்டுப் பாதுகாப்புச் சபையிலிருந்து வரவில்லை. காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லாவிடமிருந்தே வருகிறது.

ஷேக் சாகிப் சென்ற இரண்டு வாரங்களுக்குமுள் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் சொன்னார்: இந்தியாவுடன் காஷ்மீர் கொண்டிருக்கும் தொடர்பு மூன்று விஷயங்களுக்கு மட்டுமே செல்லும்; அதாவது நிதி, பாதுகாப்பு, போக்குவரத்து. இது பற்றியும் இறுதியில் முடிவுசெய்யும் ஸ்தாபனம் காஷ்மீர் நிர்ணய சபையே. காஷ்மீர் இந்தியாவுடன் ஒருவரைக்குள் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமா அல்லது பூரண தொடர்புகொண்டு ஐக்கியம் ஆகவேண்டுமா அல்லது சுயேச்சையாக இருக்கவேண்டுமா என்பது வருங்காலத்தில் நிர்ணயசபை முடிவு செய்யும்.

இதற்குக் காரணமும் ஷேக் சாகிப் சொன்னார்: இந்தியாவில் வகுப்புவாதம் இன்னும் குழிதோண்டிப் புதைக்கப்படவில்லையாம். நேருஜி இருக்கும்வரை சரிதான். அவருக்கு ஏதாவது நேர்ந்தால், பிறகு முஸ்லிம் பெரும்பான்மையான காஷ்மீருக்கு என்ன நேரும்? காஷ்மீர் மதப்பற்று இல்லாத சமுதாயம் அமைப்பதில் ஈடுபட்டிருப்பதால் இந்தியாவில் நடக்கும் எந்த வியவகாரத்திலும் காஷ்மீருக்குப் பங்கு உண்டு.

ஷேக் சாகிப் இத்துடன் நின்றிருந்தால் சரி. ஆனால் பிறகு செய்த இரண்டு பிரசங்கங்களில் தம் அபிப்பிராயத்தை ஊர்ஜிதம் செய்ததுடன், இந்தியாவில் உள்ளவர்கள் காஷ்மீரைப்பற்றிப் பேசும்பொழுது ஜாக்கிரதையாகப் பேசும்படியும் எச்சரித்திருக்கிறார்.

ஸ்ரீ அப்துல்லாவின் சமீபத்திய நடத்தை இந்தியாவெங்கும் மிகவும் கொந்தளிப்பை உண்டாக்கியிருக்கிறது. 'காஷ்மீர் சுதந்திர கோலமபோடுவதற்காகத்தானா இந்திய சிப்பாய்களின் ரத்தம் சென்ற நான்கு வருஷங்களாக அங்கு ஓடியிருக்கிறது? இந்தியப் பணம் கோடி கோடியாக வாரி இறைக்கப் படுகிறது? சமயோசிதமாக நடப்பவர் தானே ஸ்ரீ அப்துல்லா! இவர் யார் நீ வகுப்புவாதி என்று இந்தியாவைப் பார்த்துச் சொல்வதற்கு?' என்றெல்லாம் பல பிரமுகர்கள் கேட்டிருக்கிறார்கள். ஸுப்ரீம் கோர்ட்டில் மிகவும் உயர்ந்த பதவி வகிக்கும் பாரபட்சமற்ற நீதிபதி அவர்கள்கூட 'ஸ்ரீ அப்துல்லா பழைய வாக்குகளை மறந்து பழைய ஒப்பந்தங்களை மீறிப் பேசுகிறார். இதை அவசியம் அவருக்குத் தெளிவாக எடுத்து உரைக்கவேண்டும்' என்று எனக்கு ஒரு பேட்டியில் சொன்னார்.

இந்திய சர்க்கார் சார்பில் காஷ்மீர் இந்தியாவுடன் பூரணமாகச் சேர்வதுபற்றிப் பேச்சு வார்த்தை நடத்த ஸ்ரீ கோபால ஸ்வாமி அய்யங்கார் அனுப்பப்பட்டதை அப்துல்லா விரும்பவில்லையாம். இது ஒரு காரணம். மற்றும் ஒரு காரணம் கூறப்படுவது என்னவென்றால், காஷ்மீர் தற்

பொழுது இந்தியா பாகிஸ்தான் பிரச்னை இல்லை, உலகப் பிரச்னையாகிவிட்டது. ஆகையால் ஸ்ரீ அப்துல்லா இந்த வேஷம் போடுகிறார். காஷ்மீர் எப்படித் தனித்து நிற்கும். சுதந்திர நாட்டுக்கு அடையாளம், சுதந்திர அயல்நாட்டுக் கொள்கை, போக்கு வரத்துச் சுதந்திரம், தனி ராணுவம். முதல் இரண்டையும் காஷ்மீர் இந்தியாவின கையில் ஒப்படைத்துவிட்டது. காஷ்மீர் ராணுவம் இந்திய ராணுவத்துடன் ஐக்கியமாகிவிட்டது. ஆகவே காஷ்மீர் சுதந்திரநாடாக இருப்பது பேச்சு ஜம்பத்தைத் தவிர வேறு இல்லை என்று டில்லி வட்டாரங்களில் கருதுகிறார்கள்.

பிரஜாபரிஷத் என்பது ஹிந்துக்கள் ஸ்தாபனம். அதன் தலைவர் ஸ்ரீ பிரேம்நாத் டோக்ரா, காஷ்மீர், மன்னர் ஆட்சியில் இருந்த காலத்தில் டெபுடி கமிஷனராயிருந்தவர். இவருக்கும் ஸ்ரீ அப்துல்லாவுக்கும் சஷ்டாஷ்டகம். ஸ்ரீ டோக்ரா அவர்கள் சென்ற மூன்று வருஷங்களாக்ககதறும் விஷயம் என்னவென்றால், ஸ்ரீ அப்துல்லாவைத் தவிர அவர் மனைவி உள்பட யாவரும் பாகிஸ்தான் அனுதாபிகள்; ஆகவே பொது ஜன வோட்டெடுப்பு என்று வந்தால் ஸ்ரீ அப்துல்லாவின் சகபாடிகள் இந்தியாவிற்கு விரோதமாக வேலை செய்வார்கள். ஸ்ரீ டோக்ராவின் அபிப்பிராயம் சிறிது மிகையானது என்றாலும் அவர் கூறுவதில் சிறிது உண்மை இல்லாமல் இல்லை. ஹைதராபாத்துக்கு இல்லாத விசேஷ அந்தஸ்து காஷ்மீருக்கு என்ன என்று கேட்கிறார் ஸ்ரீ டோக்ரா.

மொத்தத்தில் ஸ்ரீ அப்துல்லாவின் பிரசங்கம் மிகவும் அநுசிதமானது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். மிகவும் ஒதுங்கி நின்று நின்று ஸ்ரீ நேரு அப்துல்லாவை ஒரு குட்டிப் பிரும்மராக்ஷஸாகச் செய்துவிட்டார். வேதாளம் முருங்கைமரத்தை உடைத்தது போல ஸ்ரீ அப்துல்லாவின் செயல்கள் இந்திய-காஷ்மீர் நல்லுறவை அறுத்துவிடும் போல் இருக்கிறது. ஆகவே விஷயம் முற்றுவதற்குமுன் நேருஜி அப்துல்லாவை அழைத்து விஷயத்தைப் பட்டவர்த்தனமாக உடைத்துச் சொல்லி, அவரை ஒரு வரம்புக்குள் இருக்கும்படி சொல்வது நல்லது. இவ்வளவு வருஷங்கள் பொது ஜனங்களும் பத்திரிகைகளும் ஸ்ரீ அப்துல்லாவை முழு மனதுடன் ஆதரித்ததுபோல் ஆதரிக்கவேண்டும் என்றால் அவர் தாம் சர்வ வல்லமையுள்ள கடவுள், தாம் சொல்வதை யாரும் மறுபேச்சுச் சொல்லாமல் சிரவணம் செய்ய வேண்டும் என்னும் மனப்பான்மையைக் கைவிடவேண்டும்.

* * *

டில்லியில் தேர்தல் கூட்டங்களில் சுயேச்சை அபேக்ஷகர்கள் "ஸ்ரீ காமத்தைப் பாருங்கள். அவர் சுயேச்சையாகத் தம் இஷ்டப்படி பேசாமல் இருந்திருந்தால் சர்க்கார் ஊழல்கள் அம்பலத்துக்கு வருமா?" என்று கேட்பது வழக்கம்- ஆனால் ஒளவையார்வாக்கை வேறுவிதமாகத் திருப்பினால், "தெரிந்த ஊழல்கள் கையளவு; தெரியாதது உலகளவு" என்றே சொல்ல வேண்டும்.

மிகவும் நிர்வாக அனுபவம் உள்ள ஒரு உத்தியோகஸ்தர் சொன்னார்: காங்கிரஸ்காரர்கள் நிர்வாகமா செய்கிறார்கள்? குருடன் குருடனுக்கு வழிகாட்டியதுபோல் தட்டித் தடவிச் செல்கிறார்கள். வழிநெடுகத் தவறுதல்கள் செய்கிறார்கள். தேசம் சுதந்திரம் பெற்ற பிறகு காங்கிரஸ் சர்க்கார் வகுத்த திட்டங்கள் குறை இல்லாதவை. தவறுதல்கள் இல்லாதவை என்பதே கிடையாது. ஸ்ரீ கித்வாய் அவர்கள் ஒருவர்தான் தபால் தந்தி இலாகாவைச் சீர்திருத்தியதுடன் பல பொதுஜன நலன்கள் உள்ள திட்டங்களையும் செய்தார். அவைகளுள் ஒன்று "எங்கும் விமானத் தபால்" என்னும் திட்டம். இதற்கு மாறாக ஸ்ரீ அமிர்தகௌரி இலாகா செய்ததில் உருவானது என்ன? ஒன்றுகூடக் கிடையாது. "ரெடிமேட்" வீடுகள் கட்ட 80 லக்ஷம் ரூபாய் செலவில் டில்லியில் தொழிற்சாலை நிர்மாணம் செய்தார். அது எதற்குமே உபயோகம் இல்லாமல் போய்விட்டது. அகதிகளுக்கு என்று ஒவ்வொன்றும் ரூ 800 செலவில் ஸ்வீடனில் தயார் செய்த ஸ்பெஷல் சாமானால் தயாரிக்கப்பட்ட கடைகள் 600-க்குமேல் கட்டினார். அவை மழை இடி நெருப்பு எதற்கும் அசையாது என்று பார்லிமெண்டில் பெருமையடித்துக் கொண்டார் நம் மாபெரும் சுகாதார மந்திரி. ஒரு சிறு மழையில் பாதி கடைகளின் கூரைகள் ஊறி, கீழே தொங்கின. டெல்லியில் கோடையில் தினம் எங்காவது நெருப்புப் பிடிப்பது வழக்கம். இந்தக் கடைகளில் கால் பங்கு சென்ற இரண்டுவருஷங்களில் நெருப்பில் எரிந்திருக்கின்றன.



Agent T. T. KRISHNAMACHARI & Co, 12 A, Linghi Chetty Street, G. T. MADRAS.

ஸ்ரீ காட்கில் அவர்களின், சுரங்கங்கள் இலாகாவைப்பற்றியோ கேட்கவேண்டியதில்லை, தாமோதர் பள்ளத்தாக்கு, கார்ப்பொரேஷன் ஊழல் உலகப்பிரசித்தம். இவைகள் தெரிந்த ஊழல்கள். தெரியாத ஊழல்கள் அனந்தம். இதில் விசேஷம் என்னவென்றால் இவைகளைச் சீர்திருத்தும் முறையில் நேருஜி பேசுவதில்லை. பார்லிமெண்டில் இதைப்பற்றிப் பேச்சு வரும்பொழுதெல்லாம், "நாங்கள் அப்படித்தான் செய்வோம். நீங்கள் யார் கேட்பதற்கு?" என்னும் பாணியில் பேசிவந்திருக்கிறார்.

இவைகளைப்பற்றி எதற்குச் சொல்லவந்தேன் என்றால் டில்லியில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் பலர் காந்திஜி கூட இருந்தவர்கள் ஆதலால் தாங்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற மனப்பான்மை அவர்களுக்கு உண்டு. அப்படிப்பட்டவர்களில் ஸ்ரீ அமிர்தகௌரி ஒருவர். மற்றொருவர் ஸ்ரீ சுதீர்கோஷ். காந்திஜியின் நிழல் போல் இருந்து அவருக்கு இரண்டாம் காரியதரிசியாக இருந்திருக்கிறார். தேசப்பிரிவினைக்குப் பிறகு அகதிகளுக்குப் பிழைக்க வழியும், குந்த நிழலும் கிடைக்க, சில அகதி நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டன. அவைகளுள் ஒன்று பரீதாபாத் (FARIDABAD). இது உண்மையிலேயே அகதிகளின் உழைப்பால் அகதிகளின் ஒத்துழைப்புடன் அகதிகளுக்காக மத்திய சர்க்காரின் இரண்டு கோடி ரூபாய் கடன் ஈடுமூலம் கட்டப்பட்ட நகரம். டில்லிக்கு 45 மைலுக்கு அப்பால் உள்ளது. நிலம் சுவீகரிப்பதிலிருந்து அந்த நகரம் கட்டிமுடிக்கும் வரை ஸ்ரீ சுதீர் கோஷ் அவர்களே கொள்கை, நிதி, கட்டுப்பாடு எல்லாவற்றையும் கவனித்து வந்திருக்கிறார். எவ்வளவுதான் மனிதர் தங்கம் என்றாலும் ரூபாய், அணா, பைசா மூலம்தானே அவரை எடை போடமுடியும்? கணக்கு ஆடிட் செய்யும்பொழுது ஒன்றரை லக்ஷம் ரூபாய்க்குமேல் துண்டுவிழுந்தது. அதற்கு விவரம் கொடுக்கும்படி கேட்டும் ஸ்ரீகோஷ் அசைந்து கொடுக்கவில்லை. அதற்குமேல் ஆடிட்டர்கள் அகதி புனருத்தாரண இலாகா மந்திரி ஸ்ரீ அஜித் பிரஸாத் ஜெயினுக்குத் தெரிவித்தார்கள். ஸ்ரீ ஜெயின் "மயிலே மயிலே இறகு போடு" என்று கொஞ்சிவிட்டு, "கணக்கைக் கீழே வைக்கிறீரா, ஓய், அல்லது போலீஸுக்குத் தெரிவிக்கட்டுமா?" என்றார். இது மேலும் பகிரங்கமாகி, அசிங்கமாய் விடப்போகிறது என்று பிடுங்கித் தின்றதை ஏழை வரி கொடுப்பவன் தலையில் வைத்துவிட்டு, ஸ்ரீ கோஷை ராஜினாமா செய்யச்சொன்னார்கள் சர்க்கார் மந்திரிகள். ஸ்ரீ கோஷ் வேண்டிக்கொண்டதும் அதுதான். ஏதோ தேசியத் தியாகம் செய்தவர்போல் அவர் அமெரிக்காவுக்குத் தம் செலவில் அமெரிக்கா இந்தியாவுக்குத் தன உதவி கொடுப்பதுபற்றிச் சாக்ஷியம் கொடுக்கப் போகிறாராம்! எப்படி இருக்கிறது நியாயம்?

சர்வதேசக் குழந்தைகள் பராமரிப்பு சங்கத் தலைவரான ஸ்ரீ டேவிஸ் சொன்னார்: காந்திஜி மகான்; அவருடைய விசுவரூபம் யாரும் எடுக்கமுடியாது. ஆனால் அவர் வாழ்நாளில் ஒரு தவறு செய்துவிட்டார் என்றே நம்புகிறேன். அரைப் படிப்பு முந்திரிக்கொட்டைகளை தம்முடன் வைத்துக்கொண்டு அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது தவறு. குறிப்பாக ஸ்ரீ அமிர்த கௌரி, ஸ்ரீ சுதீர்கோஷ், ஸ்ரீ சுசீலா நய்யார் இவர்களுக்குத் தங்களைப்பற்றிய அபிப்பிராயம் மிகப் பிரமாதம்.

ஸ்ரீ டேவிஸ் மிகவும் அனுபவப்பட்ட பிறகு இதைச் சொல்லுகிறார். காந்திஜியுடன் கூட இருந்தவர்களுக்கு அடக்கமோ பொறுமையோ அல்லது ஆக்கல் சக்தியோ இல்லாதது ஆச்சர்யமே, அதற்கு மாறாக இறுமாப்பும் மமதையும் குடிகொண்டிருப்பதாலேயே காந்திஜியின் சிஷ்யர்கள் என்றாலே யாரும் இங்கே காததூரம் ஓடத் தயார். இதற்குச் சிகரம்வைப்பது ஸ்ரீ சுதீர் கோஷ் காண்டம்.

* * *

இந்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பலருக்குச் சீட்டுக் கிடைக்கிறது. சிலருக்கு உத்தியோகத்திலிருந்து தாற்காலிக நிறுத்தம் கிடைக்கிறது. அகில இந்திய ரேடியோ டைரெக்டர் ஜெனரல் ஸ்ரீ லக்ஷ்மணன் "ஸஸ்பெண்ட்" செய்யப்பட்டதில் கொஞ்சம் பரபரப்பு ஏற்பட்டிருப்பதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை.

அகில இந்திய ரேடியோ ஸ்தாபனம் ஒரு மகா சமுத்திரம். இந்தியா பூராவும் உள்ள நிலயங்களை நிர்வாகம் செய்யும் இலாக்காக்களும், செய்தி ஸ்தாபனமும், வெளிநாட்டு ஒலிபரப்பு ஸ்தாபனங்களும் "பிராட் காஸ்டிங் ஹௌஸ்" என்னும் தனிக் கட்டிடத்தில் இருக்கின்றன. ரேடியோவை விஸ்தரித்து, அவைகளில் எவ்வளவு பஞ்சாப் முஸ்லீம்களை புகுத்த முடியுமோ அவ்வள

வையும் செய்த ஸ்ரீ ஏ. எஸ். பொகாரி மற்றொரு அரிய கைங்கர்யமும் செய்தார். சர்க்கார் உத்தியோகங்களுக்கு நியமனம் செய்ய ஸர்வீஸ் கமிஷன் ஒன்று உண்டு. ஸ்ரீ பொகாரி இருந்தவரை இந்தக் கமிஷன் பொறுக்கிய ஆட்களை உள்ளே கூடுமான வரை வராமல் பார்த்து வரும் பொறுப்பை வகித்து வந்தார். டில்லி டெலிபோன் டைரக்டரியைத் திறந்தால் அகில இந்திய ரேடியோவின்கீழ் 168 டெலிபோன்களும் ஏறக்குறைய அவ்வளவு முக்கியத்துவம் உள்ள சிப்பந்திகளும் இருக்கும். சர்க்காரில் சிக்கனம் என்னும் கூச்சல் கிளம்பும் பொழுதெல்லாம் டைரக்டர் ஜெனரல் 4 பியூன்கள், இரண்டு டைபிஸ்ட்கள், ஒரு குமாஸ்தாவை நீக்கத் திட்டம் காண்பித்து விட்டு, இரண்டு புது டைரக்டர்கள், நான்கு உதவி டைரக்டர்கள், ஆறு புரோகிராம் அஸிஸ்டண்டுகள் வகையராவுக்கு அடிபோட்டு அதற்கு அனுமதியும் வாங்கி விடுவார். ரேடியோவில் வேலை உள்ளவர்களுக்கு மிகவும் வேலை உண்டு. வேலை இல்லாமல் வேலை உள்ளவர்களுக்கு பொழுது போக்குவது பெரிய காரியம். அவசியம் அனாவசியம் என்பது அகில இந்திய ரேடியோவில் கிடையாது. இல்லாவிட்டால் வெளி நாட்டு இலாகாவுக்கு என்று ஒரு கர்நாடக சங்கீத டைரக்டரை மாதம் ரூபாய் 1000 சம்பளத்தில் நியமிப்பார்களா? அதுவும் தென்னிந்தியாவில் ஊர் பேர் தெரியாத ஒரு மகா வித்வான் ஸ்ரீ டி. கே. ஜெயராமய்யரை!

ஸ்ரீ லக்ஷ்மணன் பேரில் உள்ள குற்றச்சாட்டுகள் மிகவும் ரகசியம்! இவை ஸ்ரீ சௌத்ரி (செய்தி இலாகா செகரடரி) ஸ்ரீ வி. பி. ராவ் இவர்களுக்குத் தான் தெரியும். ஆனால் குற்றச்சாட்டுகள் என்ன என்று சொல்லுகிறேன். ஒன்று, சர்க்கார் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியவில்லை என்பது. இரண்டு, ரேடியோவுக்கு கருவிகள் சாதனங்கள் சப்ளையில் சர்க்கார் விதிகளை அனுசரிக்காதது. மூன்றாவது, தேசத்துக்குக் குந்தகம் ஏற்படும் முறையில் செய்திகள், ரகசியங்களைப் பாகிஸ்தான் முதலிய தேசங்களுக்குக் கொடுத்தது.

முதல் இரண்டும் குற்றச் சாட்டுகளே இல்லை. அவைகளை எந்த செகரடரி மேலும் பிரயோகிக்கலாம். மூன்றாவது குற்றச்சாட்டை ஸ்ரீ லக்ஷ்மணனுக்கு மனைவி பிரஞ்சு தேசத்தவர் என்பதால் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை ருஜுப்பிப்பது இயலாத காரியம்.

உண்மையில், ஸ்ரீ லக்ஷ்மணனைப் பொக்கையில் கொண்டு வைத்ததற்குக் காரணம் வட இந்திய—தென்னிந்திய மாத்சர்யம் முக்கியமானது. ஸ்ரீ வி. பி. ராவ் சூழ்ச்சி செய்வதில் சாணக்கியர் என்பது பிரசித்தம். ஆகவே இந்த லக்ஷ்மணன் படலம் உள்ளூர மர்மமானது. இருந்தாலும் ஸ்ரீ லக்ஷ்மணனும் தம்முடைய முக்கால் கிணறு தாண்டும் சூரத்தனத்தால் ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். ஓர் அதிகாரியை ஸஸ்பெண்டு செய்ய உள்நாட்டு இலாகாவின் அனுமதி வேண்டும். இதை வாங்கவில்லை என்பதிலிருந்தே பூசணிக்காய் திருடன் யார் என்பது வெளிப்படுகிறது. இருந்தாலும் இந்தப் படலத்திலிருந்து ரேடியே ஊழல்கள் வெளிப்பட்டு அதற்கு நிவர்த்தி கிடைத்தால் நான் தலைகீழாக நடக்கத் தயார்.

* * *

இலங்கை வாழ் இந்தியர்களின் வோட்டுரிமைக் கிளர்ச்சி இங்கு மிகவும் திகைப்பை விளைவித்திருக்கிறது. இலங்கைசர்க்கார் இலங்கையைப் பாலும் தேனும் ஓடும் நாடாகச் செய்யும்வரை இலங்கையில் இந்தியப் பாட்டாளிகளையும் அவர்களின் உழைப்பையும் விரும்பினார்கள். இப்பொழுது அத்தேசத்தைத் தாய்நாடாகக் கொண்டவர்களுக்குப் பிரஜா உரிமைகொடுக்க மறுத்ததற்குப் பிறகு வரும் தேர்தலில் பழைய வோட்டர்கள் ஜாபிதாவில் இருந்த இந்தியர்களுக்குக்கூட வோட்டுரிமையைப் பறிமுதல் செய்வது பெருத்த மோசடி என்று எவ்விதச் சந்தேகமும் இன்றிக் கருதப்படுகிறது.

இந்திய சர்க்கார் தங்கள் ஹை கமிஷனர் மூலம் எவ்வளவு தூரம் நல்ல வார்த்தைகள் சொல்ல முடியுமோ அவ்வளவும் சொல்லி, தாஜா செய்து பார்த்து விட்டார்கள். ஆனால் ஸ்ரீ டட்லி ஸேனநாயகா கிளைக்குக் கிளை தாவி உச்சாணியில் உட்கார்ந்து "உர்ர்" என்பதிலிருந்து சமாதான முறையில் ஒரு வழியும் பிறக்காது என்பது தெளிவாகிவிட்டது. இந்தியர்கள் வோட்டு, தங்களைப் பாதிக்கும் என்றே ஐக்கியதேசியக் கக்ஷியார் இந்தப் பெரிய சூழ்ச்சி செய்திருக்கிறார்கள் என்று இந்திய அரசியல் வட்டாரங்களில் கருதுகிறார்கள்.

நல்ல நாளிலேயே நாழிப்பால் கறக்கும் பிரிட்டிஷ் சர்க்கார் தற்பொழுது கட்டுப்பெட்டி டோரிகள் வசம் இருப்பதால் அவர்கள் ஆப்பிரிக்காவில் மலானை ஆதரித்து அவர் பூட்ஸை நக்குவதுபோல் இலங்கை ஹிட்லர் ஸ்ரீ ஸேனநாயகாவுக்குச் சாமரம் போடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, காந்தியடிகளின் மார்க்கத்தைப்பின்பற்றி, சத்தியாகிரகம் செய்வது என்று தீர்மானம் செய்த இலங்கை இந்தியர்கள் வெற்றி பெறவேண்டும் என்று இங்கு டில்லி அரசியல் வட்டாரங்கள் பிரார்த்திப்பதுடன் விஷயம் முற்றுமுன் ஒரு சமரசத்திற்கு வர இலங்கைச் சர்க்காருக்கு நல்ல புத்தி வரவேண்டும் என்றும் வேண்டுகிறார்கள்.

ஜெமினி என்றாலே அவர்கள் எடுத்தது உயர்தரப்படம் என்று ஜனங்கள் பொதுவாக எதிர்பார்ப்பது இங்கும் சகஜம் ஆகிவிட்டது. ஆணித்தரமான படங்களை செலவைப்பற்றிய லக்ஷியம் இல்லாமல் எடுப்பவர்களுக்குத் தமிழ் மார்க்கெட் மட்டும் போதாது என்று ஹிந்தியிலும் எடுக்க வழி காட்டியவர் ஸ்ரீ எஸ். எஸ். வாசன். ஜெமினியின் "சந்திரலேகா" "நிஷான்" (அபூர்வ சகோதரர்கள்) போன்ற படங்களுக்கு இங்கு எங்கும் எப்பொழுதும் கிராக்கி உண்டு. அவர்களின் "ஸனஸார்" (சம்சாரம்) இது வரை எந்த ஹிந்திப்படத்துக்கும் கிட்டாத வெள்ளி விழா வெற்றியை வடஇந்திய நகரங்களான லக்னௌ, கான்பூர் இரு இடங்களிலும் அளித்திருக்கிறது.

தென்னிந்திய படம் பிடிப்பவர் என்றாலே வழியில் முட்டுக் கட்டைகள் அதிகம். அதிலும் ஜெமினியின் பெரும் போக்கான விளம்பர முறைகள் மற்றவர்களின் அசூயையைக் கிளப்பிவிட்டிருக்கின்றன. ஆகவே அவர்களின் விளம்பரத்தைக் குறைக்கவே படம் வினியோகிப்பவர்கள் சங்கத்தில் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இவ்வளவுதான் உயர்ந்த அளவு விளம்பரம் செய்யலாம் என்று கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் படத்தின் உண்மை உயர்வைத் தடுக்க இயலுமா?

அவர்கள் வெள்ளி விழாவைக் கொண்டாட ஜெமினியார் "ஸன்ஸார்" படத்தை வெள்ளி விழா வரை ஓட்டிய பட முதலாளிகளுக்குச் சமீபத்தில் பரிசுகள் வழங்கினார்கள். கான்பூர், லக்னௌ தியேட்டர் முதலாளிகளுக்கும் டில்லியில் படம் வினியோகிக்கும் ஸ்ரீ ஜெகத் நாராயணலால் அவர்களுக்கும் மிகவும் உயர்ந்த கோப்பைகளும் ஜெமினியின் சின்னமான இரு குழந்தைகள் வாத்தியம் முழங்குவது போல் வெள்ளியில் செதுக்கப்பட்ட ஷீல்டும் (Shield) அளிக்கப்பட்டன.

டில்லியின் கமிஷனர் (Chief Commissioner) ஸ்ரீ சங்கர் பிரஸாத் பழைய ஐ. ஸி. எஸ். புள்ளி, மிகவும் வாக்குச் சாமர்த்தியம் உள்ள ஜாம்பவான். விழாவில் தலைமை வகித்து அவர் பேசுகையில் கூறினார். நான் படம் பார்ப்பதே அபூர்வம். அப்படிப் பார்க்கச் சென்றாலும் என் அதிர்ஷ்டம் மிகவும் மோசமான படமாக இருக்கும். ஆகவே "ஸம்ஸாரம்" என் அதிர்ஷ்டத்திற்கு முற்றிலும் மாறாக இருந்தது. இந்தப் படத்தின் வெற்றிக்குக் காரணம் படத்தின் உயர்தர அம்சங்கள் தவிர, ஜனங்களின் மனதையும் அவைகள் கவர்ந்திருக்க வேண்டும்.

ஸ்ரீ சங்கர் பிரஸாத் வெளிநாட்டுப் படங்களைப்பற்றிப் பேசிவிட்டு இதாலியப் படமான "சைக்கிள் திருடனை"ப்பற்றி மறைமுகமாக குறிப்பிட்டுச் சொன்னார். ஒரு காலத்தில் படங்கள் புராணங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. பிறகு சரித்திரக் கதைகள் வந்தன. இப்பொழுது பையன்—பெண் காதல் கதைப் படங்கள் மலிந்திருக்கின்றன, நம் படங்கள் வருங்காலத்தில் பாட்டாளிகளின் வாழ்க்கையைத் தழுவியதாகவும் வாழ்க்கையின் பல இன்னல்கள், சந்தோஷங்கள் முதலியவைகளையும் தத்ரூபமாகப் பிரதிபலிக்கவேண்டும்"

ஜெமினி சார்பில் பதிலளித்த விளம்பர டைரக்டர் ஸ்ரீ வி. கே. என். சாரி ஒரு மிகவும் மறக்கப்பட்ட விஷயத்தை அலசிப் பேசினார். கொட்டகை முதலாளிகள் பொது ஜனங்களைக் கறக்கும் பசுக்களாக மட்டும் மதிக்கக்கூடாது. அவர்களுடன் நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டும். கொட்டகைகள் பகல் பூராவும் காலியாகத்தானே இருக்கின்றன! அப்பொழுது அவைகளை ஜனங்கள் இலவச வாசகசாலையாக ஏன் மாற்றக்கூடாது? இந்த விஷயதானம் மிகவும் ஜனங்கள் மனதைக் கவர்ந்ததுடன் இது பற்றிய சர்ச்சை சில கொட்டகைச் சொந்தக்காரர்களிடையே நடந்தும் வருகிறது.

ஜெமினியின் அமோகப் புகழ்கொண்ட "மிஸ் மாலினி" ஹிந்தியிலும் வெளிவரப் போகிறது என்ற வதந்தி வெளியானதிலிருந்து தென்னிந்தியப் பத்திரிகையாளர்கள் இந்தியா காப்பி ஹௌஸில் (India Coffee House) அதைப்பற்றி வட இந்திய நிருபர்களிடையே பெருமையடித்துக் கொள்வது அந்தப்படம் எப்படி இருக்கும என்ற ஆவலை இங்கு உண்டாக்கி யிருக்கிறது.

ஆசையும் விவேகமும்

ஏ.எஸ்.ராகவன்

இரவின் அமைதி அவனை ஆகர்ஷிக்கவில்லை. வானத்திலிருந்து பறந்து வந்து மண்ணுலகை அணைக்கும் தளிர்க் கதிர்களில் அவன் மனம் லயிக்கவில்லை. மேலே ஆகாயத்தில் வெளிறிய சந்திரன் கடமையை மட்டும் மனதில் கொண்டு, தீராத ஏக்கத்தின் பிரதிபிம்பமாக ஊர்வதுபோல அவனுக்குப்பட்டது.

அருகிலிருந்த பாறைமீது அமர்ந்து அவன் யோசித்தான். ஏமாற்றமும் கோபமும் அவனை வாட்டின. ஏதோ ஒரு வேகம் அவனை உந்தியது. அதற்குப் பின்னணிபோல நிராசை என்ற அருவம் அவனுள் 'புஸ்' என்று இரைந்துகொண்டே இருந்தது.

கூடாரத்திற்குள் உறங்கும் தன் நண்பனை ஒரு முறை பார்த்தான் பொம்மன். பகலெல்லாம் வேட்டையாடிய களைப்பு. அவன் அயர்ந்து தூங்குகிறான். பொம்மன் மட்டும் வேட்டையாடவில்லையா? இருந்தும் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. மனதிலே ஓயாத ஊசல், முடிவு காணத் துடிக்கும் விபரீத வியாதி அது!

அவன் எழுந்து மெல்ல நடக்க ஆரம்பித்தான்,

திம்மனும், பொம்மனும் சிறு வயது முதல் ஒன்றாகப் பழகியவர்கள். இணை பிரியாத நண்பர்கள். வேட்டையாடுவதில் சூரர்கள். திம்மன் வேடுவக் கூட்டத்தலைவனின் மகன். பொம்மன் தாழ்ந்தவனல்ல; அவனுடைய தகப்பனும் பெரிய மனிதன் தான். ஆனால் இருவரும் இது வரை தங்கள் அந்தஸ்தைப் பற்றியே பேசியதில்லை. அதற்கு இடமே ஏற்படவில்லை.

வருஷா வருஷம் இருவரும் கொல்லி மலைக் காட்டுக்குள் புகுந்து காடே அதிரும்படி வேட்டையாடி, பல நாட்கள் காடுகளிலேயே கழித்துவிட்டுத் திரும்புவார்கள். தங்கள் கையால் கொன்ற மிருகங்களின் இறைச்சியைத் தாங்களே பதப்படுத்தி, அனுபவித்துச் சாப்பிடுவதில் இருவருக்கும் ஆனந்தம். பொம்மன் நன்றாகப் பாடுவான். திம்மன் பானையை வைத்துக்கொண்டு தாளம் போட, காட்டில் கும்மாளம் போடுவார்கள்.

எப்போதும்போல இந்த வருஷமும் இருவரும் புறப்பட்டார்கள். தோள்மேல் தோள் போட்டுக்கொண்டு, ஆனந்தமாக, ஊர்க்கதை பேசிக்கொண்டு, ராஜாக்கள் போலக் கிளம்பிய இவர்களைத் திம்மனின் தந்தை ஆசீர்வாதம் செய்து அனுப்பினான். "நல்லபடியாத் திரும்புங்க...... உம்... அடுத்த வருசம் ரெண்டு பேருக்கும் ரெண்டு கால்கட்டு போட்டுடணும்...... அப்புறம் இப்படி குசாலாக் கெளம்ப முடியுமா?" என்றான்.

திம்மன் சிரித்தப்படியே பொம்மனைப் பார்த்தான். அவனும் நண்பனைப் பார்த்து வெறுமே புன்முறுவல் பூத்தான்.

இருவரும் நடந்தார்கள், திம்மன் கேட்டான். "அப்பா சொன்னதைக் கேட்டியா? அடுத்த வருசம் நமக்குக் கால் கட்டு வந்துடும்? அப்புறம் கெளம்ப முடியாதோ?

பொம்மன் சிரித்தபடியே, "அதெல்லாம் நம்ப கிட்ட நடக்குமா? இஸ்டமிருந்தா கட்டின களுதையும் கூட வரட்டுமே!" என்றான்.

"ரொம்ப சரி... இந்தா, பொம்மா... உனக்கு என்ன வயசாச்சு?" என்று வினவினான் திம்மன்.

"இருவத்தாறு... உனக்கும் ஏறக்குறைய அது தான்."

"அடேயப்பா! ஆறு இதுவரைக்கும் நானும் நீயும் ஒரு நாளாவது கண்ணாலத்தைப்பத்தி நெனச்சிருப்போமா!...

"ஊஹூம். அது புது அனுபவம்தான்."

"கல்யாணம் எள்று சொல்றபோதே எவ்வளவு சந்தோஷமா இருக்குது! மனசுக்கு ஏத்த பொண்ணு வந்து சேந்துட்டா, நம்மைப்போல அதிர்ஸ்டசாலியே இந்த உலகத்திலே இல்லை... என்ன?"

"ஆமாம்... .எப்படி அமையுதோ பார்ப்போம்."

இருவரும் காட்டிற்குள் புகுந்தார்கள். மனிதனின் காலடிபட்டிராத இருண்ட புதர்களையும், பசிய பள்ளத்தாக்குகளையும் குடைந்து மிருகங்களை விரட்டினார்கள். வேட்டையாடினார்கள், உயர்ந்த மலைத்தொடரில் கம்பீரமாக யானை போல நடந்தார்கள். தங்கள் திண்மையான புஜத்தால் பாதையைத் தடுக்கும் மரக்கிளைகளைக்கூட முறித்தெறிந்தார்கள். பச்சிலைகள் பலவற்றைத் தேடி, தற்காப்புக்கு வேண்டிய மருந்தையும் தயார் செய்து வைத்துக்கொண்டார்கள். மலை ஜ்வரம் ஆளை லேசில் விடாதே, அதற்காக.

அழகான மான் ஒன்று திம்மன் கண்ணில் பட்டது. "அதோ பார்த்தாயா, பொம்மா...எவ்வளவு அழகான மான்குட்டி!" என்று கத்தினான்.

"ஆஹா! அழகின் பிரதிபிம்பம் போல இருக்குது...திம்மா, அதை மெள்ள உசிரோட பிடி......ஊருக்குக் கொண்டுபோவலாம்," என்றான் பொம்மன்.

அது சரி என்று பட்டது திம்மனுக்கு. ஆனால் மானைப் பிடிப்பது சுலபமா? அது பறந்து ஓடி விடுமே!

இருவரும் கிளம்பினார்கள். மானை வளைக்கப் பார்த்தார்கள். அது தாவித் தாவி ஓடியது. அவர்களும் சளைக்காமல் பதுங்கிப் பதுங்கி ஓடினார்கள். கடைசியில் மான் குட்டி ஒரு பட்டிக்குள் போய் நுழைந்துகொண்டது.

பொம்மன் வேகமாகப் பட்டிக்கு முன்போய் நின்றான். உள்ளே போய் விட்ட மான் திரும்ப அவனைப் பார்த்து விழித்தது. பாவம்! ஓடிய வேகத்தில் அதன் கண்களில் நீர் தளும்பி நின்றது. உடல் பெருமூச்சில் விம்மித் தணிந்துகொண்டிருந்தது.

பட்டி திறந்தது. ஒரு பெண் வெளியேவந்து நின்றாள். "யாரையா நீங்க? மானைத் துரத்திக்கிட்டு வந்திங்களோ?" என்று அவள் கோபமாகக் கேட்டாள்.

பொம்மன் அவளைப் பார்த்ததும் ஒரு கணம் பிரமித்துவிட்டான், ஏனெனில் அவளைப்போன்ற அழகுள்ள பெண்ணை அவன் இதுவரை பார்த்ததே இல்லை. அவள் கோபமாகப் பேசிய போதிலும் அதிலே இன்பம் தொனித்தது அவனுக்கு. இச்சமயம் திம்மன் அருகில் வந்துவிட்டான். அவனும் அவளைக்கண்டு பிரமித்துப் போனாலும், சமாளித்துக் கொண்டு, "மானைத் துரத்திக் கொல்ல வரவில்லை......மருந்துச் சரக்குக்காக வந்தோம்... அந்த மான் எங்களைப் பார்த்த பார்வை

யும் அது ஓடும்போது உடலசைவும் பார்க்க அழ காக இருந்ததால், விளையாட்டுக்குத் தூரத்த ஆரம்பித்தோம். கொல்வதாயிருந்தால் கையில் அம்பு இல்லையா என்னிடம்?'' என்றான்.

அவள் அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் சிரித்தாள். அவள் சிரித்ததைப் பெரும் பாக்கிய மாகக் கருதி அவனும் சிரித்தான். மனதிலே விவரிக்க இயலாத மயக்கம் ஆட்கொள்ள, அவன் உள்ளுணர்வு எங்கோ தாவிப் பறந்தது. "அப் படியா?... உள்ளே வாங்க" என்று அவள் உப சரித்தாள்.

இருவரும் உள்ளே நுழைந்தார்கள், அவள் இருவருக்கும் காட்டுப் பழங்களும், தேனும், பாலும் கொடுத்தாள். அமுதமாக எண்ணி இரு வரும் புசித்தார்கள். அவளுடன் தாராளமாய்ப் பேசினார்கள். அவளும் இருவருடனும் மிக அன் புடன் பழகி அளவளாவினாள்.

அன்று இருவரும் திரும்பும்போது, அவள் மறு நாள் கட்டாயம் வரவேண்டுமென்று வற்புறுத்திச் சொன்னாள். அப்படியே செய்வதாக வாக்களித் தார்கள். கரும்பு தின்னக் கூலியா வேண்டும்?

பொம்மன் முகம் கொஞ்சம் வாட்டமடைந் திருந்தது. திம்மனை நோக்கி, "நண்பா, இந்தப் பெண்ணை இப்ப நாம் சந்திச்சது பெரிய தப்பு. நீ என்ன சொல்றே?'' என்று கேட்டான்.

திம்மன் திடுக்கிட்டுப் போய், "அது பெரிய பாக்கியம்னு நான் நெனச்சிக்கிட்டிருக்கேன். நீ என்னப்பா இப்படிப் பேசறே?'' என்றான்.

அவன் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் நடந் தான். பிறகு திம்மனின் தோள்களைத் தட்டி, "அது சரி. அவளைப்பத்தி நீ என்ன நெனைக் கிறே?'' என்று கேட்டான்.

"நானா? அவ ஒரு மோகினி... அழகெல்லாம் திரண்ட ஒரு உருவம்னு நெனைக்கிறேன்.

"அதுதான் தெரியுதே! அவ மனசு!"

"ரொம்ப அவசரப்படுறியே, பொம்மா. அவ மனசு இப்ப எப்படித் தெரியும். அதை மெள்ளக் கண்டு பிடிக்கலாம்...உம்... அவ மனசுலே என்ன இருக்குதோ, யார் கண்டா?"

"ஏன் இப்படி சலிச்சிக்கறே?"

"சலிச்சுக்காமெ என்ன செய்ய? அவளைப் பார்த்தது முதல் எம் மனசு ஒரு நெலெயிலே இல்லே... என்னென்னமோ... எண்ணமெல்லாம் முன்னாடி வந்து நிக்குது... அவளுடைய சிரிப்பும், பேச்சும் எனக்கு மயக்கத்தை உண்டாக்கிடிச்சு!"

பொம்மன் தலையைத் தொங்கப் போட்டபடி நடந்தான், பதிலே பேசவில்லை. திம்மன் தன் தாபத்தை வர்ணித்துக்கொண்டே போனான். முடிவில், பொம்மனாலேயே கேட்டுக் கொண் டிருக்க முடியவில்லை. "நிறுத்து, திம்மா... உம் மனசு எனக்குப் புரியுது...ஆனா எம் மனசை நீ புரிஞ்சிக்கிடலை.'' என்றான்.

அவன் ஆச்சரியத்துடன் விழித்தான். "உம் மனசா?'' என்ற கேள்வி மட்டும் அவனிடமிருந்து பிறந்தது.

"ஆமா, எம்மனசுதான்... அவளுடைய அழகு உன்னை மட்டுமல்ல, இந்த உலகையே கிறுகிறுக்க வைக்கும்... நான் எம்மாத்திரம்?" என்றான் பொம்மன்.

திம்மன் இதைக் கேட்டு வாயடைத்துப் போனான். இருவரும் மேற்கொண்டு எதுவும் பேசாமல் கூடாரத்தை அடைந்தார்கள்.

மறுநாள் காலையில் பொம்மன் சீக்கிரமே எழுந்து இறைச்சியைப் பக்குவப் படுத்த ஆரம் பித்தான். காலைக் குளிருக்குக் கணப்பாக இருந் தது நெருப்பு. வழக்கமாக அந்த நேரத்தில் அவன் எழுந்திருக்கவே மாட்டான், அப்படி எழுந்திருந்தாலும், துள்ளும் காளைபோல ஆடிக் கொண்டே பாடுவான். இன்று அவன் மௌன மாக விறகுச் சுள்ளிகளைப் பொறுக்கிப் போட்டுக் கொண்டு, அவை எரிவதில் ஏதோ புதுத் தத்து வத்தைக் கண்டு பிடித்து விடுபவன்போல உட் கார்ந்திருந்தான்.

திம்மன் எழுந்து வந்தபோது இறைச்சி தயா ராகிவிட்டது. தன் நண்பன் கூறியதைப்பற்றி இரவு பூராவும் யோசித்தான். அதில் தப்பிதம் இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. அவ னுக்கு அவளை நினைக்க எவ்வளவு உரிமை உண்டோ, அதே உரிமை பொம்மனுக்கும் உண்டு. அவள் மனம் யாரை நாடுகிறதோ? அதுவும் இரு வருக்கும் தெரியாது. ஆகவே இவற்றையெல் லாம் யோசித்து அவன் ஒரு முடிவுக்கு வந்திருந் தான்.

"பொம்மா, ஏன் இவ்வளவு சீக்கிரம் எழுந் திட்டே?" என்று கேட்டபடி உட்கார்ந்தான் அவன்.

"என்னமோ எழுந்திட்டேன்."

"நெதமும் நானுல்ல உன்னை எழுப்புவேன்?... ஏன், தூக்கம் வரல்லியா?''

"அப்படித்தான் வெச்சுக்கவேன்."

"ஓ! காரணம் என்னவோ?"

"புரியாட்டி என்னாலே சொல்லிக் கிட்டிருக்க முடியாது."



ஆனந்த வாழ்க்கை

திருப்தி மிளிர்கிறது அவர் முகத்தில். அவள் கையால் ஆசையுடன் போட்டுக் கொடுத்த அந்த ஒரு டம்பிளர் 'டீ'யைக் குடித்தார். நாள் முழுவதும் ஆபீஸில் உழைத்த அவர் களைப்பு பறந்தோடி விட்டது. உற்சாகம் அடைகிறார். இனி மனைவியுடன் சரச சல்லாபம், குழந்தைகளுடன் விளையாட்டு. ஆனந்த வாழ்க்கைக்கு வேறு என்ன வேண்டும்?

தினம் கணவன் வீடு திரும்புதலை அவள் ஆவலுடன் மட்டுமல்லது முன் யோசனையுடன் ஒரு டம்பிளர் 'டீ'யுடன் எதிர்பார்க்கிறாள்.

உற்சாகமளிக்கும் 'டீ' போடுவது எவ்வளவு சுலபம்! செலவுக்கு செலவும் குறைவு; நொடிப் பொழுதிலே தயாரித்து விடலாம். நல்ல 'டீ'யை தினம் ரஸித்துக் குடியுங்கள்.

மந்திர சக்தியுள்ள

'டீ'யைக் குடியுங்கள்.

ஸென்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது.

C.T.B. 68

போட்டி நெ. 6. கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர் நெ. 31

ஒவ்வொரு முழுவதும் சரியான விடைக்கும் ரூ. 750/-ம், ஒரு 5 Volve A/c D/c அமெரிக்கன் ரேடியோவும் உத்தரவாதம்.

WIN Rs. 7,500

Rs. 750
FOR EACH ALL CORRECT ENTRY

54

சென்னையில் முடிவு தேதி: 28—5—52
விடை தேதி: 1—6—52 (Winning Star பத்திரிகையில்)

எங்கள் சீல் செய்யப்பட்ட ஆபீஸ் விடைக்கு வரிசைக்கு வரிசை எண்ணுக்கு எண் முற்றிலும் சரியான விடைக்கு முதற் பரிசு ரூ. 750/-ம். ஒரு ரேடியோவும், முதல் இரண்டு வரிசைகள் சரியான விடைக்கு 2-வது பரிசு ரூ. 100; முதல் வரிசை சரியான விடைக்கு 3-வது பரிசு ரூ. 25. முதல் வரிசையில் முதல் எண் சரியாகவுள்ளதற்கு 4 வது பரிசு ரூ. 5. முதல் பரிசு எண்ணிக்கை எங்கள் சீலிட்ட விடைக்கு முற்றிலும் சரியானதாய் உள்ள விடைகளைப் பொறுத்தது.

பக்கத்திலிருக்கும் சதுரத்தில் 6 முதல் 21 வரையில் உள்ள எண்களை வலமாகவும், மேலிருந்து கீழாகவும், இடமாகவும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் கூட்டுத் தொகை 54 வரும்படி அமைக்கவும். ஒவ்வொரு எண்ணையும் ஒரு தடவைக்குமேல் உபயோகிக்கக் கூடாது.

பிரவேசக் கட்டணம்:—ஒரு ரூபாய்க்கு ஒரு கூப்பன் ரூ. 3-க்கு 4 கூப்பன்கள், 8 கூப்பன்களுள்ள ஒவ்வொரு செட்டுக்கும் ரூ 5. கட்டணத் தொகையை மணியார்டர் அல்லது கிராஸ் செய்யப்படாத இந்தியன போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவேண்டும். வெள்ளைக் காகிதத்தில் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். மணியார்டர் ரசீதுகளை கூப்பனுடன் சேர்த்தனுப்பவேண்டும்.

தூரத்திலிருந்தும் வெகு தூரத்திலிருந்தும் அனுப்பும் கூப்பன்கள் அனைத்தும் கடைசியாக எம்மிடம் 28—5—52 தபாலிலாவது கிடைக்கும்படி அனுப்புவது அவசியம். எவ்வித கடிதப் போக்குவரத்தும் கூடாது போட்டி சம்பந்தமான எவ்விஷயங்களிலும் எமது தீர்ப்பே முடிவானது, கட்டுப்படுத்துவது. M. O. கூப்பனிலும் உங்கள் விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.

போட்டி நெ. 4-ன் சரியான விடை

18	10	13	5
9	4	19	14
12	15	8	11
7	17	6	16

WINNING STAR COMPETITION No. 5 (c. k.)
No. 28, Venkatachala Mudaly St., Meersahibpet,
Royapettah P. O. MADRAS-14.

ரொக்கப்பரிசு ரூ. 1000

(அபூர்வ சக்தியுடையது)

மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகா. இந்த மாய மோதிரத்தை அணிந்துகொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள், இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shining Mesmerism House (c. k.), Kartarpur (e.p.)

1993324

"கோவிச்சுக்காதே, பொம்மா, எல்லாம் புரியுது... மனசை அலட்டிக்காதே... நானும் நீயும் எவ்வளவு அன்பாய் பளகிறோம்! அதுக்குக் கேடு வரப்படாது. என்ன?"

"அதையே தான் நானும் சொல்றேன்".

"ரொம்ப சரி. இதோ பாரு.... அவளை நானும் விரும்பறேன், நீயும் விரும்பறே. ஆனா நமக்கு அவ மனசிலே இருக்கறது தெரியாது. ரெண்டு பேரும் போவோம், பேசுவோம், வருவோம். நாளாவட்டத்திலே அவ மனசு யார் பக்கமிருக்குதுன்னு தெரிஞ்சுக்கிடலாமில்ல?"

"நல்ல யோசனை தான்."

"உன்னை அவளுக்குப் பிடிச்சிருந்தா நீயே கண்ணாலம் பண்ணிக்க, எனக்கு ஆச்சேபனையில்லை"

பொம்மன் தாவி நண்பனைக் கட்டிக்கொண்டான். அந்த முரட்டுச் சரீரத்தின் நெகிழ்ச்சியை அடுத்த கணம் புல, புல வென்ற கண்ணீர்ப் பெருக்குக் காட்டிற்று. திம்மன் அவன் தலையை வருடியபடியே சும்மா இருந்தான்.

இந்த ஏற்பாட்டை விலைப்படுத்திக்கொண்டு இருவரும் ஒன்றாக வள்ளியைச் சந்திக்கச் சென்றார்கள். வள்ளி குதூகலமாக வரவேற்றுப் பேசினாள். மூவரும் மலைமுகட்டிலே மறையும் சூரியனை வியந்து கவிதைகள் கூடப்பாடினார்கள். திம்மன் வெண்ணிலவில் கும்மாளமாகப் பாடுவான். பொம்மனுக்குக் குறிப்பிட்ட எந்தக் கலையிலும் தேர்ச்சியில்லாவிட்டாலும் எடுப்பான உருவம் உண்டு. நல்ல வேட்டைக்காரன். அவன் பாய்ந்து பாய்ந்து நடனமாடுவதைக் கண்டு வள்ளி அனுபவித்துச் சிரிப்பாள்.

காலம் போய்க்கொண்டே இருந்தது. வேட்டைக்கு வந்த நண்பர்கள் திரும்புகிற எண்ணத்தை அடியோடு கைவிட்டுவிட்டார்கள். இருவரில் பொம்மன் மட்டும் எப்போதும் சிந்தனை செய்வதிலேயே ஈடுபட்டிருந்தான். இரவு வேளைகளில் அவன் சரிவரத் தூங்குவதில்லை.

ஒரு நாள் வெளியே நிலவின் வெண்மை மலைக் கருமையை முலாம் பூசிக்கொண்டிருக்கும் நேரம். பொம்மன் கூடாரத்திலிருந்து வெளியேவந்தான்.

சுற்றிலும் சென்ற அவன் பார்வையில் அமைதியான நிசப்தத்தின் மடியில் உறங்கும் வளர்ந்த பெரு மரங்களின் முகடு புலப்பட்டது. சில மரங்களில் சிவந்த பூக்கள் குலுங்கிக் கொண்டிருந்தன. வெகு தொலைவிலிருந்து வீசிய காற்று மூங்கிற் புதருள் புகுந்து பாடிக்கொண்டே வந்து அவன் செவியில் பாய்ந்தது. அது அமர காதல் கீதமாக அவனுக்குத் தோன்றியது. அதற்கேற்ப அவன் இதயம் கூத்தாடத் துவங்கியது!

Prices Reduced

SUPERBLEND POWDER
Rs. 2—12—0 per lb.



Retail Branches

285, China Bazaar Road,
MADRAS.

71, Pondy Bazaar, T. NAGAR.

அவனும் திம்மனும் இந்தக் காட்டுக்கு வந்து அறுபது நாட்கள் ஓடிவிட்டன. அப்பெண்ணைக் கண்டு நாற்பது நாட்களாகி விட்டன. அன்று முதல் இன்றுவரை படிப்படியாக வளர்ந்த தாபம் வெடித்த பலாவின் நிலைமை அடைந்துவிட்டது. அவனால் இனி, தாங்க முடியாது.

திம்மனும் அவனும் தினமும் அவளைச் சந்தித்தார்கள், பேசினார்கள். ஆனால் இன்றுவரை அவள் மனம் புலனாகவில்லை. அது எவர் பக்கம் சாய்ந்திருந்ததென்று பொம்மனுக்குத் தெரியாது. நிச்சயம் அவள் ஒருவனைக் காதலிக்கிறாள். அது திம்மனா, பொம்மனா?

தனிமையில் சந்தித்தால்தானே காதலை வெளியிடலாம்? இருவரும் செய்துகொண்ட உடன்பாடு இதுகாறும் அதற்கு இடந்தரவில்லை. ஆனால் இப்படியே எவ்வளவு நாள்தான் காலங்கழிப்பது?

அவன் புறப்பட்டான். வெகுதூரம் நடந்து பட்டியை அடைந்தான். உள்ளே அழகிய அந்த மான்குட்டி படுத்திருந்தது. அவளும் அமைதியாக உறங்கிக்கொண்டிருப்பாள். ஒருவேளை மன நிம்மதியின்றித் தாப வெறியில் தவிக்கிறாளோ!

"வள்ளி!"

அவன் மெல்லக் குரல் கொடுத்தான்.

அவனுக்குப் பயமாயிருந்தது. தான் செய்வது தப்பான காரியம் என்று பட்டது. நண்பனை விட்டு விட்டு இவன் மட்டும் வந்து சந்திப்பது இருவருக்கிடையேயுமுள்ள உடன்பாட்டை மீறியதாயிற்றே? இருந்தும் எங்கிருந்தோ அவனுக்குத் தைரியம் வந்தது. படலைத் திறந்து உள்ளே புகுந்தான்.

காவல் நாய் ஒன்று அப்போது தான் விழித்துக் கொண்டதுபோல படல் திறப்பதுகண்டு குரைத்தது. அவனுக்குக் கோபம் வந்தது. அதைத் தாவிப் பிடித்துக் கழுத்தை நெறித்தான். அது ஈனஸ்வரத்தில் கத்தியபடியே பிடியில் தளர்ந்து கொண்டிருந்தது.

"யார் அங்கே?" என்று கேட்டபடி வள்ளி வந்து நின்றாள்.

அவன் திணறிப்போய், "நான் தான்" என்றான்.

அவள் திடுக்கிட்டாள். ஒரு கணம் அவளுக்கு என்ன நடந்தது என்பதே புரியாது போலிருந்தது. பிறகு நடந்தது தெளிவு பெற்றதும் கோபம் தான் முன் நின்றது. "நீங்களா? இந்த இரவு வேளையில் எங்கே தனியாக வந்தீர்கள்? அந்த நாயைக் கொன்று விட்டீர்களா? ......அடடா!" என்று தவித்தபடியே அவனருகில் வந்தாள்.

நாயை அவள் கீழே போட்டான். அது ஸ்மரணையின்றிக் கிடந்தது.

"நீங்கள் மனிதர் தானா?... என் அருமை நாயைக் கொன்று விட்டீர்களே!" என்று கத்தினாள் அவள்.

"நாய் குரைத்தது எனக்குப் பொறுக்கவில்லை; அதைக் கொல்லவேண்டுமென்று நான் விரும்பவில்லை," என்றான் அவன்.

"உங்களைப் போன்று இரவில் திருட்டுத்தனமாக நடப்பவர்களைக் கண்டுபிடிப்பது தானே அதன் தொழில்? அதற்குக் கோபம் வருவானேன் உங்களுக்கு?" என்று கேட்டாள் அவள். பிறகு கோபத்துடன், "நீங்கள் எதற்காக வந்தீர்கள்? அதைச் சொல்லுங்கள்." என்று கேட்டாள்.

அவன் அயர்ந்து போனான். இப்படி நேரும் என்றே அவன் எதிர்பார்க்கவில்லை. வெண்ணிலவில் அவளுடன் கைகோத்து நடந்தபடி தன் மனதை வெளியிட வேண்டுமென்று அவன் விரும்பினான். அப்போது அவள் சந்தோஷத்துடன் சிரிப்பாள், தன் கனவு நிறைவேறும் என்று கருதியிருந்தான்.

பெருத்த ஏமாற்றத்துடன்! "வள்ளி! ஏன் வந்தேன் என்று கேட்கிறாய்? நான் வரவில்லை...... என் மனம் தான் என்னை இழுத்து வந்தது. அது உன்னைச் சரணடைந்து விட்டது," என்றான்.

அவள் சிரித்தாள். "உங்கள் மனதை அடக்கிக் கொள்ளுங்கள். அதற்கு நான் பொறுப்பாளி

யல்ல. உண்மையைச் சொல்லுகிறேன். உங்கள் மீது எனக்கு ஆசையில்லை," என்ருள்.

அவன் உள்ளம் வெடித்தது.

பேசாமல் திரும்பினுன். எதிரே மலை வெடித்துப் பிளந்து அவன் தலையில் விழுவது போலிருந்தது! ஏமாற்றம்! அவனுக்குப் பெருத்த அவமானம். திம்மனுக்குப் பெரும் வெற்றி. ஆம்! தன்னை வெறுப்பதாயிருந்தால் அவள் ஆசை திம்மன்மீது தானே இருக்கவேண்டும்'

கூடாரத்திற்கு வந்ததும் நிம்மதியாக உறங்கும் தன் நண்பனைப் பார்த்தான். அவன் பாக்கியசாலி.

படுக்கையில் விழுந்தான். புரண்டான். தூக்கம் வரவில்லை. ஏமாற்றத்தின் எதிரொலிபோலக் கோட்டான்களின் கூவல் இரவைப் பிளந்து வந்தது. தலையில் பெரும்பாரம் இறங்கியிருந்ததைப் போலிருந்தது. மார்பு பட படத்துத் துடித்தது.

மறு நாள் பொம்மன் காலையில் சீக்கிரமே எழுந்திருந்தான். இரவில் தூக்கமே இல்லை அவனுக்கு, மனது அசுர தாண்டவம் செய்தது. அதன் ஆட்டத்தில் அவன் மயங்கி விட்டான்.

திம்மன் எழுந்திருந்து வெளியே வந்தான். பக்கத்திலுள்ள சுனையை நோக்கி அவன் நடந்த போது, பொம்மன் பல்லைக் கடித்து, 'நீ மட்டும் சுகமாக அவளுடன் வாழவேண்டுமா? அது முடியாது. அவள் என்னை அவமதித்து அனுப்பி விட்டாள். அதன் பலனை நீதான் அனுபவிக்க வேண்டும்." என்று தனக்குள் சொல்லிக் கொண்டே கூடாரத்திற்குள் நுழைந்தான். தோல் பைக்குள் பத்திரமாக இருந்த பாஷாணத்தை வெளியே எடுத்தான். எத்தனையோ வாயில்லா ஜீவன்களை நொடியில் கொல்லும் மருந்து அது.

பக்குவமான இறைச்சியில் அதைத் தூவி அடுப்பிலிட்டுக் காய்ச்சினுன். ஒரு சட்டியில் அதை எடுத்துத் தன் நண்பனுக்காக வைத்திருந்தான்.

திம்மன் வந்தான். இன்னமும் அவன் முகத்தில் களைப்பு நீங்கவில்லை.

"என்ன, பொம்மா...நன்ருகத் தூங்கினுயா?" என்று கேட்டபடி உட்கார்ந்தான்.

பொம்மன் தலையாட்டிவிட்டுப் பேசாமலிருந்தான்.

"நாம் வந்து ரொம்ப நாளாச்சு. இல்லையா?... புறப்படவேண்டாமா?... காலையிலே ஒரு சொப்பனம் கண்டேன். எனக்குப் பயமாக இருக்குது." என்ருன் திம்மன்.

"என்ன?" என்று வினவினுன் பொம்மன் அசுவாரசியமாக.

"அதைக் கேட்டா நீ கோவிச்சுக்குவே......விடியக்காலம் நான் தனியா எளுந்திருச்சி அவளைப் பார்க்கப் போயிருந்தேன்... கனவிலேதான்" என்ருன் திம்மன்.

அப்புறம்?

"அங்கே போனேனு? எனக்கு முன்னுடி நீ வந்திருந்தே! அவளுடன் பேசிக்கிட்டிருந்தே. அவளும் உன்னோடே பிரியமாய்ப் பேசிக்கிட்டிருந்தா..."

"உம்"

"எனக்குக் கோபம் வந்துவிட்டது, உன்னோடு பலத்த சண்டை போடறேன். நீ என்னை உதைக்கிருய், நான் உன்னை அடிக்கிறேன். இப்படியே சண்டை..."

"முடிவிலே என்ன ஆச்சு?"

"கனவு அத்துடன் முடிஞ்சிபோச்சி... இதுக்கு என்னு அர்த்தம்னு எனக்குப் புரியல்லே."

பொம்மன் யோசித்தபடி உட்கார்ந்திருந்தான். நண்பனின் கனவு அவனுக்கு விசித்திரமாக இருந்தது!

திம்மன் அவனுடைய தோள்களைப் பிடித்த படியே 'கனவு வெறுமெ வராது... வெடியக் காலக் கனவு கட்டாயம் பலிக்கும். அப்படின்னு நானும் நீயும் சண்டை போடுவோமா? எனக்கு அது புடிக்கல்லே," என்ருன்.

பொம்மன் தன் நண்பனைப்பார்த்து, 'எனக்கும் தான் அது புடிக்கல்லே,' என்ருன்.

"அப்போ நான் சொல்றபடி நடந்துக்கிடு... நான் இன்னிக்கே காட்டை விட்டு போயிடறேன், ஆமாம்... ஏன்னு கேட்டியானுல் வெளக்கமாய்ச் சொல்லமுடியாது. எனக்கென்னமோ நீ தான் அவளுக்கு லாயக்கு அப்படின்னு தோணுது."

"திம்மா!"

"கேளு, நானும் நீயும் பேசிக்கிட்டபடி நான் நடக்கல்லே, ஒரு நாள் உனக்குத் தெரியாம நான் அங்கே பேனேன். அவளோட பேசிக்கிட்டிருந்தேன். நான் செஞ்சது தப்பு."

"நீ போயிருந்தியா?"

"ஆமாம். அவ என்னோட எப்பவும் போலப் பேசிப் பளகினு. ஆனு அதுனுலே அவ என்னை

விரும்பறுன்னு சொல்ல முடியாது, பாரு... நீ கடைசி வரை நம் உடன்படிக்கைப்படி நடந்தே. உனக்கு நான் ஆரம்பத்திலேயே துரோகம் நெனச்சேன். எனக்குத்தான் தெண்டனை கெடைக்கணும்.

பொம்மன் ஆவேசத்துடன் தன் நண்பனைக் கட்டிக்கொண்டான். பிறகு தழுதழுத்த குரலில் "திம்மா, நீ செஞ்சது சரி. இந்த விசயத்திலே உடன்படிக்கை செய்துக்கிறது பெரிய தப்பிதம். உன்னை அவள் விரும்புகிறுள் என்று எனக்குத் தெரியும்... நான் தான் தப்பிதம் செய்தவன்," என்றுன்.

திம்மன் திக்பிரமையில் உட்கார்ந்திருந்தான். பொம்மன் ஆவலுடன் அவனுக்கு இறைச்சியைக் கொடுத்தான். பாஷாணம் கலந்ததை அல்ல. அதைத் தான் எடுத்துக்கொண்டான்.

இருவரும் சாப்பிட்டார்கள். பொம்மன் இர்ண்டு வாய் சாப்பிட்டதும் சாய்ந்தான். திம்மன் அவனை வாரி அணைத்துக்கொண்டு, "ஐயோ, பொம்மா, இது என்ன?" என்று அலறினுன்.

"ஒன்றுமில்லை... என் மனதிற்கு ஒரு முடிவு. நண்பா, நீ அவளுடன் சுகமாக வாழவேண்டும். இதுவே என் ஆசை. அதை நீ நிறைவேற்று வாயா? சத்தியம் செய்," என்று கேட்டான் பொம்மன்.

"ஆகட்டும்... இது என்ன? நீ சாகப் போகிருயா?" என்று திம்மன் புலம்பினுன்.

"ஆமாம்... என் முடிவு அதுதான்," என்றுன் பொம்மன்.

வானத்தில் சூரியனின் சுடு கிரணங்கள் பரவின; அந்தக் கானகத்தில் ஒரு ஜோடி காதலர்கள் அதே சமயம் ஒரு புனித ஆத்மாவின் மரணத்துக்குக் கண்ணீர் உகுத்தனர்.

ஸ்ரீ கணபதி கணித அறிவு போட்டி

பரிசுத் தொகை ரூ. 200=0=0

முடிவு தேதி 30—5—1952

கட்டணம் கூப்பன் இரண்டுக்கு ரூ 0-8-0 (எட்டணு) அதிக கூபன் பிரதி ஒன்றுக்கு ரூ. 0-4-0 (நான்கணு) இரண்டு கூபனுக்குக் குறைவாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரிசுத் தொகையை அதிகரிக்கவும், குறைக்கவும் அவசியம் ஏற்பட்டால் அவ்விதம் செய்யப்படும். கட்டணத் தொகை மணியாடர் மூலம் அல்லது கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலம் போட்டி ஆசிரியர் விலாசத்திற்கு அனுப்பவேண்டும், முடிவு தேதிக்கு மேல் வரும் விடைக் கூபன்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, விடை "காவேரி" பத்திரிகையில் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

5 முதல் 20 வரை=50

19	11	12	6
10	5	20	15
13	16	9	12
8	18	7	17

2. இதில் காணும் கூபனில் (கட்டத்தில்) 5 முதல் 20 வரையுள்ள எண்கள் அறிவைத் திரட்டி அடைக்கவேண்டும். இவற்றின் கூட்டுத் தொகை, நேர். கீழ்மேல், மூலைவாக்கு எவ்விதமும் 50 கிடைக்கவேண்டும். எண்களை ஒருமுறைதான் உபயோகிக்கலாம். போட்டி ஆசிரியரின் விடைக்குச் சரியாக ஒத்திருப்பதற்கு, முதல் பரிசு ரூ 125-0-0, கட்டத்தில் எண்கள் மூன்று வரிகள் நேரே சரியாகியிருப்பதற்கு இரண்டாம் பரிசு ரூ. 50-0-0ம், இரண்டு வரிகளின் எண்கள் சரியாகியிருப்பதற்கு மூன்ரும் பரிசு ரூ. 25-0-0ம், கொடுக்கப்படும். சரியான விடையில்லாமலிருந்தால், அடுத்துள்ள விடைகளுக்கு ஷை பரிசுகள் கொடுக்கப்படும். விடைகள் ஒன்றுக்குமேல் அதிகம் சரியாகியிருந்தால் பரிசுத்தொகை பங்கிட்டுக் கொடுக்கப்படும். "போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது" என்று கூப்பனில் அடியில் எழுதி, கையெழுத்து செய்ய வேண்டும், கூபனில் முழு விலாசமும், மணியாடர் ரசீதும் அடக்கம் செய்யவேண்டும். வெற்றுக் காகிதத்திலும் கூபன் விடை எழுதலாம். போட்டி ஆசியரின் தீர்ப்பே முடிவானது. ஏஜண்டுகள் தேவை.

போட்டி ஆசிரியர்:—**B. V. S. AIYER**

595, Govindarajapuram, Kalpathi Post, PALGHAT.

சினிமாப் பகுதி

கண்ணன்

காஞ்சனா

தமிழ்ப்பட உலகில் "அத்திபூத்தாற்போல்" தான் வெகு நாளைக்கு ஒருமுறை நல்ல படங்கள் தோன்றுகின்றன. இப்பொழுது கடைசியாகத் திரைக்கு வந்திருக்கும் பக்ஷி ராஜாவின் "காஞ்சனா" நாம் பார்த்து மகிழ்ச்சியும் பெருமையும் அடையக்கூடிய ஒரு கவர்ச்சிகரமான படம்.

"லக்ஷ்மி" யால் எழுதப்பட்டு, "ஆனந்த விகடன்" வாயிலாக வந்து தமிழ் நாட்டில் பெருவாரியான ஆதரவு பெற்றது, "காஞ்சனா" வின் கதை. இந்த அழகிய கதையை டைரக்டர் எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு வெகு அழகாகப் பிடித்திருக்கிறார். கவர்ச்சியானதும், இயற்கையானதுமான, வசனமும், கச்சிதமான நடிப்பும், படத்திற்குப் பெரும் வெற்றியை அளித்திருக்கின்றன. மட்ட ரகமான ஹிந்தி மெட்டுச் சங்கீதத்தினால் புண்பட்ட ரஸிகர்களுடைய காதுகளில் இப்படத்தில் உள்ள இனிய கர்நாடக மெட்டுகளில் அமைந்துள்ள சில பாட்டுக்கள் இன்பத்தேன் பாய்வதுபோல் பாய்ந்து பரவசப்படுத்துகின்றன.

மாத்தூர் ஜமீன்தார் புஷ்பநாதன் தாஸிப் பெண்ணான பானுமதி என்ற பானுவை வெகுவாகக் காதலித்தானானாலும், தன் தாயார் விருப்பத்திற்கு இணங்கி, வேறு பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளச் சம்மதிக்கிறான். ஆனால் அவள் சொற்படி சம அந்தஸ்தில் உள்ள ஒரு பெண்ணை மணக்காமல் எஸ்டேட்டில் தன் தகப்பனார் காலத்தில் கணக்குப்பிள்ளை வேலை பார்த்திருந்த நீலமேகம் பிள்ளையின் பேத்தியான காஞ்சனாவின் அழகில் ஈடுபட்டு அவளை மணக்கிறான். இருந்தும் அவ்வப்பொழுது அவளுடைய ஏழ்மையை, அவனும் அவனுடைய தாயாரும் இடித்துக் காண்பித்து, அவளுடைய மனதைப் புண்படுத்துகிறார்கள். மேலும் தன் கணவன் பானுவின் வீடே கதி என்று இருப்பதும், அது போதாது என்று வீட்டிற்கு வந்த தன் அண்ணன் காதலியான டாக்டர் ஸீதா என்பவளின் அழகிலும் பாட்டிலும் மையல் கொள்வதும், தனக்குப் பிறந்த குழந்தையைத் தன் மாமி எடுக்கவொட்டாமல் செய்வதும், அவளுடைய வாழ்க்கையின் கசப்பை அதிகரித்து, அதனால் தன் குழந்தையுடன் வீட்டை விட்டு வெளியேறுகிறாள். ஆனால் அவள் இருப்பிடத்தை ஜமீன்தார் கண்டுபிடித்துக் குழந்தையைத் திருப்பி எடுத்து வந்துவிடுகிறார். பானு அக் குழந்தையைத் தன் வீட்டில் வைத்து வளர்த்து வருகிறாள். இதற்கிடையில் வாழ்க்கையை வெறுத்து, கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ள எத்தனித்த காஞ்சனையை டாக்டர் ஸீதா காப்பாற்றி, தான் ஜமீன்தாரை ஒருநாளும் மோகித்ததில்லை யென்று நிரூபிக்கிறாள். கடைசியில் தாஸிப்பெண் தன் வாழ்வையும், உயிரையும் தியாகம் செய்து காதலர்களைச் சேர்த்து வைக்கிறாள்.

காஞ்சனையாக வரும் லலிதா உருக்கமாக நடித்திருக்கிறார். சாதாரணமாக லலிதா பல படங்களில் கெட்ட ஸ்திரீயாக உள்ள பாகங்களில் நடித்திருந்தாலும், இப்படத்தில் மாசற்ற மனமுடைய காஞ்சனையின் பாகத்தில் நன்றாக நடித்திருக்கிறார். முக்கியமாக வீட்டை விட்டு வெளியேறிய பின்பு, குழந்தையை மீட்க வரும் ஜமீன்தாருடன் எதிர்த்து வாக்குவாதம் செய்வது பெரும் உணர்ச்சி வெள்ளத்தை எழுப்புகின்றது. பத்மினி உண்மைக் காதலால் உலப்பப்படும் தாஸிப்பெண் உள்ளத்தை பெரும்பாலும் நன்றாகச் சித்திரித்திருப்பினும், சில இடங்களில் அவருடைய பேச்சும், நடிப்பும் சற்று உணர்ச்சி குறைந்து காண்கின்றன. ஜமீன்தாராக வரும் கே. ஆர். ராமசாமி தம் கஷ்டமான பாகத்தைக் கூடியவரை நன்றாக நடித்திருக்கிறார்.

பானுவின் தாயாராக வரும் எம். ஆர். சந்தானலக்ஷ்மியின் வெடுக்குப் பேச்சும், அனாயாசமான நடிப்பும், படத்தின் சிகரமாக விளங்குகின்றன. ஏழுமலையாக வரும் டி. எஸ். துரைராஜ், நீலமேகம் பிள்ளையாக வரும் கே. துரைசாமி, ஜமீன்தாரிணியான பி. எஸ். ஞானம், இவர்கள் தம்தம் பாகங்களை நன்கு நடித்திருக்கின்றனர்.

மூலக் கதையை மாற்றி, நண்பன் தூண்டுதல்மேல் ஜமீந்தார் மில் கட்டுவதாகப் பிடித்திருப்பது அனுவசியமான திருத்தமாகத் தோன்றுகிறது. மேலும் இப்பாகத்தில் எம். என். நம்பியாரின் மிகையான நடிப்பு ரஸக் குறைவாக இருக்கிறது.

வீட்டைவிட்டு வெளியேறின காஞ்சனவை எப்படி ஜமீன்தார் ஒருவருமில்லாத ஒரு காலி வீட்டில் சந்தித்தார் என்று புரியவில்லை.

தற்கொலை செய்துகொள்ள எத்தனிக்கும், காஞ்சனவை யார், எப்படிக் காப்பாற்றினர்கள் என்று காட்டாமல் உடனே டாக்டர் சீதாவிடம் சிகிச்சை பெறுவதாகக் காண்பிக்கப்பட்டிருப்பது, படத்தில், நினைவு வந்தவுடன் சீதாவைப் பார்க்கும் காஞ்சனவுக்கு எவ்வளவு திகைப்பாயிருக்கிறதோ, அவ்வளவு திகைப்பாகப் பார்ப்பவர்களுக்கும் இருக்கிறது,

முன்பு சொன்னதைப்போல், இப்படத்தின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணம் சிறந்த வசனம். இதை எழுதியது யார் என்று அறிவிக்கப்படவில்லை. இயற்கையாகவும், வசீகரமாயும், அமைந்திருக்கும் வசனம், படத்திற்கு ஒரு தனிச் சிறப்பை அளித்து, படம் முடிய சுமார் 3½ மணிநேரம் ஆகியும், சலிப்பென்பது இல்லாமல் செய்கிறது. ரஸமான கதையைத் திறம்பட எடுத்திருக்கும் இப்படத்தை யாவரும் பார்க்க வேண்டியதே.

"THE RIVER"

வெளிநாட்டு மனிதர்களேயும், அவர்களுடைய சாதனைகளேயும் அதிதமாகப் புகழும் மனப்பான்மை இன்னும் நம்மிடையே பலபேரிடம் இருந்து வருகிறது. பலவிதங்களில் மேல் நாட்டாரும், அவர்களுடைய செயல்களும், மிகப் போற்றத்தக்கவையாக இருந்தாலும் நம்மில் பெரும்பான்மையோர் தராதரத்தையறிந்து ஆதரவை அளிக்காமல் எக்காரியத்தையும் அபாரமாகச் சிலாகித்துக்கொள்ளும் மனப்பான்மையுடன் இருக்கின்றனர். பத்திரிகையாளர்களும் இந்தப் போக்குக்கு விலக்கில்லை. உதாரணமாக சமீபத்தில் சென்னையில் திரையிடப்பட்ட "THE RIVER" (நதி) என்னும் அமெரிக்க டெக்னிக்கலர் படத்தை, பல பத்திரிகையாளர்கள் ஓர் அற்புத சிருஷ்டி என்றும், இணையற்ற சலன ஓவியம் என்றும் அடுக்கு அடுக்காகப் புகழ்மாலை சூட்டி இன்னும் அப் படத்தைப் பார்க்காதவர்களை ஒருவாறு திகைக்க வைத்திருக்கின்றனர். அமெரிக்க முதலாளியான கென்னத்மாக்எல்டௌனி என்பவரால் மூன்று வருஷ காலமாகத் திட்டமிடப்பட்டு பெரும்பாலும் இந்தியாவிலேயே எடுக்கப்பட்டு இருக்கும் இந்தப் படம் மொத்தத்தில் சுமாராகவே இருக்கிறது. இது மேல்நாடுகளில் நன்ருக ஓடிக்கொண்டு இருக்கிறது என்ருல் இந்தியாவில் பல இடங்களிலும் குறிப்பாகச் சென்னையிலும் சில வாரகாலமே ஓடியது, இதற்குச் சான்ருகும். வங்காளத்தில் கங்கை நதியோரமாக உள்ள சணல் ஆலைகளில் வேலை பார்த்துவரும் சில ஐரோப்பிய குடும்பங்களின் வாழ்க்கையைப்பற்றிய கதையாக இருப்பதும், இந்திய காட்சிகள், பழக்க வழக்கங்கள் இவைகள் சித்திரிக்கப்பட்டிருக்கிறதுமே காரணமாக இருக்கவேண்டும். ஹொலிப் பண்டிகையில் சிகப்புத் தண்ணீர் ஒருவருக்கொருவர் ஊற்றிக்கொள்வதும், காளிக்குப் பூஜை போடுவதும், தீபாவளிக்கு விளக்கு வரிசை வரிசையாக ஏற்றுவதும், தெருவில் பாம்பாட்டி மகுடி ஊதுவதும், வெள்ளையருக்கு வேடிக்கையாகவே இருக்கும். இவை படத்தில் பிடிக்கப்பட்டிருப்பது இந்தியக் கலாசாரப் பெருமையை எடுத்துக் காட்டும் முறையில் ஒன்றுமில்லை.

"நதி" யின் கதை மிகவும் எளியது. ராணுவச்சேவையில் ஒரு காலை இழந்த காப்டன் ஜான் என்பவன் கல்கத்தாவிலுள்ள தன் உறவினர் வீட்டுக்கு வந்திருக்கும்பொழுது அண்டை வீடுகளில் உள்ள மூன்று பெண்கள் அவனைக் காதலிக்கின்றனர். அவர்களில் ஒருத்தியான மிலானி என்பவள் சணல் ஆலை அதிகாரியான ஐரோப்பியர் ஒருவருக்கும், இந்தியத் தாய்க்கும் பிறந்தவள். இந்தப்பாகத்தில் அடையாறு ருக்மணிதேவியின் உறவினரான ராதா ஸ்ரீராம் என்பவர் நடிக்கிருர். படத்தின் வெற்றிக்கு இவர் ஒரு முக்கிய காரணமாகச் சொல்லப்படுகிறது. என்ருலும் இவருடைய நடிப்பு மிகவும் சுமாராகவே இருக்கிறது. இந்தக் கதையில் இவர் பரதநாட்டியம் ஆடியிருப்பதைப்பற்றி வெகு ஆடம்பரமாக விளம்பரங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் இதில் இவர் ஆடியிருக்கும் ஒரே டான்ஸ் (ராதா கிருஷ்ண நடனப்) சுமாராகவே இருக்கிறது. மேலும் வங்காளத்தில் பிறந்து இளமையிலேயே மேல் நாட்டிற்குப் படிப்புக்குச் சென்ற பெண்மணி பரதநாட்டியப் பயிற்சி பெற்றிருப்பது சற்று அசம்பாவிதமாகவே இருக்கிறது. இந்த ராதாகிருஷ்ண நடனத்திற்குப் பாட்டு,

பிரபல தென்னிந்திய நட்டுவனர் கே. எம். தண்டாயுதபாணி பிள்ளை அவர்கள் அழகாக இயற்றிப் பாடி இருக்கிருர். இந்தப்படத்தில் என்னை மிகவும் கவர்ந்த அம்சம் பின்னணி சங்கீதமே. மிகவும் இனிமையான கர்நாடக மெட்டுகளில் அமைந்த குழல், வீணை இவைகளின் இசை காற்றில் மிதந்து வரும் மெல்லிய கீதம்போல் மனதை கொள்ளைக் கொள்ளுகிறது. இம்மாதிரி உள்ளம் பூரிக்கும் கீதத்தை ஏன் நம் படமுதலாளிகள் கர்நாடக சங்கீதத்தின் தாய் நாடான நம் நாட்டில் இதுவரை வெகுவாகக் கையாளவில்லை என்று மனம் ஏங்குகிறது.

இயற்கை வர்ணத்தில் எடுக்கப்பட்டிருக்கும் இந்தப் படத்தில் இயற்கைக் காட்சிகள் மிகவும் ரம்யமாக அமைந்து இருக்கின்றன. இரவு பகலாகச் சனல் படகு போய்க்கொண்டிருக்கும் கங்கை நதி மனதிற்கு ஒரு சாந்தியை அளிக்கிறது, பாம்பு பிடாரன் மகுடி ஊதி, பாம்பாட்டுவதைப் பார்த்து, தானும் அதுமாதிரி புற்றின் அண்டை ஊதி, பாம்பு கடித்து உயிரை இழக்கும் சிறுவனுடைய பரிதாப மரணம் பார்ப்பவர் மனதைத் துக்கத்தில் ஆழ்த்துகிறது. இம்மாதிரி உருக்கமான காட்சிகளை இந்தப் படத்தை எடுத்த பிரபல பிரஞ்சு டைரக்டரான "ஷீன் ரென்வார்" சாமார்த்தியமாகக் கையாண்டு இருக்கிருர்.

இந்தியப் பழக்க வழக்கங்களின் தன்மையை உணர்ந்து அவைகளை மேல் நாட்டார் இந்தியர் மனம் புண்படாதவகையில் சித்திரித்துக் காண்பிக்கும் இந்த முதல் மேல்நாட்டுப் படம் அந்த அளவிற்குப் போற்றதக்கதே.

குமாரி

தற்காலத்தில் பெரும்பாலான தமிழ்ப்பட முதலாளிகள் தங்கள் படம் வெற்றியடைவதற்குப் பிரபலமான நடிகர்களைத் தேர்ந்து எடுத்துவிட்டால் போதுமானதென்று கருதுகிருர்கள். கதை, வசனம் இவைகளில் குறைபாடுகள் இருப்பினும் நடிகர்கள் மாத்திரம் ஜனங்களின் ஆதரவு பெற்று இருப்பவர்களாயின் சமாளித்துக் கொள்ளலாம் என்று இவர்களுடைய எண்ணம். இந்த மனப்பான்மை மேனுட்டு டைரக்டர்களுடைய கருத்துக்கும் அனுபவத்திற்கும் நேர்மாருக இருக்கிறது. உலகப் போட்டிகளில் வெற்றியடைந்த படங்கள் பலவற்றில் முன்னதாகவே பிரசித்தியடைந்த நடிகர்கள் கிடையாது. எனவே இப்படங்களின் வெற்றிக்கு, கதையமைப்பின் உயர்வும் அதில் வரும் சம்பவங்கள் மனதைக் கவர்கின்ற விதம் திறமையாகக் கையாளப்பட்டிருப்பதேயாகும். மேலே கூறியதற்குச் சிறந்த உதாரணம்,பல உலகப் போட்டிகளில் முதல் பரிசு பெற்றும் இன்னும் பெற்றுக்கொண்டு வருவதுமான "பைசிகள் திருடன்" என்னும் இத்தாலியப் படம். இதில் வரும் நடிக, நடிகைகள் பிரபலமானவர்கள் அல்ல. வேலையில்லாத் திண்டாட்டத்தினல் வெகு காலம் அவதிப்பட்டுத் தன் சைக்கிள் உள்பட பல பொருள்களை அடகுவைத்துக் காலம் கழிக்கிற "ரிச்சி" என்பவனுக்கு ரோம் நகரில் சினிமா விளம்பரங்களை ஒட்டும் வேலை கிட்டுகிறது. இந்த வேலைக்கு, சைக்கிள் இருக்க வேண்டியது ஒருநிபந்தனை. இந்த வேலை கிடைப்பதற்காக மேலும் பல பொருள்களை ரிச்சி அடகு வைத்து, தன் சைக்கிளை மீட்டு வேலைபார்க்க ஆரம்பித்ததுதான் தாமதம். உடனே சைக்கிள் களவு போய்விடுகிறது. களவுபோன சைக்கிளை எப்படியாகிலும் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஒரே வைராக்கியமாக ரிச்சியும், அவன் மகனும், மற்றும் அவன் நண்பர்கள் பலரும் ரோம் நகரத்தையே சல்லடைப் போட்டுச் சலிக்கிருர்கள். இதில் வெற்றி காணுவது அசாத்தியம் என்பது நிதரிசனமானலும், தன் வேலைக்கு முக்கிய சாதனமாகிய அந்தச் சைக்கிளை எந்த விதத்திலும் கண்டு பிடித்துவிடவேண்டுமென்று ரிச்சி படும்பிரம்ம பிரயத்தனத்தைச் சித்திரித்துக் காண்பிப்பதையே முக்கிய கருத்தாக அமைத்துப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது. எங்குத் தேடியலைந்தும் சைக்கிள் அகப்படாமல் கடைசியில் ரிச்சி வேறு ஒருவனுடைய சைக்கிளைத் திருட முயற்சிப்பதும், அதைக் கண்ட அவன் மகன் ஸ்தம்பித்துப் போவதும், தன் கெட்ட செய்கையைத் தன் மகன் கண்டுகொண்டதை அறிந்த ரிச்சி அப்படியே மனமிடிந்து போவதும் மனத்தைவிட்டு அகலாவண்ணம் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சர்வ சாதாரணமான கதையை வைத்துக்கொண்டு இந்தப் படத்தின் பிரபல டைரக்டரான் விட்டோரியா டி ஸிகா ஒரு அற்புத சித்திரத்தைச் சிருஷ்டித்து இருக்கிருர். இம்மாதிரி மேனுட்டினர் கதையையும் படப்பிடிப்பையுமே பிரதானமாகக் கருதும் பொழுது நம் பட முதலாளிகள் மட்டும் படத்தின் வெற்றிக்கு நடிகர்களின் பெயரையே நம்பி இருக்கிருர்கள்.

சமீபத்தில் வெளிவந்த R. பத்மநாபனின் "குமாரி" இதற்கு ஒரு அரிய உதாரணம். இந்தப் படத்தில் M. G. ராமச்சந்திரன், செருகளத்தூர் சாமா, மாதுரிதேவி, ஸ்ரீ ரஞ்சனி (ஜூனியர்) இவர்கள் நடிக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றும் குறிப்பிடத் தக்கதாக இல்லை. கதையோ பிரபலமான பல பழைய, கதைகளிலிருந்து தொகுக்கப்பட்டதாக மனதிற்குப்படுகிறது. அரண்மனைச் சேவகனால் சிற்றப்பன் சூழ்ச்சியிலிருந்து காப்பாற்றப்படும் ராஜகுமாரனுடைய தீரச்செயல்களும், அண்டை ராஜ்யத்து வயோதிக அரசனுக்கு இளைய ராணியாக வாழ்க்கைப்பட்ட அழகிய யுவதியின் திருட்டுக்காதலும் நாடக மேடையில் நடித்துக் குற்றவாளிகளின் மனதைச் சோதிக்கும் முறையும் கதை ஆசிரியர்களால் அடிக்கடி கையாளப்பட்ட கட்டங்கள். "குமாரி" திரையில் ஆரம்பமாவது ஒன்றும் புரியாத வகையில் இருக்கிறது. சிலர் தலை தெறிக்க ஓடுவதும், பிறகு கத்திச்சண்டை போடுவதும் கதை தெரியாமல் பார்க்க வருபவர்களைத் திகைக்கவைக்கிறது. வாயுவேகமாக வண்டியை இழுத்துச்செல்லும் குதிரைகள் கட்டுக்கடங்காமல் தான் ஓடுகின்றன என்றும், அவைகளைத் துரத்தி ஓடிவந்து மடக்கும் கதாநாயகன் வண்டியில் இருப்பவர்களைக் காப்பாற்ற வந்தான் என்றும் பார்ப்பவர்களுக்கு வெகுநேரம் மனம் குழம்பின பிறகு தான் தெரிகிறது. கண்டதும் காதல் ஏற்படும் கதைகள் பல இருப்பினும் கதா நாயகனும், கதா நாயகியும், நொடிப்பொழுதில் காதலர்கள் ஆகிவிடுவது சற்று அசம்பாவிதமாகவே இருக்கிறது.

கதையின் வசனம் எழுதி இருப்பவர் அது இயற்கையாக அமைவதைப் பிரதானமாகக் கருதாமல் தம்முடைய இலக்கிய ஆற்றலைக் காண்பிக்க அதை ஒரு அரிய சந்தர்ப்பமாகக் கருதி, ஒவ்வொரு நடிகருடைய சம்பாஷணையையும் கூடியவரை ஒரு சொற்பொழிவாக இயற்றி இருக்கிறார். பல தமிழ்ப் படங்களில் ஒரு முக்கியமான குறைபாடு நடிகநடிகைகள் எந்நேரத்திலும் இலக்கணத்தமிழில் அடுக்கு அடுக்காகப் பொழிந்து தள்ளுவதே. இது இயற்கைக்கு மிகவும் மாறுபட்டது.

வசனங்கள் குறுகியும், குறைந்தும் இருப்பது சாதாரணமாக ஒரு படத்தின் உயர்வுக்கு ஒரு குறிக்கோளாகும். உதாரணமாக, சென்னையில் சமீபத்தில் நடந்த பிலிம் திருவிழாவில் காண்பிக்கப்பட்ட "யூகிவாரிஸ்" என்ற ஜப்பானியப் படத்தில் உள்ள வசனம் முழுமையும் ஒரு நாலைந்து பக்கங்களில் எழுதிவிடக்கூடியதாக இருந்தது. இதன் காரணமாக நடிப்புக்கே பிரதானமளிக்கப்பட்டு, கதையின் போக்கு மிகவும் ரஸமாக அமைந்து இருந்தது. இம்மாதிரி அகில உலகப் புகழ்பெற்ற படங்களின் முறையைப் பின்பற்றி நம் தமிழ்ப் பட வசன கர்த்தாக்கள் சொற்களைக் குறைத்தும் இயற்கையாகவும் அமைத்தால் படத் தொழிலுக்கே ஒரு பெரிய சேவை புரிந்தவர்களாவார்கள்.

B.N. ரெட்டி தமிழ்ப் படம் எடுப்பார்?

சுமங்கலி, சுவர்க்கஸீமா, மல்லீஸ்வரி முதலிய சிறந்த தெலுங்குப் படங்களை டைரக்ட் செய்த B. N. ரெட்டி, தற்சமயம் ஒரு தமிழ்ப் படத்தை எடுக்க விரும்புவதாகத் தெரிகிறது. ஆழ்ந்த கருத்துக்களுள்ள சமூக படங்களுக்குத் தற்சமயம் ஆந்திர தேசத்தை விடத் தமிழ் நாட்டில் அதிகம் வரவேற்கிறார்களாம்.

பரணி ஸ்டுடியோ ஒத்திவைப்பு.

பிரபல ஆந்திர நடிகை பானுமதி, தாம் சொந்தமாகக் கட்டவிருந்த பரணி ஸ்டுடியோவை இப்பொழுது கட்டாமல் தற்காலிகமாக ஒத்தி வைத்திருக்கிறார் என்று தெரிகிறது. அவர் தற்சமயம் தமிழ், தெலுங்கு ஹிந்தி இந்த மூன்று பாஷைகளில் எடுக்கும் "சாந்த்ராணி" என்னும் படம் வாஹினி ஸ்டுடியோவில் பிடிக்கப்பட்டு வருகிறது. இவருடைய அடுத்த சில படங்களும் அங்கே தான் பிடிக்கப்படுமாம்.

"பத்திரிகையின் பிறப்பு"

சமீபத்தில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் "பத்திரிகையின் பிறப்பு" என்ற ஒரு சிறு படம் காண்பிக்கப்பட்டது. இது பத்திரிகைகளுக்குச் செய்தி வருவதையும், அவைகள் முடிவாக அச்சில் வருவதையும் பற்றி, சுருக்கமாகவும், அழகாகவும், சுதேசமித்திரன் உதவி ஆசிரியரான பாஷ்யம் ("சாண்டில்யன்") என்பவரால் எடுக்கப்பட்டது. இதில் இன்னும் சில காட்சிகள் சேர்க்கப்பட்டுப் பொது ஜனங்கள் பார்ப்பதற்குத் திரையிடப்படும் என்று தெரிகிறது.

சென்ற இதழ் தொடர்ச்சி

பிரயாணக் குறிப்புகள்

சி. வி. ராமகிருஷ்ணன்

நேற்று இரவு அருமையான தூக்கம். பாதி ராத்திரி குளிர் அதிகமாகி விட்டபடியால் திரும்பவும் காபினுக்குள் வந்து படுத்துக் கொண்டேன். ஸ்டுவர்டு கொண்டு வந்த தேநீர் பானத்துடன் திருப்பள்ளியெழுச்சி விழா நடைபெற்றது! குளித்துவிட்டுத் திரும்பவும் டெக்குக்குச் சென்றேன். சூரியன் அப்பொழுதுதான் கடல் அலைகளுக்கு மேலே எழுந்து கொண்டிருந்த காட்சி கண்ணைக் கவர்ந்தது. சூரிய கிரணங்கள் அலைகள் மேல் பட்டு, பல வர்ண ஜாலங்களை எழுப்பின. ஆடிக்காற்றில் அலைகள் முழு வேகத்துடன் கொந்தளித்துக் கொண்டிருந்தன. எங்கள் கப்பல் அதிக எடை யுள்ளது; ஆகையால் காற்று எவ்வளவு இருந்தாலும் தாங்கும் என்று பெயர்! அப்படியிருந்தும் ஆடிப்புயலில் கிளம்பிய பேரலைகள் கப்பலை விழுங்கிவிடுமோ என்று தோன்றியது. "Cannon to the Right, cannon to the left, cannon in front and cannon behind" என்பது போல, அலைகள் நான்கு புறங்களிலிருந்தும் கப்பலைத் தாக்கின. ஆனால் எங்கள் ராணி அவற்றை இலட்சியம் செய்யாமல் கம்பீரமாக ஊர்ந்து கொண்டிருந்தாள்.

எட்டேகால் மணிக்குக் காலை உணவை முடித்துக்கொண்டு திரும்பவும் டெக்குக்குச் சென்றேன். காபினுக்குள் வரும் செயற்கைக் காற்று புழுக்கத்தையும் ஒரு வித நாற்றத்தையும் தருகிறது. ஆகையால் காபினில் எனக்கு இருப்புக் கொள்ளவேயில்லை.

மேல் தளத்திலே ஒரே காற்றும் ஆட்டமும். உணவைக் கண்டாலே ஓர் அருவருப்பு. அலைகளைப் பார்த்துக் கொண்டே தலை சுற்றலும் வயிற்றுக் குமட்டலுமாக எப்படியோ நாளைக்கழித்தேன். சாப்பாட்டை முடித்துக் கொண்டு காபினுக்குள் நுழைந்தேனோ இல்லையோ, தலை தானாகப் பேசினுக்கு மேல் கவிழ்ந்தது! இரண்டு நாள் சாப்பிட்ட உணவு வகைகள் மிக வேகமாகப் பேசினை அடைந்தன. அப்புறம் என்ன, படுக்கைதான்! ரகுவின் கோஷ்டியில் நானும் சேர்ந்து விட்டேன்!

காலை எழுந்தவுடன் ஒரே சோர்வு, தலை சுற்றல். உணவைப்பற்றி நினைத்தாலே வயிற்றைக் குமட்டியது! வெறும் கோக்கோ மாத்திரம் சாப்பிட்டு விட்டு டெக்குக்குச் சென்று கண்ணை மூடிக்கொண்டு படுத்து விட்டேன். கண்ணைத் திறந்தால் உலகமே சுற்றுவது போன்ற உணர்ச்சி. தலைவலி வேறு மண்டை உடைக்க ஆரம்பித்து விட்டது. போதாதற்குக் குளிர்வேறு எடுக்க ஆரம்பித்தது. மலேரியாஜ்வரம் பிடித்துக் கொண்டு விட்டதோ என்று கிலி! ஏனடா, இந்தப் பிரயாணத்தை மேற்கொண்டோம் என்று ஆகிவிட்டது. என்ன செய்வது, பாதிக்கிணற்றைத் தாண்டிய பின் முழுவதும் தாண்ட மாட்டேனென்றால் முடியுமா! டாக்டரிடம் சென்றேன். தெர்மாமீடர் 97° காண்பித்தது. நாடி 72, டாக்டர் புன்னகை புரிந்தார் "Home sick or sea - sick?" என்று கேட்டார் (நோய் கடல் பிரயாணத்தாலா அல்லது வீட்டை விட்டு வந்ததாலா?). "இரண்டுந்தான்" என்று அவருக்குப் பதிலளித்து விட்டு, அவர் கொடுத்த ஆஸ்பிரின் மாத்திரையையும் விழுங்கிவிட்டுத் திரும்பவும் டெக்குக்குச் சென்றேன். விஸிடிங் சார்ஜ் 3 ஷில்லிங் கொடுத்ததுதான் மிச்சம்!

மாலை 4 மணிக்குக் கப்பல் அரபிக்கடலைத் தாண்டி, ஏடன் வளைகுடாவுக்குள் நுழைந்தது. கடலை நோக்கினேன். அரபிக்கடலின் நான்கு புறமும் கப்பலைத்தாக்கிய அலைகள் சளைத்துப் பின் தங்கிவிட்டன. எங்கள் ராணி வெற்றியுடன் வளைகுடாவில் அமைதியாகச் சென்று கொண்டிருந்தாள். கப்பலின் ஆட்டம் ஓய்ந்தது. அதனுடன் எங்கள் கடல் நோயும் தீர்ந்தது. நாங்களும் இரண்டு நாளாக அரபிக்கடலில் பட்ட அவஸ்தைகளையெல்லாம் மறந்து விட்டு, நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தோம்.

இன்று எழுந்திருக்கும் பொழுதே ஒரே பசி. காலைச் சிற்றுண்டியை ஒரு கைபார்த்து விட்டு டெக்குக்குக்குச் சென்றேன். இன்னும் சில மணி நேரங்களில் கப்பல் ஏடனை அடையும் என்று தெரிந்தது. நான்கு நாட்களுக்குப் பிறகு நிலத்தைப் பார்க்கப் போகிறோம்



ஏடன் ஸிக்னல் ஸ்டேஷனும் அதன் எதிரிலுள்ள விளையாட்டு மைதானமும்

என்ற நினைவே ஒரு குதூஹலத்தை அளித்தது. அவசர அவசரமாக என்னை வழியனுப்பி உபசரித்த நண்பர்களுக்கெல்லாம் வந்தனம் தெரிவித்துக் கடிதம் எழுதினேன். ஒரு லெட்டருக்குத் தபால்தலை ஆறணா.

நான் சாப்பிடப்போகும் பொழுது தூரத்தில் மலைகள் தெரிய ஆரம்பித்தன. பறவைகள் அங்கு மிங்கும் காட்சியளித்தன. கொஞ்சம் கொஞ்சமாகச் சிலவீடுகளும் கண்ணுக்குப் புலப்பட்டன. நான் சாப்பிட்டு விட்டு வருவதற்கும் கப்பல் ஏடனை அடைவதற்கும் சரியாக இருந்தது. கரை அதிக ஆழமில்லாததால் கப்பல் சற்றுத் தூரத்திலேயே நின்றது. கரைக்குப் போகவேண்டுமானால் ஒருஷில்லிங் கொடுத்து மோட்டார் லாஞ்சில் (Motor launch) போகலாம். இங்கே பாஸ்போர்ட் தொல்லை கிடையாது. இது ஒரு Free-Port அதாவது, யார் வேண்டுமானாலும் இத் துறைமுகத்துக்குத் தாராளமாகச் செல்லலாம். நாணயச் செலாவணி ரூபாயில் நடக்கிறது. இது முன்பே தெரியாததால் நான் ரூபாயெல்லாம் பவுண்டாக மாற்றிக் கொண்டு வந்திருந்தேன். இது Free-port ஆகையால் இங்கு ஏற்றுமதி இறக்குமதி வரி கிடையாது. காமிரா, ரிஸ்ட்வாட்ச், பௌண்டன் பேனா, தர்மாஸ் பிளாஸ்க் அழகிய வேலைப்பாடுடைய காஷ்மீர் கம்பளிகள், பட்டு முதலியன குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன. ரூபாய்கள் கொண்டு போகாததால் பவுண்டுகள் கொடுத்து, silk scarf ஒன்றும் அழகிய முத்து மாலை ஒன்றும் வாங்கினேன். (பவுண்டைக் குறைந்த மதிப்புக்குத்தான் எடுத்துக்கொள்கிறார்கள்) அப்புறம்தான் யாருக்காக முத்துமாலை வாங்கினேன் என்று தெரியவில்லை! ராஜியை விட்டு 12000 மைலுக்கு அப்பால் போகிறோம் என்று மறந்தேபோய்விட்டது; காமிரா விலை ரூ 18. நல்ல ஷர்ட்டுகள் ரூ 6. ரோமர் ரிஸ்ட் வாட்ச் ரூ 65. தெர்மாஸ் பிளாஸ்க் ரூ 5. என் நண்பன் சீனு வந்திருந்தால் ஒரு டஜன் காமிராவாவது வாங்கிப்போட்டிருப்பான்; சாமான்கள் விலையைப் பார்த்தால் எல்லாவற்றையும் வாங்கிவிடலாம்போல் தோன்றியது. ரூபாயாகப் பணமில்லாத குறையால் பேசாமல் திரும்பி வந்துவிட்டேன்.

துறைமுகம் வெறும் கற்பாறைகள் அடங்கிய பிரதேசம். ஆகையால் நாங்கள் போகும்பொழுது ஒரே வெயில். குளிர் காலத்தில் அவ்வளவுக்கவ்வளவு குளிர் அதிகமாக இருக்கும்.

துறைமுகத்திலிருந்து 11 மைல் தூரத்தில் ஒரு பாலைவனச் சோலை இருக்கிறது. அழகிய நந்தவனங்கள் அடங்கிய இடம். மிகவும் ரம்மியமாக இருக்கிறது.

ஏடன் நகரம் துறைமுகத்திலிருந்து 6 மைல் தூரத்தில் இருக்கிறது. ரூ 10 கொடுத்தால் டாக்ஸியில் போய்விட்டுவரலாம். இங்கு மோசடி அதிகமாகையால் நான்கைந்து பேராகச் சேர்ந்து செல்வதுதான் உசிதம்.

மூன்று மணிக்குக் கப்பலுக்குத் திரும்பினோம். கப்பல் புறப்படும் வரை அரேபிய வியாபாரிகள் படகுகளில் சாமான்களைக் கொண்டுவந்து கயிறுகள் மூலம் மேலே அனுப்பி வியாபாரம் செய்கிறார்கள். நல்ல துணிவுள்ள ஜனங்கள்தான்!

மறுபடியும் கப்பல் நகர ஆரம்பித்தது. செங்கடலை நெருங்கத் தொடங்கியது. செங்கடல் குறுகியதாக இருப்பதோடல்லாமல் முக்கியமான கடல் மார்க்கமாகையால் பல கப்பல்களை வழியில் பார்க்கமுடிந்தது. பரந்த அரபிக் கடலில் மனித சஞ்சாரத்தின் அறிகுறியையே கப்பலுக்கு வெளியில் கண்டிராத எங்களுக்கு இதுவும் ஒரு குஷியாகத்தான் இருந்தது. அடிக்கடி இருபுறமும் மலைகள் தெரிய ஆரம்பித்தன. பட்டிக்காட்டான் யானையைப் பார்ப்பது போல எங்களுக்கு ஒரே உற்சாகமாக இருந்தது!

செங்கடலுக்குள் நுழைந்து விட்டோம். செங்கடல் என்ற பெயரைப் பார்த்து, கடல் நீர் சிவப்பாயிருக்கும் என நினைத்துவிடாதீர்கள்! பெயருக்கும் நிறத்திற்கும் சம்பந்தமே இல்லை. கடலின் நிறம் வெயிலில் பசுமையாகவும் மற்ற நேரங்களில் சாம்பல் நிறமாகவும் இருப்பது கண்ணுக்கு ரம்மியமாக இருக்கிறது. நீண்ட மீன்கள் துள்ளித் துள்ளிச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

இன்று இந்திய சுதந்திர தினத்தைக் கப்பலில் கொண்டாடச் சில இந்தியர்கள் ஏற்



சூயஸ் கால்வாயில் கப்பல் செல்கிறது.

பாடு செய்திருக்கிறார்கள். மிஸ் ஐயங்கார் என்பவர் கொண்டாட்டத்தின் பொறுப்பை எடுத்துக்கொண்டார். எல்லா இந்தியர்களை யும் கலந்துகொண்டு செய்திருந்தால் நன்று யிருந்திருக்கும். அவ்விதம் செய்யாதது பல ருக்கு அதிருப்தியை அளித்தது. கொண் டாட்டத்துக்காக அரை மணி கொடுக்கப்பட் டிருந்தது. சமஸ்தான ராஜா ஒருவர் காந்தி யைப் பற்றிப் பேசினார். அவருடைய அறி வுக்காக அல்ல, பதவிக்காகத்தான் அவரைப் பேசச் சொல்லியிருக்க வேண்டும் என்று தோன்றியது! இந்திய தேசிய கீதம் பாடி முடிந்தவுடன் மியூஸிக் என்று அறிவித்து விட்டு ரிகார்டுகளை வைத்தது கொஞ்சம்கூட அழகாக இல்லை. காப்டன் எல்லோருக்கும் இனமாக ஐஸ்கிரீம் சப்ளை செய்தார். பகலில் காற்று நெருப்பாய்க் கொதித்தது. ஒருவேளை இதனால்தான் கடலுக்குச் செங்கடல் என்ற பெயர் வந்ததோ என்னவோ! ஒரு புறம் அரேபிய பாலைவனம். இன்னொரு புறம் ஸஹாரா பாலைவனம். நடுவில் வீசும் காற்று எப்படிக் குளுமையாக இருக்கும்!

இரு புறமும் அடிக்கடி கப்பல்கள் எங்கள் கப்பலைக் கடந்து செல்கின்றன. கண்ணுக் கெட்டிய தூரத்தில் நிலத்தைப் பார்க்க முடிகிறது. பெரிய பெரிய மீன்கள் விதவித மான மீனகள் துள்ளி விளையாடுவது அழ காக இருக்கிறது.

இரவு 'Annie goes to the gun' என்ற படம் காட்டினார்கள். ஹாலில் உட்கார்ந்து படம் பார்க்கும்பொழுது கப்பலில் இருக் கிறோம் என்ற எண்ணமே இல்லை.

டெக்கில் ஒரே குளிர் எடுக்க ஆரம்பித்து விட்டது. கீழே இறங்கி வந்து காபினில் படுத்துக் கொண்டேன்.

காலை 11 மணிக்கு மேல் இரு பக்கங்களி லும் மலைகளும் பாலைவனங்களும் நன்றாகத் தெரிய ஆரம்பித்தன. மத்தியானத்திற்குப் பிறகு பெரிய கட்டிடங்களும் தெரிய ஆரம் பித்தன. கப்பல் சூயஸ் கால்வாய் வாயிலுக்கு வந்து நின்றுவிட்டது. இங்கு நான்கு மணி நேரம் கப்பல் நிற்கும்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஓடக்காரர்கள் வந்து தங்கள் ஓடங்களைக் கப்பலுடன் இணைத்தார்கள். ஓடங்களால் ஒரு பாலமே அமைந்துவிட்டது! ஐந்து நிமிஷங்களில் ஓடங்களின் வரிசை ஒரு பெரிய கடைத் தெருவாக மாறிவிட்டது. வியாபாரிகள் 'கிடு கிடென்று வந்து தங்கள் சரக்குகளை ஓடங்க ளில் நிரப்பினார்கள். கப்பலிலிருந்து "என்ன விலை" என்ற குரல்களும் "pipteen" (fifteen) 'pour' six (four, six) என்ற பதில்களும் காதைத் துளைத்தன. சந்தை இரைச்சல் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்! தோல் பெட்டிகள், பைகள் முதலியன ஏராளமாகக் கிடைக்கின் றன. விலை ரூ 25-லிருந்து ரூ 35வரைதான். 13 ரூபாயிலிருந்து520ரூபாய்வரை விலையுள்ள ரத்தினக்கம்பளங்கள் இருந்தன. செருப்புகள் அழகிய வேலைப்பாடுடைய பர்ஸுகள்(Hand-bags) மரப்பெட்டிகள் முதலியன லாபமாக விற்கப்பட்டன. இந்தச் சாமான்களை ஆங்கி லேயர்கள் ஆவலுடன் வாங்குகிறார்கள். நான் ஒரு மணிமாலை (Glass beads) ஒன் றும் இரண்டு யானைகள் அழகாகச் செதுக் கப்பட்ட ஸெல்லுலாய்டு மோதிரம் ஒன்றும் வாங்கிக்கொண்டேன். எதற்காக வாங்கி னேன் என்பது எனக்கே புரியவில்லை! கடை யென்றால் ஏதாவது வாங்க வேண்டு மல்லவா!

இரவு ஏழு மணிக்குக் கப்பல் சூயஸ்கால் வாய்க்குள் நுழைந்து விட்டது. பத்திரிகை களில் இப்பொழுது மும்முரமாக அடிபடும் பிரதேசங்களில் சூயஸ்கால்வாயும் ஒன்று. எங்கே அடுத்த மகாயுத்தம் காலாக்கினி மாதிரி கிளம்பிவிடுமோ என்று பயப்படும் படி இங்கே கடந்த சிலமாதங்களாக, சதா புகைந்து கொண்டிருக்கிறது.

இந்தக் கால்வாய் நூறுமைல் நீளமுள்ளது. அகலம் 200 அடிதான். அதிலும் கப்பல் செல்லக்கூடிய பாகம் 100 அடிதான். ஏனெ னில் ஓரங்களில் அடிக்கடி மண் மேடிட்டு விடுகிறது. மணல் மேட்டில் கப்பல் இறங்கி விட்டால் அப்புறம் அதோ கதிதான்!

வலதுபுறம் வெறும் பாலைவனம். இடது புறம் கரையோரமாகச் செல்லும் ரயில்பாதை யையும் அதன்மீது போகும் புகைவண்டிகளை யும் பார்க்க முடிகிறது. 100 மைலைக் கடக்க 15 மணி நேரமாகிறது! அதாவது சைகிள் வேகத்தைவிடச் சற்றுக் குறைவு! குறுகிய



கெய்ரோவின் பிரமிட்டுகள்

கால்வாய் ஆதலால் ஒரே சமயத்தில் பல கப்பல்கள் செல்ல முடியாது. ஒன்றன்பின் ஒன்றாகத்தான் செல்ல வேண்டும். அதுவும் ஒரே திசையில்தான் கப்பல்கள் ஒரு சமயத்தில் அனுமதிக்கப்படுகின்றன. (One Way traffic)

சூயஸ் கால்வாய் மனிதனுடைய ஓர் அற்புதமான சாதனம் என்று சொல்லவேண்டும். இக்கால்வாய் 1869இல் வெட்டப்பட்டது. இதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் பெர்னாண்டிஸ். இரு பெருங்கடல்களாகிய மத்தியதரைக் கடலும் அரபிக் கடலும் நடுவே ஒரு துண்டு நிலத்தால் பிரிந்திருந்தன. இப்போது மனிதனால் வெட்டப்பட்ட கால்வாய் மூலம் அவை இணைக்கப்பட்டுள்ளன. பெரிய கப்பல்கள் செல்லும்படியான ஆழத்துக்கு ஒரு செயற்கைக் கால்வாய் வெட்டியிருப்பது அதிசயத்திலும் அதிசயமே. இத்தனைக்கும் கால்வாய் சென்னையிலுள்ள பக்கிங்ஹாம் கால்வாய் அளவு கூட அகலமில்லை.

இப்பொழுது சூயஸ் கால்வர்ய் விஷயமாக உள்ள தகராறுக்கு அடிப்படை இதுதான். கால்வாய் ஆங்கிலேயர்களைச் சேர்ந்த சூயஸ் கம்பெனிக்குச் சொந்தம். கம்யெனியார் கால்வாய் வழியாகச் செல்லும் ஒவ்வொரு கப்பலுக்கும் ரூ 10000 கட்டணம் வசூல் செய்கிறார்கள். இந்த வரும்படியெல்லாம் ஆங்கிலேயர்களுக்கே செல்கிறது. கால்வாயோ எகிப்து தேசத்திலுள்ளது. தங்கள் நாட்டிலிருந்து பெரும் பொருளை ஆங்கிலேயர்கள் கொண்டு போவதை எகிப்தியர் வெறுக்கின்றனர். தங்கள் தேசத்திலுள்ள கால்வாயில் தங்களுக்கே உரிமை உண்டு என்று கிளர்ச்சி செய்கிறார்கள், மேலும் உலகப் போக்கு வரவுக்கு இது மிகவும் முக்கியமானதாகையால் பிரிட்டன் இங்கே தன் படைகளை வைத்திருக்கிறது. தங்கள் தேசத்தில் அன்னிய ராணுவத்தினர் இருப்பதையும் எகிப்தியர்கள் விரும்பவில்லை. ஆங்கிலேயர்கள் சில ராணுவ ஸ்தலங்களையும் (Military bases) வைத்திருப்பதும் சூடானில் தங்கள் ஆட்சியைச் செலுத்துவதும் வேறு தகராறுக்கான விஷயங்கள்.

சூயஸ் கால்வாய் தோண்டி, சுமார் நூறு வருஷங்கள் தான் ஆயின. ஆனால் சரித்திர ஆராய்ச்சியிலிருந்து சுமார் நான்காயிரம் வருஷங்களுக்கு முன்பே செங்கடலையும் நைல் நதியின் முகத்துவாரத்தையும் இணைக்கும் ஒரு கால்வாய் பண்டைய எகிப்தியர்களால் வெட்டப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் அது சிறு படகுகள் மாத்திரமே செல்லக் கூடியதாக இருந்திருக்க வேண்டும். நிற்க, சூயஸ் கம்பெனியில் பங்குகளைச் சர்க்கார் சார்பாக வாங்கிய இங்கிலாந்து பிரதம மந்திரி டிஸ்ரேலி பார்லிமென்டைக் கேட்காமல் அவ்விதம் அதிகப் பிரசங்கித்தனமாக நடந்து கொண்டதற்காகப் பலத்த கண்டனங்களுக்குள்ளானார்! அவருடைய அவசரத் தீர்மானத்தின் விளைவைப் பெரும் லாபமாக ஆங்கிலேயர்கள் நீண்டகாலம் அனுபவித்தாகி விட்டது!

இன்று காலை 10 மணிக்கு 'ஸையத்' துறைமுகம் சேர்ந்தோம். (Port said) கப்பல் நின்றதும் gangway (கப்பலையும் கரையையும் இணைக்கும் படிகள்) போடப்பட்டது. எகிப்திய போலீஸ் அதிகாரிகள் மேலே ஏறி வந்து Health Certficate, Pass-Port முதலியவற்றைப் பரிசோதித்து வாங்கிக்கொண்டு ஒரு சீட்டுக் கொடுக்கிறார்கள். அது இருந்தால்தான் துறைமுகத்துக்குள் நுழையலாம். இங்கும் தோல்சாமான்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. துறைமுகப் பட்டினம் சுமார் ஒரு சதுர மைல் விஸ்தீரணம் இருக்கும். தெருக்கள் குறுக்கும்நெடுக்குமாக அகலமாக இருக்கின்றன. பெரிய கட்டிடங்கள் ஏராளமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. இது ஒரு சர்வதேசப்பட்டணம் (International City). உலகிலுள்ள எல்லாத் தேசத்தாரையும் சாதியாரையும் இங்குக் காணலாம். கடைகள் அதிகம். ஊரிலிருந்து ஐந்துமைல் தூரத்தில் பிரசித்திபெற்ற நைல் நதி ஓடுகிறது. ஒரு டாக்ஸியில் நதிக்கரைக்குச் சென்று வந்தோம். நைல் நதி கடலில் கலக்கும்பொழுது நதி கடல் இரண்டும் நீல நிறமாகவே இருக்கின்றன. ஆனால் நதி ஜலம் காவேரி ஜலம் மாதிரி நன்றாக இருக்கிறது. கடல் நீர் ஒரே உப்புத்தான்!

Cairo என்ற பிரசித்திபெற்ற நகரம் இங்கிருந்து 200 மைல் தூரத்தில் உள்ளது. இங்குள்ள பிரமிட்களில் (Pyramids) அதாவது?

செயற்கைக் குன்றுகளில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இறந்தவர்களுடைய உடல்களைப் பத்திரமாகப் பதப்படுத்தி வைக்கப்பட்டு, இன்னும் கெடாமல் இருக்கின்றன.

துறைமுகத்தில் ஒரு பெரிய ம்யூசியம் இருக்கிறது. அழகிய சித்திரங்களை (பழங்காலத்தைச் சேர்ந்தவை) இங்குக் காணலாம். இந்தியாவில் இருப்பது போல் இங்கும் பல சித்திரங்கள் நிர்வாணமாக உருவங்களைக் காட்டுகின்றன. ஊரில் ஒரு பெரிய ஐரோப்பிய ஹோட்டல் உள்ளது. பெரிய மசூதி ஒன்று இருக்கிறது. நாணயச் செலாவணி பௌண்டில் நடக்கிறது. ஆனால் இப்பொழுது பிரிட்டிஷ் பவுண்டின் மதிப்பு எகிப்திய பவுண்டின் மதிப்பை விடக் குறைவு (பிரிட்டனில் பவுண்டின் மதிப்பு வேண்டுமென்றே குறைக்கப்பட்டது எல்லோருக்கும் தெரியும்).

நம் ஊர் 'bunk' கடைகள் போன்ற வீடுகளைச் சமுத்திரக் கரையில் அமைத்துக் கொண்டு பலர் வசிக்கின்றனர். பலர் குடையைப் பிடித்துக் கொண்டு சமுத்திரக் கரையிலேயே உட்கார்ந்து பொழுதைப் போக்கிவிடுகிறார்கள்.

ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு வர 2½ பவுண்டு டாக்ஸிக்குக் கொடுத்தோம். எங்கள் கூட வந்த வழிகாட்டி ஏழு பாஷைகள் அறிந்திருந்தான். நாங்கள் இந்தியர்களா பாகிஸ்தானிகளா என்று அறிய விரும்பினான்! பாகிஸ்தானுடைய விஷமப் பிரசாரம் இங்கு நன்றாகப் பரவியிருப்பதுபோல் தோன்றுகிறது! இவர்களுடன் பழகும்பொழுது மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எதற்கும் துணிந்த முரடர்கள். ஒரு சில ஷில்லிங்குகளுக்காக ஆளையே கொலை செய்துவிடுவார்கள்.

இத் துறைமுகத்துடன் சூயஸ் கால்வாய் முடிவடைகிறது. இங்கே இக்கால்வாய்க்குக் காரண பூதரான Fernand-le-Lessep-இன் சிலை கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. கப்பல் துறைமுகத்தை விட்டு நகரும் பொழுது இச்சிலை கடலை நோக்கிக்கொண்டு அழகாக நிற்பதைக் காணலாம்.

கப்பல் மத்திய தரைக்கடல் நடுவில் போக ஆரம்பித்து விட்டது. இக்கடல் செங்கடலைப்போல் அமைதியாக இல்லை. திரும்பவும் பெரிய அலைகள் வந்து மோத ஆரம்பித்து விட்டன.

மாலை இரண்டு மணிக்கு க்ரீட் என்னும் தீவு தெரிந்தது. (இது கிரேக்க நாட்டை அடுத்துள்ளது) வீடுகளும் தெரிய ஆரம்பித்தன. ஆனால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. பைனகுலர் (Binoculars) எடுத்துக் கொண்டு வராததற்காக வருந்தினேன். கடல் பிரயாணம் செய்பவர்கள் அவசியம் 'பைனகுலர்' கொண்டு வர வேண்டும். தூரத்தில் இருப்பதையும் நடப்பதையும் பைனகுலர் மூலம் பார்த்துக் கொண்டேயிருப்பது ஒரு நல்ல பொழுது போக்காக இருக்கிறது.

கப்பல் இத்தாலிக்கும் ஸிஸிலிக்கும் நடுவில் சென்று கொண்டிருக்கிறது. இரு பக்கமும் மலைகளும் கரையோரமுள்ள பட்டணங்களும் தெரிகின்றன. கடல் ஓர் அமைதியான ஏரி போல் இருக்கிறது. இக்கடலைப் பார்த்ததும் எனக்குப் பறங்கிப்பேட்டை ஞாபகம் வந்தது. நான் சிதம்பரத்திலிருந்த பொழுது "பறங்கிப்பேட்டை சமுத்திரம் மிகவும் அழகாக இருக்குமாம்; நாம் போய்ப் பார்த்துவிட்டுவரலாம்" என்று ராஜி ஓயாமல் வற்புறுத்தினாள். சரியென்று இருவரும் புறப்பட்டுப் பறங்கிப்பேட்டை ஸ்டேஷன் போய்ச்சேர்ந்தோம். ஸ்டேஷனிலிருந்து கடற்கரை எங்கே என்று விசாரித்துக்கொண்டு வழிதெரியாமல் சுற்று வழியாக ஐந்துமைல் நடந்து ஒருவாறாக கடற்கரையை அடைந்தோம். வழியில் ஒரு சோடாவுக்குக்கூட வழியில்லை! "இது என்ன தரித்திரம் பிடித்த ஊர்! ஒரு சோடாக்கடைகூடக் காணோம்" என்று நான் குறைகூறிக் கொண்டிருந்த பொழுதே அவ்வூர்க்காரி ஒருத்தி "ஏன் சாமி எங்க ஊரை திட்டறீங்க?" என்று சண்டைக்கு வந்துவிட்டாள்! அவள் காட்டிய சோடாக்கடையில் ஒரு சோடா வாங்கிக் குடித்தேன். அதன் நாற்றம் அந்த ஊர் மீன் நாற்றத்தையும் சாக்கடை நாற்றத்தையும் தோற்கடித்து விட்டது! இதற்கு நடுவில் பலத்த மழைவேறு ஆரம்பித்துவிட்டது! இவ்வளவையும் பொறுத்துக் கொண்டு கடற்கரையை அடைந்தால் கடல் வெறும் குளம் மாதிரி இருந்தது!

சென்னைக் கடற்கரைக்குச் செல்பவர்களில் பெரும்பாலார் கடல் என்றால் எங்கும் ஒரே மாதிரி இருக்கும் என நினைக்கிறார்கள். சென்னையிலேயே கடல் ஒரு சமயம் போல் இன்னொரு சமயம் இருப்பதில்லை. பச்சை, சாம்பல், நீலம், கருநீலம் ஆகிய நிறங்களுடன் மாறி மாறித் தோற்றமளிக்கிறது. தரங்கம்பாடி பறங்கிப்பேட்டை முதலிய இடங்களில்

முற்றிலும் வேறு மாதிரியாக இருக்கிறது கடல்.

சரி—கப்பலை விட்டு 5000மைல் தூரத்தில் மனம் சஞ்சரிக்க ஆரம்பித்து விட்டது!

மத்தியதரைக் கடலில் கப்பல் சென்று கொண்டிருந்த பொழுது ஸ்ட்ராம் போலி தீவு கண்ணுக்குப் புலப்பட ஆரம்பித்தது. பிறகு மலைகளும் வீடுகளும் தெரிந்தன. சற்று நேரத்துக்கெல்லாம் மலை உச்சியில் இரண்டு இடங்களில் புகை தெரிந்தது. பிறகு மலையில் அங்கங்கே சிவப்புப் புடங்கள் தோன்ற ஆரம்பித்தன. திடீரென்று அவை நெருப்புக் கக்க ஆரம்பித்தன. எரிமலைக் குழம்பு குபீர் குபீரென்று வெள்ளம் போல் வெளிக்கிளம்பியது. "வெடிபடும் அண்டத்து இடிபல தாளம் போட" என்று பாரதியார் பாடியிருப்பது ஞாபகத்துக்கு வந்தது. பாவம்! என் பூகோள வாத்தியார் பார்க்காமல் வருணித்த காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்! குருவுக்கு மிஞ்சிய சிஷ்யன். வயிற்றில் நெருப்பை வைத்துக்கொண்டு என்று சொல்வார்கள். இத்தீவிலுள்ள மக்கள் எப்பொழுதும் தலையிலேயே நெருப்பை வைத்துக்கொண்டிருக்கிறார்கள! சிவபெருமான் நெற்றிக்கண் திறந்தால் இப்படித்தான இருக்குமோ, என்னவோ! அடிக்கடி ஏற்படும் இந்த ஆபத்துக்குத் துணிந்து ஜனங்கள் எப்படித்தான் இங்கு வசிக்கிறார்களோ என்று வியந்தேன். ஜனங்கள் எவ்வளவு துன்பப் பட்டார்களோ, தெரியாது—ஆனால் மலை வெடித்து எரிந்து தூரத்திலிருந்து பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது! மனிதனுடைய மிக்க ஆடம்பரமான வாண வேடிக்கைகளைவிட இயற்கை யன்னையின் இந்த வாண வேடிக்கை பன்மடங்கு அழகும் கம்பீரமும் வாய்ந்தது. ஆனல் அதன் மூலம் மக்களுக்கு ஏற்படும் துன்பத்தை நினைத்துப் பார்க்கும் பொழுது இயற்கையன்னை தன் விளையாட்டு மும்முரத்தில் மற்ற எல்லாவற்றையும் மறந்து விடுகிறாள் என்று தோன்றுகிறது!

இன்று காலை மார்சேல்ஸ் (Marseilles) வந்து சேர்ந்தோம். இது பிரான்ஸின் முக்கியமான துறைமுகம். இங்கே சீதோஷ்ண ஸ்திதி எப்பொழுதும் ஒரே சீராக, இரம்மியமாக இருப்பதால் பல நாட்டினர் தங்கள் விடுமுறை நாட்களைக் கழிக்க இங்கு வருகிறார்கள். வியாதியஸ்தர்களும் தங்கள் உடல் நலத்தைக் கருதி இங்கு வந்து வசிக்கிறார்கள்.

இறங்குவதற்கு அனுமதிச் சீட்டு (Landing card) வாங்கிக்கொண்டு துறைமுகத்துக்குள் நுழைந்தோம். 1 பவுண்டுக்கு 920 பிராங்குகள் வீதம் (பிராங்கு (Franc) தான் பிரெஞ்சு நாணயம்) மாற்றிக் கொண்டு ஊர் சுற்றக் கிளம்பிவிட்டோம். உல்லாசப் பிரயாணத்திற் கென்றே சில பஸ்ஸுகள் ஓடுகின்றன. (PleasureTrip Bus) அவை ஒன்றில் ஏறிக்கொண்டு கிளம்பினோம்.

ஆறு வருஷங்களுக்கு முன் முடிந்த உலக மகாயுத்தத்தின் கோரத்தன்மை இன்னும் இங்கு நன்ருக விளங்கிக் கொண்டிருக்கிறது. அப்பொழுது குண்டு வீச்சுக்கு இரையான கட்டடங்களை இன்னும் பழுது பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மானியர்கள் இப்பிரதேசத்தை ஆக்கிரமித்த பொழுது அவர்கள் கப்பல்கள் வந்து தங்குவதற்கும் நிலக்கரி போட்டுக் கொள்வதற்கும் ரிபேர்கள் செய்வதற்கும் ஒரு பெரிய தளம் ஒன்று கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்குள் உலக மகாயுத்தத்தின் போக்கே மாறியபடியால் அந்தத்தளம் அப்படியே பாதி கட்டியபடி இருக்கிறது!

எங்கே பார்த்தாலும் 'வலது பக்கம் போ' (Keep to the Right) என்று பலகைகள் காணப்படுகின்றன. மற்ற நாடுகளில் (Keep to the Left) என்றிருக்கும் பொழுது பிரான்ஸில் மாத்திரம் விதி மாறியிருப்பதற்குக் காரணம் என்னவோ!

துறைமுகத்திலிருந்து ஐந்துமைல் தூரத்தில் கடைவீதி இருக்கிறது. இதற்கு Cannebiere என்று பெயர். கடைகளில் வியாபாரத்தைக் கவனித்துக் கொள்பவர்கள் பெரும்பாலும் பெண்களே. எங்கே பார்த்தாலும் க்யூவரிசைகள்! ஐஸ்க்ரீம், பெப்பர்மின்ட், திராக்ஷை, மதுபானவகைகள், பழங்கள் முதலியன ஏராளமாகக் கடைகளில் கிடைக்கின்றன. எங்களுக்குப் பிரெஞ்சு பாஷை தெரியாததால் கையைக்காட்டிச் சாமானை வாங்கிக்கொண்டு பணத்தைக் கொடுத்தோம். அவர்கள் கொடுத்த பாக்கிச் சில்லறையை கணக்குத் தெரியாமல் வாங்கிக்கொண்டு பேசாமல் வருவதைத் தவிர வேறு வழியில்லை.

கடை வீதிக்கருகில் படகுகளில் உல்லாசப் பிரயாணம் செய்யும் இடம் (Back water) இருக்கிறது. ரோமர்கள் காலத்திய புராதனக் கட்டிடங்கள் எங்குப் பார்த்தாலும் நம் தென்னிந்தியக் கோவில்கள் மாதிரி பிரம்

நாட்டர் டாம் மாதாகோவில்—மேலே ஏசு கிருஸ்துவின் தங்கச்சிலையைக் காணலாம். மலைச்சரிவையும் மேலே ஏறுவதற்குப் படிக் கட்டுகளையும் கவனிக்க வேண்டும்.

மாண்டமான தோற்றத்துடன் காட்சி அளிக்கின்றன.

ஊருக்குள் 'நாட்டார் டாம்' (Nottre dam) என்ற பெரிய 'சர்ச்' (Church) ஒன்று இருக்கிறது. Hunch Back of Nottre dam என்ற படத்தில் இந்தக் கோயிலைப் பலர் பார்த்திருக்கலாம். கோயிலின் சிகரத்தில் ஏசுகிறிஸ்துவின் தங்கச்சிலை ஒன்று இருக்கிறது. இக்கோயில் ஒரு மலை மேல் இருப்பதால் இங்கிருந்து ஊர் முழுவதையும் பார்க்கலாம்.

மலை மேல் La-Cassis என்று ஒரு சிறிய ஊர் இருக்கிறது. உல்லாசப் பிரயாணத்துக்குத் தகுந்த இடம் என்று கேள்விப்பட்டு அங்கு புறப்பட்டோம். திருப்பதிக்குச் செல்வது போல் பஸ் மலையைச் சுற்றிச் சுற்றிச் செல்கிறது. வழியில் இருபுறமும் அடர்ந்த மரங்கள். ஆறாயிரம் அடி உயரமுள்ளது. இம் மலையிலிருந்து ஒருபுறம் காடுகள் அடர்ந்த மலைச்சரிவுகளையும் பள்ளத்தாக்குகளையும் இன்னொருபுறம் சமுத்திரத்தையும் பார்க்க முடிகிறது. இக்காட்சியின் கம்பீரமும் சௌந்தர்யமும் ஒருமுறை கண்டவர்க்கு என்றும் மனத்திலிருக்கும். இங்கு ஏராளமான மக்கள் பொழுது போக்குக்காக வருகிறார்கள். நம் நாட்டிலும் திருப்பதி போன்ற அழகிய இடங்களில் தக்க வசதிகள் செய்து கொடுத்தால் எத்தனையோ பேர் வருவார்கள். La-Cassis லிருந்து நாங்கள் அவசர அவசரமாகத் திரும்புவதற்கும் கப்பல் புறப்படுவதை அறிவித்துச் சங்கு ஊதுவதற்கும் சரியாக இருந்தது! இந்த மட்டில், இயற்கையழகில் லயித்துப்போய் கப்பலைக் கோட்டை விடாமல் இருந்தோமே என்று சந்தோஷப்பட்டோம்.

மறுபடியும் அலைகள் கொந்தளிக்க ஆரம்பித்துவிட்டன. அட்லான்டிக் சமுத்திரத்தில் அலைகள் அதிகமானதால் அதைக் கடந்து இங்கிலாந்து சேரும் வரை இப்படித்தான் இருக்கும்.

ஸ்பெயினுக்குப் பக்கமாகக் கப்பல் செல்லும் பொழுது ஜிப்ரால்டரைப் பார்க்க முடிகிறது. வெறும் கற்பாறைகளாலான இச்சிறு தீவுக்காகவா வல்லரசுகளிடை இத்தனை பெரும் பூசல்கள் என்ற எண்ணம் தோன்றியது!

கடந்த ஐந்து நாட்களாகக் கப்பலில் ஒரே ஆட்டம். மறுபடியும் பழையபடி தலை சுற்றல். ரகு திரும்பவும் டெக்கில் அங்கப் பிரதட்சிணம் செய்ய ஆரம்பித்து விட்டான்!

இன்று காலையில் லண்டன் துறைமுகம் தெரிய ஆரம்பித்தது. கப்பல் கடைசியாகக் கரைக்கு வந்து சேர்ந்து விட்டது. பாஸ்போர்ட்டை அதிகாரிகளிடம் காண்பித்து

La Cassis மலையினின்று பார்க்க முடியும் சமுத்திரக் காட்சி



விட்டு லண்டனில் இறங்க அனுமதிச் சீட்டு வாங்கிக்கொண்டோம். Batch Batch ஆகத் தான் வெளியே விடுகிறார்களாகையால் வெளியே போவதற்குக் காத்திருக்க வேண்டியிருந்தது. நானும் ரகுவும் வெளியே வர மத்தியானம் 2 மணியாகிவிட்டது Customs-Hall-க்குச் சென்று எங்கள் சாமான்களை அதிகாரிகளுக்குக் காண்பித்து விட்டு வெளியே சென்று பஸ்ஸில் ஏறிக்கொண்டோம். நாங்கள் தங்குவதற்காகப் பிரயாண ஏஜெண்டுகள் ஒரு ஹோட்டலில் இடம் முன்பாகவே ஏற்பாடு செய்திருந்தார்கள். ஹோட்டல் துறைமுகத்திலிருந்து முப்பதுமைல் தூரத்தில் இருந்தது. பஸ்ஸில் போகும் பொழுது இங்கிலாந்தின் நாட்டுப்புறப் பிரதேசங்களையும் பார்க்க முடிந்தது. தொழிலாளிகளின் வீடுகள் ஒரேமாதிரியாக வரிசை வரிசையாகக் கட்டப்பட்டுள்ளன. வீடுகளுக்கு முன்புறமும் பின்புறமும் தோட்டங்கள். பச்சைப்பசேலென்று கண்ணைக்கவரும் அழகிய மரங்கள். ஆங்காங்கே சில 'வொர்க்ஷாப்புகள்' வெயிலடித்துக்கொண்டிருந்தாலும் இடை இடையே மழை சிறு துளிகளாகப் பெய்துகொண்டிருந்தது பன்னீர் தெளிப்பது போல் இருந்தது. பஸ் 'டெர்மினஸ்ஸை' அடைந்ததும் சாமான்களை எடுத்துக்கொண்டு டாக்ஸிக்காக'க்யூவில்' காத்திருந்தோம். ஒரு வழியாக எங்கள் ஹோட்டலுக்குப் போய்ச் சேர்வதற்குள் மணி ஆறு ஆகிவிட்டது. அப்பாடா இந்தக் கப்பல் யாத்திரை ஒருவாறு முடிந்தது என்ற ஆச்வாசத்துடன் உடனே போஜனத்தை முடித்துக்கொண்டு படுத்துறங்கச் சென்றுவிட்டோம்.

(லண்டன் அனுபவங்களைப் பற்றிய கட்டுரை தொடரும்)

நினைவு

முத்து-சுப்ரமணியன்

சாவித்திரி வாசல் பக்கத்து அறையில் உட்கார்ந்து கொண்டு ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு வயது அதிகம் ஆகவில்லை. ஆனால் நெற்றியிலே குங்குமம் இல்லை.

அவள் இந்த நிலைக்கு வந்து ஒரு மாதந்தான் ஆகிறது. இந்த ஒரு மாதத்தில் அவள் பழக்க வழக்கங்களெல்லாம் அடியோடு மாறி விட்ட போதிலும் தினமும் சாயந்திரம் இப்படி உட்கார்ந்திருப்பது மட்டும் மாறவில்லை. முன்பெல்லாம் ஆபீசிலிருந்து அவன் திரும்பி வருவதற்காகக் காத்துக்கொண்டிருப்பாள். இபபோது அவனைத் தேடி வர யாரும் இல்லை. ஆனாலும் தினமும் சாயந்திரம் மணி நான்கு அடித்தவுடன் அவளுக்கு 'திக்' கென்றிருக்கும். அவசரமாகக் காப்பி தயாரிப்பாள் பிறகு அவன் வருவதற்குக் காத்திருப்பவள்போல ஜன்னலருகில் உட்கார்ந்திருப்பாள் ஒரு வாரமாகத் தினமும் இது நடக்கிறது. சாயந்திரம் ஆனவுடன் ஏதோ ஒரு பிரமை. அவளுக்கே புரியாத, அவளாலேயே தடுத்து நிறுத்த முடியாத இந்தச் சக்தி தானாக வந்ததுபோலத் தானாகப் போய் விடும். ஜன்னலருகில் உட்கார்ந்திருக்கும்போது கொஞ்சம் கொஞ்சமாகப் பிரக்ஞை வரும். கண்கள் நீரைக் கக்கும்.

ஆனால் அன்று மட்டும் இந்தப் பிரமை ஏற்படவில்லை. மனம் நிறைந்திருப்பது போன்ற உணர்ச்சி!

வெளியிலே உலகம் மிகச் சுறுசுறுப்பாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்தது—சாயந்திரமல்லவா? ஜோடி ஜோடியாக உலாவக் கிளம்பிவிட்ட தம்பதிகளைப் பார்த்து அவள் தான் வாழ்ந்த நாட்களை நினைத்துக் கொண்டாள். நினைவு எங்கெங்கேயோ போய்ச், சுற்றி விட்டுத் திரும்பி வந்தது.

தெருவில் சிறுவர்கள் விளையாட்டினால் கிளம்பிய புழுதி ஜன்னல் வழியாக உள்ளே வந்தது. சாவித்திரி ஜன்னலில் கட்டியிருந்த திரையை இழுத்து மூடிவிட்டுத் திரும்பினாள். கூடத்தில் வைத்திருந்த கண்ணாடி 'பீரோ' அவள் கண்களில் பட்டது. அது பழங்கதையை அவளுக்கு நினைவூட்டிற்று.

* * *

நாதஸ்வரம் மங்களமாக முழங்கிக் கொண்டிருந்தது. குழந்தைகள் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தன. வீடு முழுதும் குதூஹலம். சாவித்திரிக்குக் கலியாணம். ஒருவருக்கும் மனத்தாங்கல் இல்லாமல் நிச்சயிக்கப்பட்ட கலியாணம், சாவித்திரிக்கு மனது குறுகுறுத்துக் கொண்டிருந்தது. ரகு தன் கையால் அவள் கழுத்தில் மங்கலக் கயிற்றைக் கட்டிவிட்டபோது அவள் கண்களில் உணர்ச்சிப் பெருக்கால் நீர் நிறைந்திருந்தது, அவனருகில்

உட்கார்ந்திருந்தபோது அவனைத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று அவளுக்கு ஆசை. ஆனால் வெட்கம் அவளை மூடிற்று. அப்போது தான் சமயசஞ்சீவிபோல அவர்களுக்கு நேர் எதிரே இருந்த கண்ணாடி 'பீரோ' அவளுக்கு உதவிற்று. தலையை நிமிர்ந்த அவளைக் கண்ணாடிக்குள்ளிருந்து ரகு பார்த்துப் புன்னகை புரிந்தான். அப்போதே அவளுக்கு அந்தப் 'பீரோ' வின்மேல் ஒரு ஆசை விழுந்துவிட்டது. குடித்தனம் வைக்கும் போது அப்பாவிடம் கேட்டு அதைத் தன்னுடன் கொண்டுவந்து விட்டாள்.

* * *

ஏதோ நினைத்துக் கொண்டவள்போல அவள் எழுந்து சென்று கண்ணாடியில் தன்னையே பார்த்துக் கொண்டாள். திலகமில்லாத நெற்றியும் மாங்கல்யம் இல்லாத கழுத்தும் அவளைப் பார்த்துச் சிரித்தன. கண்ணைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டாள். மேஜைமேல் வைத்திருந்த சில கடிதங்கள் காற்றில் பறந்து கீழே கிடந்தன.

* * *

அவனுடன் அவள் வாழ்க்கையை ஆரம்பித்த புதிது. ஒரு நாள் சாயந்திரம் அவள் உள்ளே காரியமாக இருந்தாள். ஆபீசிலிருந்து திரும்பின ரகு நேரே தன் அறைக்குள் நுழைந்தான்.

“சாவித்திரி...” அவன் இரைந்து கத்தினான்.

சாவித்திரி ஓடி வந்தாள். அவன் அறையில் மேஜையின்மேல் வைத்திருந்த காகிதங்களெல்லாம் காற்றில் பறந்து தாறுமாறாகக் கிடந்தன.

“நீ நாள் முழுவதும் இங்கே தானே இருந்தாய்? இதை யெல்லாம் கவனிப்பதைவிட வேறென்ன வேலை......”

அவன் கோபத்தைக் கண்டு சாவித்திரி பயந்து விட்டாள்.

“இல்லை.........வந்து.........நான் கவனிக்கவில்லை......”

“அதுதான் தெரிகிறதே.........வேறென்ன வெட்டி முறித்துக் கொண்டிருந்தாயோ...”

“......உள்ளே ஏதோ......”

“சரிதான் வாயை மூடு-உன் விளக்கங்களை யார் கேட்டார்கள்......”

சாவித்திரி பேசாமல் உள்ளே போய்விட்டாள். ஆபீசில் ஏதாவது தொந்தரவாக இருக்குமென்று அவன் கோபத்தைப் பொருட்படுத்தவில்லை. உள்ளே அடுப்பிலிருந்து கிளம்பின புகை அவள் கண்களைச் சிவக்கவைத்தது.

கொஞ்ச நேரம் கழித்துப் பின்னால் காலடிச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். ரகு நின்று கொண்டிருந்தான்.

“சாவித்திரி...எனக்கு இப்படித்தான் அர்த்தமில்லாமல் கோபம் வந்து விடும்.........இதையெல்லாம் பொருட்படுத்தாதே...”

அவள் கண்கள் சிவந்திருப்பதைப் பார்த்து அழுதிருக்கிறாள் என்று நினைத்து விட்டான் அவன். சாவித்திரி கஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

அப்புறம் அவனை அவள் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்து கொள்ள ஆரம்பித்தாள். அவனுக்கு நல்ல மனதுதான். ஆனால் முன் கோபம் எல்லாவற்றையும் மூடிவிடும். நல்லதோ கெட்டதோ சொல்வதை ஹிதமாகச் சொல்லத்தெரியாது அவனுக்கு. உள்ளுக்குள்ளே எவ்வளவு அன்பு இருந்தாலும், வெளியேயும் அதைக் காண்பித்துக் கொண்டால்தான் அது பூரணமாகுமென்று அவனுக்குத் தெரியவில்லை. முதலில் அவன் கோபத்தைக் கண்டு மனம் புழுங்கின சாவித்திரி கொஞ்ச நாட்களில் அவன் மனதை அறிந்து கொண்டாள். முடிந்தவரை அவனுக்குக் கோபமே வராதவண்ணம் பார்த்துக் கொண்டாள்.

பிறகு அதற்குக்கூடத் தேவையில்லாமல் போய்விட்டது. ஒரு நாள் சாவித்திரி தலையை வலிக்கிறதென்று படுத்துக் கொண்டாள். அது பெரிய காய்ச்சலில் கொண்டு போய் விட்டது. ரகு உருகித் தவித்துப்போனான். காசை வாரி யிறைத்தான். ஒழிந்த நேரமெல்லாம் அவளருகில் பேசாமல் உட்கார்ந்திருந்தான். அவள் அவனைப் பார்க்கும் பார்வையில் “என்னால் உங்களுக்கு எவ்வளவு கஷ்டம்;” என்பது போலிருக்கும். பதிலுக்கு அவன் “நீ பிழைத்தெழுந்த சந்தோஷத்திற்கு முன்னால் இதெல்லாம் எங்கே!” என்று அவன் கண்கள் பதில் சொல்லும்.

ஜ்வரம் வந்த வேகத்தில் போய்விட்டது. ஆனால் அது ரகுவை மிகவும் மாற்றி விட்டுப் போயிற்று. அவனுடைய கோபமெல்லாம் எங்கோ போய் மறைந்து கொண்டது. சாவித்திரியும் அதைக் கவனித்தாள், ஆனால் அவனை ஒன்றும் கேட்கவில்லை.

அவள் உடம்பு சரியாகி ஒருவாரமிருக்கும். ஒரு நாள் சாயந்திரம் ஒரு கடைக்காரப் பையன் பெரிய பார்சல் ஒன்றை வீட்டிற்குக் கொண்டு வந்து வைத்தான். ஒன்றும் புரியாமல் சாவித்திரி அதைப் பிரித்தாள்.

“எப்படி யிருக்கு, சாவித்திரி—நன்றாக இல்லை?” என்று கேட்டான் ரகு.

அது அவர்கள் கலியாணத்தின் போது எடுத்துக்கொண்ட படத்தின் பெரிது பண்ணிய பிரதி.

“ரொம்ப நன்றாக இருக்கிறதே! எவ்வளவு கொடுத்தீர்கள் இதற்கு?”

“அதைப்பற்றி உனக்கென்ன கவலை? நன்றாக இருக்கிறதா இல்லையா?”

"நன்ருகத் தான் இருக்கு...ஆனுல் இப்போது எதற்கு வீண்செலவு?"

இதை அவள் வேண்டுமென்றேதான் சொன்னுள். அவன் செய்யும் செலவை வீண் என்று சொன்னுல் அவனுக்குக் கோபம் வந்து விடும். ஆனுல் இப்போது......!

அவன் பதில் பேசாமல் ஆணி அடித்து அதை மாட்டினுன்,

"சாவித்திரி......"

"என்ன?"

"எதற்காகத் தெரியுமா படத்தைப் பெரிது பண்ணச் சொன்னேன்?"

அவள் புரியாமல் மௌனம் சாதித்தாள்.

"நாம் ரெண்டுபேரும் எப்பாவாவது பிரிஞ்சு போக நேர்ந்தால் இதைப்பார்த்து ஆறுதல் அடைஞ்சுக்கலாம் இல்லையா?"

"எதற்காக பிரிஞ்சு போகணும்...?"

ரகு புன்னகையோடு சொன்னுன்.

"ஒரு நாள் நான் திடீர்னு போயிடரேன்னு வெச்சுக்கோ..."

அவளுக்குத் 'திக்'ரென்றது.

"ஐயோ!, வெள்ளிக்கிழமையும் அதுவுமா ஏன் இப்படிப் பேசறேள்........பேசாம வாங்கோ உள்ளே......" அவள் கண்கள் கலங்கின.

"உலகத்திலே நடக்காததையா நான் சொல்லி விட்டேன்?" ஏனே அப்படிப் பேசினுன் அவன்.

"ஐயோ, போதுமே... போதுமே..." சாவித்திரி அழ ஆரம்பித்து விட்டாள். அவன் குழைந்து போனுன்.

"அடடா. விளையாட்டுக்குச் சொன்னேன், சாவித்திரி, இவ்வளவு கோழையாக இருக்கிருயே..."



"நன்னாயிருக்கு, உங்கள் விளையாட்டு..."

அந்தப் பட படப்பு அவளுக்கு அடங்கவே யில்லை. படத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவன் சொன்னது நினைவுக்கு வந்து அவளைக் கலக்கிற்று. அவனோ வழக்கம்போல் தான் நடமாடிக்கொண்டிருந்தான்.

"திடீரென்று நான் போயிடரேன்னு வெச்சுக்கோ..."

"உலகத்தில் நடக்காததையா சொல்லி விட்டேன்..."

இந்தவார்த்தைகள் வீட்டில் ஒவ்வொரு மூலையிலிருந்தும் எதிரொலித்தன. — எவ்வளவு விரட்டியும் வீட்டை விட்டுப் போகாத வௌவாலைப் போல அங்கேயே சுற்றிச் சுற்றி வந்தன. சந்தோஷத்திற்காக வந்த படம் சந்தோஷத்தை அடியோடு குலைத்தது. தூக்கத்தில் அவளுக்கு அர்த்தமில்லாமல் தூக்கிவாரிப்போட்டது. கனவுகள் என்னவெல்லாமோ தெரிந்தன. காது திடீர் திடீரென்று செவிடாகப் போயிற்று. அவள் உடம்பு இளைக்க ஆரம்பித்தது. ரகுவோ அவள் மேல் அன்பை மழையாகப் பொழிந்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் அவன் கேட்டான்.

"ஏன்சாவித்திரி! கொஞ்ச நாளாக நீ என்னவோபோல் இருக்கிறாய்?..."

"ஒன்றும் இல்லையே" அவள் மழுப்பினாள்,

இந்த வார்த்தைகளைச் சொல்லும் போதுகூட அவள் அந்தப் படத்திற்கு கீழே தான் நின்று கொண்டிருந்தாள். அது மேலேயிருந்து அவளை ஊடுருவிப்பார்ப்பது போலிருந்தது. உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் அவளுக்கு ஒரு நடுக்கம் நடுக்கிற்று.

"நான் சொல்றேன்று கோவிச்சுக்காதீர்கள்... இந்தப் படத்தை எடுத்து உள்ளேவைத்து விடுங்கள்..."

அவன் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான்.

"இது வந்ததிலிருந்து என்னமோ மனசே சரியாகவேயில்லை..."

அவன் படத்தையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தான்; "சரி சாவித்திரி... உனக்கு வேண்டாமென்றால் எனக்கும் வேண்டாம்..."

அவள் கண்களில் நீர் துளிர்த்தது. எவ்வளவு ஆசையோடு அதைக் கொண்டு வந்தான்!

படம் போய் விட்டது. அவள் மனதிலிருந்து ஏதோ பளு இறங்கியதுபோல் இருந்தது. ஆனால் திடீரென்று இனம் தெரியாத பயம் அவளைக் கவ்விக் கொள்ளும். ஆனால் முன்னைவிட உடம்பு தேறிற்று.

ஒரு நாள் அவனை அவள் கேட்டாள், சந்தோஷமாக இருக்கும் போது.

"நீங்க இப்போதெல்லாம் ரொம்ப மாறி விட்டேள்..."

"அப்படியா?"

"ஆமாம்! என்னை நீங்கள் கோவித்துக் கொண்டு ரொம்ப நாளாகிறது."

அவன் சிரித்தான்.

"ஏன் இந்தத் திடீர் மாறுதல்?"

அதற்கு அவள் எதிர்பார்த்த பதிலையா அவன் கொடுத்தான்!

"ஏன்?... இந்த உலக வாழ்க்கையே ஸ்திரமில்லாததில்லையா? இருக்கிற வரையில் சந்தோஷமாக இருந்து விட்டுப் போவோமே என்று தான்."

மறுபடி இந்தத் திசையிலே பேச்சு செல்வதைப் பார்த்து அவள் மனம் கலங்கிற்று. இது எதற்குச் சூசகமோ என்று அஞ்சினாள். கடைசியில்...

ஒரு நாள் ஆபீசிலிருந்து வரும்போதே அவன் தள்ளாடிக் கொண்டே வந்தான். கண்கள் சிவந்திருந்தன. சாவித்திரி பதறினாள்.

"ஒன்றும் மில்லை சாவித்திரி. ஜ்வரம் வந்தாபோல இருக்குப் படுக்கையைப் போடு. டாக்டரைக் கூப்பிடச் சொல்லு" என்றான் அவன்.

டாக்டர் பரிசோதித்து விட்டு விஷஜ்வரமென்றும் ஜாக்ரதையாக இருக்க வேண்டுமென்றும் சென்றார். சாவித்திரி தன் மாமியாருக்கு—ரகுவின் தாயாருக்குத் தந்தி கொடுத்தாள். அவள் உதவிக்கு ஓடி வந்தாள்.

ஜ்வரம் மூன்று நாளாகியும் இறங்கவில்லை. தணல்போல் தகித்து அவனை வாட்டி எடுத்தது. சாவித்திரி உணவைமறந்தாள்; உறக்கத்தை மறந்தாள்; அவன் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டு நிமிஷத்திற் கொருதரம் ஜ்வரம் இறங்கி யிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நீ எதற்காகக் கஷ்டப்படுத்திக் கொள்கிறாய் சாவித்திரி; தானாகக் குணமாகிவிடும்; நீ சாவித்திரியல்லவா? யமனோடு சண்டை போட்டாவது என்னை மீட்டு விடமாட்டாயா?" என்று சொல்லிச் சிரித்தான் அவன்! அவள் கலங்கினாள்.

நான்காம் நாள் இரவு.

அன்று காலைதான் ஜ்வரம் இறங்கியிருப்போல இருந்து மறுபடி ஏறிவிட்டது. சாயந்திரம்

அதன் வேகம் மிக அதிகமாக இருந்தது. அவனுக்கு நினைவு இல்லை. வெம்மையில் சிவந்து போயிருந்த அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் சாவித்திரி. அந்த இரவு கழிந்தால் பயமில்லை என்று டாக்டர் சொல்லி விட்டார்.

"அம்பிகே! பராசக்தி! எப்படியாவது அவரைக் காப்பாற்றி விடு".

மூன்று நாட்களாகக் கண் விழித்தது அவளுக்குத் தலையைச் சுற்றிற்று. கட்டிலுக்குப் பக்கத்திலேயே கீழே படுத்துக்கொண்டாள். தலைமாட்டில் மூன்று மணிக்கொருதரம் பார்த்து மருந்து கொடுப்பதற்காகக் கடிகாரம் 'டிக் டிக்' கென்று ஒலித்துக் கொண்டிருந்தது. ரகுவின் நிதானமாக வரும் மூச்சு அவள் காதில் பயங்கரமாக ஒலித்தது. அவள் அப்படியே தூங்கிப் போனாள்.

எருமை மாடுகள் மந்தை மந்தையாக வந்து கொண்டிருந்தன. அவைகளின் காலடி ஓசை நாராசமாகக் காதைத் துளைத்தது. அவைகளின் காலிலிருந்து கிளம்பின புழுதி எங்கெங்கும் பரவி மூச்சுத் திணற அடித்தது. கடைசியில் ஒன்று மட்டும் தனியாக வந்துகொண்டிருந்தது. அதன் மேல்......?

சாவித்திரியின் வாய் முணுமுணுத்தது.

"அம்பிகே! பராசக்தி!......"

இருட்டோடு இருட்டாக இருட்டிலிருந்து ஒரு கரிய உருவம் பிரிந்து அவளை நோக்கி வேகமாக வந்தது. அது அவள் நெற்றிக் குங்குமத்தை அழித்துவிட்டுத் தாலிக் கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடிற்று.

"ஐயோ! அம்மா!"

சாவித்திரி அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தாள். அம்மா உள்ளேயிருந்து ஓடி வந்தாள். ரகுவின் முகத்தைப் பார்த்தாள். அவனைத் தொட்டுப் பார்த்தாள்.

"ஐயோ! சாவித்திரீ........."

சாவித்திரி எழுந்து நின்றாள். கட்டிலில் கிடந்த ரகுவின் முகம் மிகவும் அழகாய் இருந்தது—சொல்ல முடியாத - விவரிக்க முடியாத அழகு!

பிரிக்க முடியாதவள் போல் அவன் உடல்மேல் விழுந்து கதறினாள் சாவித்திரி.

அந்த ஒருமுறைதான் அவள் வாய்விட்டு அழுதாள். அதற்குப் பிறகு அழவேயில்லை. மனதே சூன்யமாகப் போய்விட்டதோ? தான் அழாமல் இருப்பது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

ஒரு வேளை தனக்கு அவன்மேல் அன்பு இல்லையோ என்று நினைத்து ஏங்கினாள்.

வந்தவர்கள் எல்லோரும் போன பிறகு முதல் வேலையாக அவள் உள்ளே வைத்திருந்த அந்தப் படத்தைக் கொண்டு வந்து மறுபடியும் மாட்டினாள். இப்போது அதைப் பார்க்க அவளுக்குப் பயமாகவே இல்லை!

நாட்கள் ஒவ்வொன்றாக ஊர்ந்தன. அவள் மனதிலே கலக்கம் குறைந்துகொண்டே வந்தது. அவன் உயிரோடு இருந்தபோது இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் வித்யாசமே இல்லை போலத் தோன்றிற்று!

* * *

ஜன்னலருகில் உட்கார்ந்திருந்த சாவித்திரி தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டவள் போலக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். ஜன்னலை மூடியிருந்த திரையை விலக்கி விட்டாள். வெளியே வெளிச்சம் மங்கிக்கொண்டே வந்தது. தெருவில் சந்தடி குறைந்து விட்டது.

அநேக நாட்கள் ரகு ஏழு மணிக்குத்தான் வீடு திரும்புவான். அப்போதெல்லாம் இதேமாதிரி

அவள் கவலையோடு காத்திருப்பாள்—விளக்கைக் கூட ஏற்ற மறந்து. "ஏன் இன்னும் விளக்கேற்ற வில்லை?" என்று கேட்டுக் கொண்டே அவன் உள்ளே நுழைவான். அவள் உடனே எழுந்து அவசர அவசரமாக விளக்கேற்றுவாள்.

இதையெல்லாம் நினைத்துக்கொண்டே சாவித்திரி கூடத்திற்கு வந்தாள். அந்த மூலையில்தான் கண்ணாடி 'பீரோ' இருந்தது. இதோ இங்கேதான் அந்தப் படம் இருக்கிறது.

"ஏன் இன்னும் விளக்கேற்றவில்லையா?"

சாவித்திரி திடுக்கிட்டுத் திரும்பினாள். அவரா" ரகுவா!"

"இதோ வந்துவிட்டேன். இவ்வளவு நேரமாகியும் நீங்கள் வரவில்லையே என்று கவலையாக உட்கார்ந்திருந்து விட்டேன்......"

தன்னை மறந்து, நினைவை இழந்து அவள் பேசினாள்.

கூடத்து விளக்கை ஏற்றி மாட்டினாள், மங்கலான அதன் ஒளியிலே எல்லாம் கனவுக் காட்சி போல் தெரிந்தது.

ரகுவின் அறையிலிருந்து குரல் கேட்பதுபோல இருந்தது.

"நாள் முழுதும் இங்கேதானே இருந்தாய்? இதைக் கவனிப்பதைவிட வேறென்ன வேலை..."



சாவித்திரி அந்த அறைக்கு ஓடினாள்.

கூடத்திலிருந்து குரல் கேட்டது.

"போட்டோ நன்றாக இல்லை, சாவித்திரி!"

அவள் திரும்பி ஓடிவந்தாள்.

'நான் திடீர்னு போயிடறேன்னு வெச்சுக்கோ..'

'நீ தான் சாவித்திரியாயிற்றே! யமனுடன் சண்டை போட்டாவது..."

வீடு முழுவதும் ரகுவின் குரலாக எதிரொலித்தது. அவள் பைத்தியம்போல நாலாபுறமும் வெறித்துப் பார்த்தாள். காற்றிலே விளக்கு ஆடிற்று. மங்கலான நிழல்கள் ஆடின. ஒவ்வொரு நிழலிலிருந்து ஒவ்வொரு ரகு உயிர் பெற்றுவருவது போலிருந்தது.

மேலே மாட்டியிருந்த படத்தைச் சாவித்திரி பார்த்தாள். அதிலிருந்து ரகு சிரித்தான்.

"இல்லை சாவித்திரி......இன்னிக்குக் கொஞ்சம் வேலை அதிகம்...அதுதான் 'லேட்'....நீ இன்னும் டிரஸ் பண்ணிக்கலையா?"

அவள் கண்ணாடியின் முன் போய் நின்று கொண்டாள்,

பாழ்நெற்றி அவளை ஏசவில்லை. அதில் மங்கலத்திலகம் ஒளி வீசிற்று!

மார்பிலே திருமங்கலியம் அசைந்து ஆடிற்று.

தலையிலே ஒரு கட்டுப் பூ!

ரகு அவள் பின்னால் வந்து நிற்பது கண்ணாடியில் தெரிந்தது.

"தயாரா......சாவித்திரி."

"தயார்தான்......எப்பவுமே தயார்தான்.'

அவன் அவள் கையைப் பிடித்துக் கொண்டான்.

"போகலாம் வாருங்கள்"

அவர்கள் இருவரும் மெள்ள மெள்ள நகர்ந்தனர்.

சாவித்திரியின் உடல் தரையிலே சரிந்தது.

அவன் நினைவிலே நிறைவு பெற்ற அவள் அவனோடு சேர்ந்துகொண்டாள்.

ஜூலேகா

மூலம்: மாப்பஸான்

தழுவி எழுதியவர்: ஜெகசிற்பியன்

வண்டி ஓடிக்கொண்டிருக்க வில்லை; நகர்ந்து கொண்டிருந்து! ஆமாம், அது குதிரை வண்டி! அந்த வண்டியை இழுத்துச் செல்லும் குதிரை, குதிரை யாக இல்லை; கொம்பேறி மூக்கன் போல நீண்டு வளைந்து தன் உடலிலுள்ள ஒவ் வொரு எலும்புகளையும் பஞ்ச தேவனுக் குக் கணக்குக் காட்டிக்கொண்டிருந்தது. கொள்ளின் சுவையும், புல்லின் நிறமும் அதன் முன்ஜன்ம நினைவுகளாகிவிட்டி ருந்தன. வெறும் தண்ணீர் குடித்துப் பார்க்கக்கூட அது கொடுத்துவைக்க வில்லை. அப்படியிருந்தும் ஒன்றரை 'டன்' எடையுள்ள ஒரு வண்டியையும், அத னுள் அமர்ந்துகொண்டு வரும் ஏழுமனித உடல்களையும் சுமந்து இழுத்துச்செல் கிறதென்றால், அது கட்டாயம் ஏதாவ தொரு, தெய்வீகசக்தி' பெற்றதாய்த் தானிருக்க வேண்டும்!

அதனால், அந்த வண்டி ஓடவில்லை; நகர்ந்துகொண்டிருந்தது!......

குச்சு போன்ற தன் கால்களை எடுத்து வைத்து நடக்கச் சக்தியற்றிருந்த அந்தக் குதிரையை, இதயம் என்ற ஒன்றை ஒப்புக்குச் செருகிக் கொண்டிருந்த உயர்திணைச் சிருஷ்டியான வண்டிக்காரன், தன் கையில் வைத்திருந்த நீண்ட தோல் சவுக்கினால் பளீர்பளீரெனப் பலமுறை அடித்து விரட்டிக்கொண்டிருந்தான். அவன் அந்தக் குதிரையை அடிக்கத்தான் ஆசைப்பட்டானேயொழிய, அவனுடைய ஆசை பூர்த்தியாகும் அளவுக்கு அவன் அடித்த அடிகளில் பலமும், அழுத்தமும் இருக்கவில்லை. காரணம், அவன் சாப்பிட்டு ஏறக்குறைய ஐந்துநாட்களாகிவிட்டிருந்தன! கணவன் மீதோ அல்லது மாமி, நாத்தி ஆகியவர்கள் மீதோ கொண்ட கோபத்தை, ஒரு குற்றமும் செய்தறியாத தன்குழந்தையிடம் காட்டி, அதைநையப் புடைக்கும் சில தாய்மார்களைப் போல, தன்னையும் தன்னைப்போன்ற பல்லாயிரம் மக்களையும் காரண காரியமற்ற வகையில் அல்லற் குழியில் விழச்செய்த அரசியல் தலைவர்களின் முதுகில் அடிப்பதாக நினைத்துக் கொண்டு, பாவம் - அந்த வாயில்லா ஜீவனை அவன் அப்படி அடித்துத் துரத்துகிறானோ என்னவோ!......

ஆமாம்; லாகூரிலிருந்து ஏழாவது மைலைக் கடந்திருக்கிறது அந்த வண்டி. இந்திய மண்ணை மிதிக்க இன்னும் இருபத்தைந்து மைல்களைக் கடக்கவேண்டும்! அந்த வண்டியா? இல்லை; எலும்புகளில் உயிரை ஒட்ட வைத்துக்கொண்டிருக்கும் அந்தக் குதிரை. தோலில் தன் ஜீவனை முடிச்சுப்போட்டு இறுக்கிக்கொண்டிருக்கும் அந்த வண்டிக்காரன் அக்குதிரையை இன்னும் இருபத்தைந்து மைல்கள் வரை நகர்த்திச் செல்ல வேண்டும்! அப்போதுதான் அவனும் அந்த வண்டியில் அமர்ந்துவரும் ஆறு மனித உயிர்களும் ஏன்? அந்தக் குதிரையுங்கூட உயிர்வாழ முடியும்!

ஏன் இந்தக் கெடுபிடி நிலை ஏற்பட்டது!......

லாகூர் மக்களுக்குத் திடீரென ஒரு நாள் நச்சுப்பித்தம் தலைக்கேறி விட்டது! அதன் காரணமாக அவர்கள் மனிதக்கூட்டிலிருந்து வெளியேறி மிருகக்கூட்டில் புகுந்துகொண்டார்கள்! அதன் விளைவு? கொலை, கொள்ளை, தீவைத்தல், கற்பழித்தல் ஆகிய பைசாச கருமங்கள் தங்கு தடையின்றி, தண்ணீர் பட்டபாடாய்ப் நடைபெறத் தொடங்கின! இத்தனையும் யாரை — எதை — முன்வைத்து நடந்தன? மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால், ஜனநாயகத்தின் பெயரால் சுதந்திரத்தின் பெயரால் நடக்க ஆரம்பித்தன!

லாகூரில் வகுப்புக் கலவரம். இந்துக்களும் முஸ்லீம்களும் கீரியும் பாம்புமாகஆய்விட்டார்கள். அவ்வூரில் உற்பத்தியான — அல்லது இறக்குமதியான - அவ்வளவு இரும்புக் கருவிகளும் மனித இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தன!......

இந்தியாவை நோக்கியும், பாகிஸ்தானை நோக்கியும் பல்லாயிரம் உயிர்கள் மரண சாபமிட்டுக் கொண்டே மாண்டு கொண்டிருந்தன. எஞ்சியிருந்த மனிதப் புழுக்கள் தத்தம் தாய்நாட்டின் மண்ணை மிதிக்க ஊர்ந்து கொண்டிருந்தன. தண்டவாளம் தேய்ந்து போகும்படியான ஜனமலையை ஏற்றிக்கொண்டு ரெயில்ஓடியது; இயற்கை முறிந்து போகும் அளவுக்கு மக்களைச் சுமந்து கொண்டு பறந்தன விமானங்கள்; டயர் வெடித்துப் போகும் நிலையில் மனிதச் சடலங்களை இழுத்துக் கொண்டு ஓடின கார்கள். இத்தகைய வசதிகளைப் பெற முடியாத, நடுத்தர வாழ்க்கைச் சக்ரத்



"லக்ஸ் டாய்லட் சோப்

என் சருமத்தை மிருதுவாகவும், மழமழப்பாகவும், தெளிவாகவும் இருக்கச்செய்கிறது"

என்கிருர் **எம். வி. ராஜம்மா**



இனிய மணத்துடன் கூடிய
இந்த வெண்மையானதும்
சுத்தமானதுமான சோப்
உங்கள் சருமத்தை
வசீகரமாகச் செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 328-X30 TM

ஆரோக்கியத்தைப்பெற சமநிலை உணவை சாப்பிடுங்கள்

ஒவ்வொரு வகையான உணவும் வெவ்வேறு விதமான உணவுச்சத்துக்கள் அடங்கியதாயிருக்கிறது. அதனால்தான் ஆரோக்கியத்திற்கும், சக்திக்கும் மிக அவசியமான ஐந்துவகை உணவுச்சத்துக்களையும் பெற வெவ்வேறு உணவுப்பொருள்களை சாப்பிடவேண்டும். இதைதான் *சமநிலை உணவு* என்று கூறப்படுகிறது. ஆகவே சமநிலை உணவில் (1) விடமின்கள், (2) புரதசத்துக்கள், (3) தாதுப்பொருள்கள், (4) மாவுசத்துக்கள், (5) கொழுப்புகள் அடங்கியிருக்கவேண்டும். இந்த ஐந்து வகை சத்துக்களும் மிகவும் அவசியமானவைதான். நீடித்து நிற்கும் சக்தியை அளிக்கும் கொழுப்புகளிடையே மிக சௌகரியமானதும், ஊட்டமளிப்பதுமான ஒன்று டால்டா. எல்லாவித சமையல்களுக்கும் உகந்தது. சீல் செய்த டின்களில் எப்பொழுதும் புதிதாகவும் துப்புரவாகவும் உங்களுக்கு கிடைக்கிறது.

சமநிலை உணவைப்பற்றிய உபயோகமான
பூரண விவரங்கள்

இலவசமாகத் தேவையானால் இன்றே—
அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

சக்தியைப்பெற டால்டாவில் சமையுங்கள்

சமநிலை உணவில் உங்களுக்குத்தேவையான கொழுப்பை அளிக்கிறது

HVM. 175-50 TM

தில்சுழன்று கொண்டிருந்த ஜனங்கள் மாட்டுவண்டிகளிலும் குதிரை வண்டிகளிலும் ஜீவப்பாதுகாப்புப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். இன்னும் சில பஞ்சைப் பிணங்கள் கால் நடையாகவே ஓடிக்கொண்டிருந்தன, அவல வாழ்விலும் உயிர் வெல்லமாக இருந்தது அவர்களுக்கு!......

இப்படி வகுப்புக் கலவரத்தால் ஜீவப் போராட்ட மிட்டுக்கொண்டு ஓடிய பல்லாயிரம் மக்களில் இந்தச் சாப்பாணிக் குதிரை வண்டியில் வரும் அந்த ஏழு பேரையும் சேர்த்துக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்! ஆம்; அவ்வேழு பேரும் லாகூரை விட்டு டெல்லிக்குப் பயணமாகி இருக்கிறார்கள். நிலம், மனை, பணம், பொருள் எல்லாவற்றையும் விட்டு விட்டு, உயிர் ஒன்றிருந்தால் போதும் என்ற எண்ணத்துடன் ஓடிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள். சொந்த நாட்டின் மண்ணை மிதிப்பதற்குள் ஒருவேளை அவர்கள் குண்டர்களின் கொடுஞ் செயலுக்கு ஆளாகலாம்!......

"ஏய் வண்டியை நிறுத்து!"

பயங்கரமான இந்தக் குரலைக் கேட்டதும் வண்டிக்காரனும், அவ்வண்டியிலிருந்த ஆறு பேரும் குலை நடுக்கம் கொண்டு விட்டனர். இன்றோ நாளையோ சாகப்போகும் அந்தக் குதிரைகூட இந்த இடியோசை போன்ற குரலைக் கேட்டுக் கும்பியைச் சுருக்கிக் கொண்டு நின்று விட்டது,

ரோடில் பக்கத்திலிருந்த கூடாரமொன்றிலிருந்து, குறுக்கும் நெடுக்கும் வஞ்சனையின்றி வளர்ந்திருந்த ஒரு முரட்டு ராணுவஸ்தன் துப்பாக்கியை நீட்டியவாறே அவ் வண்டியை நோக்கி வந்து கொண்டிருந்தான்!

இன்னும் சில விநாடிகளில் சாகப்போகிறோம் என்ற முடிவைத் திண்ணமாக்கிக் கொண்ட அந்த ஏழுபேரும் நடுக்கத்துடன் ராணுவஸ்தனை ஏறிட்டு நோக்கினர்.

"எங்கே போகிறீர்கள்?"

"டெல்லிக்கு!"

"ஏன்?"

"உயிர்பிழைக்க"

"எத்தனை பேர்?"

19734

"என்னைச் சேர்த்து இங்கிருப்பது ஏழு பேர்!"

"உம், சீக்கிரமாக இங்கிருந்து ஓடித் தொலையுங்கள்! ஓடுங்கள்!"

இவ்வளவு நேரம் பேசியது யார்?

கூடாரத்திலிருந்து துப்பாக்கியுடன் வந்த அந்த ராணுவஸ்தனும் வண்டியுனுள்ளிருந்த ஒரு பெண்ணும் தான் இப்படிப் பேசிக்கொண்டார்கள்!

அப்படியானால் அந்த வண்டியிலிருந்த அவ்வளவு பேரும் பெண்களா? இல்லை, நான்கு ஆண்கள்; மூன்று பெண்கள்—ஆக மொத்தம் ஏழுபேர்! அப்படியிருந்தும் ஒரு முரட்டு ராணுவஸ்தனின் கேள்விகளுக்கு ஒருபெண்தானா பதில் தரவேண்டும்? அவளுடனிருந்த ஆண்களெல்லாம் அலிகளா? அல்லது ஊமையர்களா?......

அவன் போய் விட்டான்.

வண்டி மீண்டும் புறப்பட்டது; இல்லை நகர்ந்தது!

"வேசிப் பயமவன் குருதை! வெரசா நடக்க மாட்டேங்குதே" என்று கூவிக் கொண்டே குதிரையின் முதுகில் ஓங்கி ஒரு குத்து விட்டான் வண்டிக்காரன்.

அவனுடைய இந்த எரிச்சல் வசையைக் கேட்டதும், ராணுவஸ்தனுக்குப் பதில் சொன்ன அந்தப் பெண்ணின் முகம் கறுத்துச் சுருங்கி விட்டது!

ஏன்? ஏனோ!......

வண்டி ஓடிக்கொண்டிருந்தது; இல்லை, நகர்ந்து கொண்டிருந்தது.

"ஏனுங்க! சாப்பிட்ட மிச்சம் மீதி ஏதச்சும் இருக்குதுங்களா? வயித்தைப் போட்டுப்பெசையுது!" என்று கம்மிய குரலில் கேட்டான் வண்டிங்காரன் வண்டியினுள், இருந்தவர்களைப் பார்த்து.

'நீ கொடுத்தால் இப்போது நாங்கள் வாங்கிக்கொள்வோம்' என்ற தோரணையில் அவனை அவர்கள் பார்த்தனர்—ராணுவஸ்தனுடன் பேசியவளைத் தவிர......

வண்டியிலிருந்த மூன்று ஆடவரில் ஒருவன், 'அந்தப் பெண்ணை விநாடிக்கொரு

தரம் மேலும் கீழுமாகப் பார்த்துக்கொண்டு வந்தான், மற்றிரு ஆடவரும் நேரிடையாக அவளைப்பார்க்க வெட்கப்பட்டுக் கொண்டோ அல்லது பயந்து கொண்டோ அவளை திருட்டுத்தனமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். மூன்று பெண்களில் இருவர் மட்டும் தனித்து நெருங்கி உட்கார்ந்து கொண்டு, அந்தப் பெண்ணை அலட்சியமாகவும் வெறுப்புடனும் நோக்கி, உதட்டைப் பிதுக்கியும் கண்களைச் சொடுக்கியும் கொண்டிருந்தனர்!.....

இவ்வைந்து பேராலும் ஒதுக்கப்பட்டவள் போல இருந்த 'அவள்' எங்கேயோ பார்த்துக்கொண்டு மௌனமாக உட்சார்ந்திருந்தாள்.

அந்த இரண்டு பெண்களில் ஒருத்தி மற்றவளின் தொடையைக் கிள்ளி, "ஏண்டி, ஊர் போய்ச் சேருவதற்குள் இந்தச் சிறுக்கி நம்ம ரெண்டு பேருடைய ஆம்படையான்களையும் மயக்கிக் கைக்குள் போட்டுக்கொள்வாள் போலிருக்கே!" என்றாள் மிகத் தணிவான குரலில்.

"யாரடி அவள்? கிளைவ் தெருவிலே 'வியாபாரம்' செய்து கொண்டிருந்தாளே, ஜுலேகா! அவளா இவள்!" என்றாள் அடுத்தவள்.

"அவளே தான். அந்த குச்சுக்காரியே தான்!"

இருவரும் ஒருவரொருவருடைய தொடையைக் கிள்ளிக்கொண்டு கீழே குனிந்தவாறே மெல்லச் சிரித்தனர்,

இவ்வளவு நேரம் அவர்கள் பேசியதைக் கேளாதவள்போலக் கேட்டுக்கொண்டிருந்த ஜுலேகா மெதுவாகத் திரும்பி அவர்களைப் பார்த்தாள். அவளுடைய விழிவட்டக்கோடியிலே இருதுளிநீர் முத்துக்கள் கசிந்து நின்றன!......

லாகூரை விட்டு அந்த வண்டி கிளம்பி இருபத்து நான்கு மணி நேரமாகி விட்டது. அதில் ஏறிச்செல்லும் அவ்வேழுபேரும் இன்னும் ஒரு மிடறு தண்ணீர்கூடக் குடிக்கவில்லை. அருந்தும் பானமோ, சாப்பிடும் உணவோ அவர்கள் கொண்டு வரவில்லை. கொண்டு வந்திருக்கவும் முடியாது, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடி வந்திருக்கும் அவர்கள், உணவு எப்படி கொண்டு வந்திருக்க முடியும்? பசி ஒவ்வொருவருடைய வயிற்றையும் கிள்ளியது. சும்மா ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஜுலேகாவின் மடியில் ஒரு சிறு மூட்டை இருந்தது. வெகு நேரத்துக்குப் பிறகு அதை அவள் கையிலடுத்தாள். அவள் கையிலிருந்த அந்த மூட்டையை எல்லோரும் ஆவலுடன் நோக்கினர். அம் மூட்டையை அவிழ்ப்போமா வேண்டாமா என்ற சிந்தனையில் ஆழ்ந்தாள் அவள்.

ஒரு ஐந்து நிமிஷம் கரைந்தது; கால் பர்லாங்கு தூரம் வண்டியும் நகர்ந்தது.

அச்சிறு மூட்டையை அவிழ்த்தாள் ஜுலேகா. அதில் பன்னிரண்டு கோதுமை ரொட்டிகளும், உருளைக் கிழங்குப் பொரியலும் இருந்தது. கையில் அதை வைத்துக் கொண்டே எல்லோரையும் பார்த்தாள் அவள். அதைக்கண்ட மற்றவர்களின் நாவில் நீர் சுரந்தது! தங்களுக்கு அதில் கொஞ்சம் கொடுக்கமாட்டாளா' என்று ஆவலுடன் அவளைப் பார்த்தனர் அனைவரும். கீழ்மைத் தொழிலை மேற்கொண்டிருக்கும் தன்னிடமிருந்து அவர்கள் இந்த ரொட்டிகளை வாங்குவார்களா என்ற சந்தேகம் பிறந்து விட்டது அவளுக்கு! 'நீ வேசி! உன்னிடமிருந்து நாங்கள் எதையும் வாங்கிச் சாப்பிட மாட்டோம்; உயிர்போனாலும் பரவாயில்லை' என்று அவர்கள் சொல்லி விட்டால்?—

அவள் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். மேலும் ஒரு கால் பர்லாங்கு தூரம் வரை வண்டி ஊர்ந்தது.

தனித்து உட்கார்ந்திருந்த வாலிபனிடம் முதலில்கொஞ்சம்ரொட்டியும்,பொரியலும் கொடுத்தாள் ஜுலேகா. அவன் அதைத் தயக்கத்துடன் வாங்கிச் சாப்பிட ஆரம்பித்தான். பிறகு மற்றவர்களுக்கும் கொடுத்தாள். தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே அவள் கொடுத்ததை அனைவரும் வாங்கிக் கொண்டனர்!

வழுக்கி விழுந்தவளின் கையால் கொடுத்த அந்தச் சிறு உணவு கசக்கவில்லை; நன்றாகத் தானிருந்தது! ஆதலால் எல்லோரும் பசி தீரச் சாப்பிட்டனர் — வண்டிக்காரன் கூடத்தான்!

ஜுலேகாவின் வதனத்தில் திருப்தியின் ரேகைகள் நெளிந்தன; ஆனால்?.....

சிறிது நேரங்கழித்து மீண்டும் அந்தப் பெண்கள் அவளைக் குறித்துக் கேலிப் பேச்சுக்கள் பேச ஆம்பித்தனர்: இப்போது ஜுலேகா அதைக்கேட்டு வருத்தப்படவில்லை; சிரித்தாள்!

''நீ எந்த ஊருக்குப் போகிருய்?'' தனித்து உட்கார்ந்திருந்த வாலிபன் ஜுலேகாவைப் பார்த்துக் கேட்டான்.

''டில்லிக்கு.''—கொஞ்சமும் கூச்சமில்லாமல் அவனை விறைத்துப் பார்த்துக்கொண்டு பதில் சொன்னுள் அவள்.

''அங்கே உனக்கு யார் இருக்கிருர்கள்?'' மீண்டும் அவன் கேட்டான்.

இந்த அவனது கேள்விக்கு அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவ்விரு பெண்களும் தணிவான குரலில் பேசிக் கொண்டனர்.

''ஓடுகாலிக்கு உற்ருர் உறவினர்கூட இருப்பார்களாடீ? ஊரில் இருப்பவன்களெல்லாம் அவளுக்குச் சொந்தக்காரன் தான்!''—இப்படி மெல்லக்கூறி ஒயிலாகச் சிரித்துக்கொண்டாள்......

வண்டி ஓடிக் கொண்டிருந்தது; இல்லை நகர்ந்தது கொண்டிருந்தது. இந்திய மண்ணை மிதிக்க இன்னும் சில மைல்கள் தூரமே இருக்கிறது!......

''ஏய், வண்டியை நிறுத்து!''—

திடீரென எழுந்த இந்தப் பயங்கரக் குரலைக்கேட்டு வண்டிக்காரன், குதிரையின் வாய்கிழிந்து போகும்படியாக லகானைப் பிடித்து இழுத்துக்கொண்டு நின்ருன், நுங்கும் நுரையுமாகக் கக்கிக் கனைத்துக் கொண்டு நின்றது குதிரை. வண்டியிலிருந்த அனைவரும் ஒருவரை யொருவர் நெருக்கியடித்துக் கொண்டு வெளியே தலையை நீட்டி எட்டிப் பார்த்தனர்.

சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு முறுக்கான பாகிஸ்தான் ராணுவஅதிகாரி, நீட்டிய துப்பாக்கியுடன் அங்கே நின்று கொண்டிருந்தான்.

''எல்லோரும் கீழே இறங்குங்கள்!''— நாய் போலக் கூவினுன் ராணுவஸ்தன்.

ஜுலேகாவைத் தவிர மற்றெல்லோரும் அலறியடித்துக் கொண்டு கீழே இறங்கினர். அவள் மட்டும் நிதானமாக இறங்கி வந்து ஒரு புறமாகப் போய் ஒயிலாக நின்ருள்.

''நீங்களெல்லோரும் எங்கே போக வேண்டும்?'' — மிடுக்குடன் கேட்டான் அதிகாரி.

''டெல்லிக்கு!'' — அதே மிடுக்குடன் ஜுலேகாதான் பதில் கொடுத்தாள்.

''இன்றைக்கு நீங்கள் இந்த எல்லையை விட்டு அப்பால் செல்லக்கூடாது. இது தலைமை ராணுவஅதிகாரியின் உத்தரவு. அவர் எப்போது நீங்கள் போகலாமென்று சொல்கிருரோ அதுவரை, அதோ இருக்கும் அந்தக் கூடாரத்திலேயே நீங்களிருக்க வேண்டும்! என்ன, நான் சொன்னது புரிந்ததா?''

''ஏன் நாங்கள் போகக்கூடாது?''

''ஏனே! இது மேலதிகாரியின் உத்தரவு?''

அவன் அவளை முறைத்துப் பார்த்தான். அவளும் அவனை விறைத்து நோக்கினுள், இதுவரை அவள் எந்த ஆடவனையும் அவ்வளவு வெறுப்புடன் பார்த்ததே இல்லை, ஏனே இப்போது அவனைஅப்படிப் பார்த்தாள். தன் தொழிலை மறந்து விட்டாளா? அல்லது தன்னையே மறந்து விட்டாளா?—

ராணுவஸ்தன் காட்டிய கூடாரத்துக்கு எல்லோரும் போய் விட்டனர்.

புற்தரையில் போடப்பட்டிருந்த அந்தக் கூடாரம் இரண்டாகத் தடுக்கப்பட்டிருந்தது. ஒன்றில், அவ்விரு பெண்களும், அவர்களுடைய கணவன்மார்களும், மற்ருெருவனும் இருந்து கொண்டனர். அடுத்த தடுப்பில் ஜுலேகா மட்டும் தனியே இருந்தாள். ஏனிப்படி அவளை மட்டும் தனியே விட்டு விட்டார்கள்? அவளும் இந்தியப் பெண்தானே? மேலும், அவர்களுக்கு உயிர் போகும் சமயத்தில் உயிர் கொடுத்தவள்?......

நாட்கள் ஒன்று, இரண்டு, மூன்று என ஓடிக்கொண்டே இருந்தன. ஆனல் அவர்களுக்கு இன்னும் தங்களின் தாய்நாட்டுக்குப் போக அனுமதி கிடைக்கவில்லை!

அந்த முரட்டு ராணுவஸ்தன், அடிக்கடி அக்கூடாரத்தைச் சுற்றிச் சுற்றி வளையமிட்டுக் கொண்டிருந்தான். ஏன்? ஏனே!...

முதல் கூடாரத்திலிருந்த ஆறு பேருக்கும் பயங்கரக் கவலே நோய் பற்றிக் கொண்டது. காரணமில்லாமல் தங்களை ஏன் நிறுத்தி வைத்திருக்கிறான் அந்த ராணுவஸ்தன் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. தங்களுக்கு முன்னாலும் பின்னாலும் வந்தவர்களையெல்லாம் போகும்படி விட்டுவிட்டான் அவன். ஆனால் அவர்களைவிட மறுக்கிறான்! அவனுடைய இந்த அநியாய உத்தரவை ஒரு சிறிதும் லட்சியம் செய்யாமல் மௌனமாக இருக்கிறாள் ஜுலேகா! அவள் மட்டும் ஏனிப்படி கவலைப்படாமலிருக்கிறாள்?......

* * *

இரவு பத்து மணி இருக்கும்.

கூடாரத்திலிருந்த எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தனர்; இல்லை, தூங்குவதாகப் பாவனை செய்து கொண்டிருந்தனர். தூக்கம் எப்படி அவர்களுக்கு வரும்? பலி பீடத்திலே விட்ட செம்மறியாடு பச்சைப்புல்லை மேய நினைக்குமா? வகுப்பு வெறியர்களின் கையில் தங்கள் உயிரை ஒப்படைத்து விட்டிருக்கும் அவர்களுக்குத் தூக்கம் கூடவா வரும்?

முதல் கூடாரத்திலிருந்த இருபெண்களும் எழுந்து உட்கார்ந்து கொண்டனர். பசி அவர்கள் வயிற்றைப் பிசைந்தது. வாழ்வின் இன்பத்தை இனி நுகர்வோம் என்ற நம்பிக்கை அவர்களிடமிருந்து பொசுங்கி விட்டிருந்தது. அதிகாரிகள் அவர்களைச் செல்லக் கூடாதென மடக்கிப் போட்டு வைத்திருப்பதன் காரணம் அவர்களுக்குப் புரியவே இல்லை. இன்றிரவோ அல்லது நாளையோ எமன் வீட்டுக்கு அனுப்பி வைத்துவிடலாம்!......

இருவரும் 'கசமுச' வென ஏதோ பேசிக் கொண்டனர். அவ்விருவரின் கணவன்மார்களும் தனித்தனியே படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தனர். மற்றொருவனை அங்குக் காணோம். அவன் எங்குப் போனானோ! ஜுலேகா, இருந்த கூடாரத்திலிருந்து விளக்கின் மங்கிய ஒளி வெளியுலகில் கவிழ்ந்திருந்த இருளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தது.

ஜுலேகா, படுக்கையில் புரண்டும் நெளிந்தும் கொண்டிருந்தாள். தூக்கம் அவளுக்கு வரவில்லை. அவளுடைய சிந்தனைச் சக்கரம் எங்கெங்கெல்லாமோ ஏறி இறங்கிச் சுழன்று கொண்டிருந்தது......

* * *

ஜுலேகாவின் சொந்தப் பெயர் சுசீலா! அவள் பிறந்தது, வளர்ந்தது, படித்தது, வாழ்க்கைப்பட்டது எல்லாம் கற்பரசி கண்ணகி வாழ்ந்த மதுரை நகராகும்! ஏழைக் குடும்பத்தில் பிறந்த அவள் பணக்காரனொருவனுக்கு வாழ்க்கைப் பட்டாள்!

இன்பக் கனவு கண்டு கொண்டிருக்கும் இளவயதினளான சுசீலாவுக்கு 'ஏற்றவனாக' இல்லை அவள் கணவன்! நகையும், துணியும், சோறும், காரும் எத்தனை நாட்களுக்கு அவளுக்கு இன்பம் தரமுடியும்? ஒரு நாள் சுசீலா 'வழுக்கி' வீழ்ந்துவிட்டாள்! விஷயம் பகிரங்கமாகிவிட்டது! தொட்டுத் தாலி கட்டிய கணவன் சும்மா இருப்பானா? 'ஆச்சா போச்சா' என்று கூவிக்குதித்தான் அவன். ஏச்சும் பேச்சும் எல்லை மீறின. எவ்வளவைத்தான் அவளால் சகித்துக் கொண்டிருக்க முடியும்? ஒரு நாள் இரவு யாருக்கும் தெரியாமல் வண்டி ஏறி, லாகூருக்குக் கம்பி நீட்டிவிட்டாள் சுசீலா! பெண், மானம் என்ற ஒன்றை மட்டும் விட்டுவிட்டால் அடுத்த விநாடியே மகாராணியாய் ஆய்விடலாம் என்பது சுசீலாவுக்குத் தெரிந்த பாடமாய் இருந்தது. தமிழ்ப் பெண்ணாயிருந்துகொண்டு அவளின் தன்மானத்தைத் பறக்கவிட அவளின் தமிழ் உள்ளம் இடந்தரவில்லை. அதனால் 'சுசீலா' என்ற தன் பெயரை 'ஜுலேகா' என்று மாற்றிவைத்துக்கொண்டாள்.

ஜுலேகா, லாகூர் கிளைவ் தெருவில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தன் 'கடை' யைத் திறந்தாள். இரண்டொரு வருஷத்தில், சமுதாயக் கோபுரத்தின் உச்சிப் படியில் அமரக்கூடிய அந்தஸ்துப் பெற்றுவிட்டாள் ஜுலேகா!......

சுதந்திரத்தின் பெயரால் இந்தியா இரண்டு பட்டது. இதன் காரணமாய், இனவெறியும், மதவெறியும் புற்றுப்பாம்பு போல மக்களின் மனத்திலிருந்து சீறிக் கிளம்பி நெளிய ஆரம்பித்தன. 'நான் முஸ்லிம் நான் ஹிந்து' என்று எல்லோரும் 'நானு'கி விட்டார்கள்!

லாகூர் ரணகளரியாகியது. ஒரு பாவமுமறியாத பாமர மக்கள் இன—மத வெறியர்களின் அராஜகச் செயலுக்கு உள்ளாகி நரக வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

இத்தகைய மாறுபட்ட மனப்பான்மை யால் எலியும் பூனையுமாகிவிட்ட லாகூர் மக்களுள் ஜுலேகாவும் ஒருத்திதானே? அவளும் ஒரு தினுசாகத்தான் இப்போது மாறியிருந்தாள். அதாவது தன்னினமல்லாத பிற இனத்தானுக்குத் தன்னுடலைத் தரக்கூடாதென்ற உறுதிகொண்டாளவள்! வேசியான அவளின் இந்தத் திட்டம் வேடிக்கையானது தான்! எனினும் அவள் இந்தக் கொள்கையை குரங்குப் பிடியாகப் பிடித்துக்கொண்டிருந்தாள். அவள் உள்ளத்திலும் 'இனம்' என்ற கழுகு புகுந்து கூடு கட்டிக்கொண்டது......

சென்ற வாரம், இரவு மணி பத்திருக்கும் யாரோ கதவு தட்டும் சப்தம் கேட்டது. படுக்கையை விட்டு எழுந்துபோய்க் கதவைத்திறந்தாள்.

இரத்தக்கரை படிந்திருந்த கத்தியொன்றைக்கையில் பிடித்த வண்ணம் வாலிபனொருவன் அங்கு நின்று கொண்டிருந்தான். அவனைக்கண்டதும் முதலில் பயந்து விட்டாள் ஜுலேகா. பிறகு தன்னைச்சமாளித்துக்கொண்டு "ஏன்? என்ன வேண்டும்" என்றாள் நிதானமாக.

"உன்னுடன் இன்றிரவு நான் தங்க வேண்டும்!" என்றான் அந்த வெறியன்.

"உன்னிஷ்டம்" என்று கூறிக்கொண்டே படுக்கையறைக்கு நடந்தாள் ஜுலேகா. அவளைப் பின் தொடர்ந்தான் அவன்.

கட்டிலின் மீது போய்ஒயிலாக உட்கார்ந்தாள் ஜுலேகா. அவனும்அவளருகில் அமர்ந்தான். அவள் அவனை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை ஏற இறங்கப் பார்த்தாள். அவளுடைய வலக் கரம் தலையணையின் அடியிலிருந்து எதையோ ஒன்றை எடுத்தது......

அடுத்த கணம் 'டுமீல்' என்ற வேட்டுச் சப்தம் எழுந்து அந்த வீட்டையே அதிரச் செய்துவிட்டது! கட்டிலின் மேல் அமர்ந்திருந்த அந்த வாலிபன், குண்டு பாய்ந்து குழி பறித்துவிட்ட தன்மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டே 'ஐயோ' என்ற அலறலுடன் கீழே உருண்டு வீழ்ந்தான். அவனுடல் ரத்தச்சேற்றை வாரிப் பூசிக்கொண்டது!...

கையில் வைத்திருந்த ரிவால்வாரை இறுகப் பற்றிக்கொண்டு பேய் போலச் சிரித்தாள் ஜுலேகா! அவளுடைய கண்கள் பிணமாகக் கிடந்த அந்த வாலிபன் கட்டிக் கொண்டிருந்த லுங்கியை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தன!......

அப்படியானால் அவன்?

ஜுலேகாவின் கொள்கை இமயத்தை முட்டிவிட்டது.

* * *

படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள் ஜுலேகா. அதே சமயம் கூடாரத்தின் வாசல் படுதாவை விலக்கிக் கொண்டு பூனை போல் உள்ளே வந்தான், அவளிடம் முதலில் ரொட்டி வாங்கித் தின்ற அந்த வாலிபன்!

ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்து விழித்தாள் ஜுலேகா. அவன் கேட்டான்:

"ஜுலோ! நீ இன்னும் தூங்கவில்லையா?"

"இல்லை"

"ஏன்?"

"ஏனோ!"

'ஜுலேகா! நம்மை ஏன் இன்னும் அனுப்பாமல் நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறான் அந்த அதிகாரி? நமக்குப் பின்னால் வந்தவர்களெல்லாம் போய்விட்டார்கள்; நம்மை மட்டும் அவன் அனுப்பச் சாக்குப் போக்குச் சொல்லிவருகிறானே?"

ஜுலேகா அவன் பேசி வந்ததை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாளே தவிர வாய்திறந்து பதிலொன்றும் கூறவில்லை. மறுபடியும் பேச்சைத் தொடர்ந்தான் அவன்:

"நம்முடன் வந்த அந்த நான்குபேரும் சோறு தண்ணீர் இல்லாமல் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு நாட்கள் அவர்கள் இங்கேயே இருக்க நேரிட்டால், நாம்தான் அவர்களை அடக்கம் செய்ய வேண்டி வரும்......"

ஜுலேகா பயங்கர மௌனம் சாதித்தாள்.

"ஜுலோ! ஏன் பேசாமலிருக்கிறாய்? இங்கிருப்பது உனக்கு கஷ்டமாக இல்லையா?"—

அவள் வாய் திறக்கவே இல்லை!

"அந்த ராணுவ அதிகாரி நேற்றும் இன்றும் உன்னை அழைத்துப் போய் ஏதேதோ

கேட்டுக்கொண்டிருந்தானே என்ன கேட்டான்?''

அவள் மெதுவாகச் சிரித்துக் கொண்டாள்!

"ஏன் சிரிக்கிறாய்? அவன் உன்னை என்ன கேட்டான்?''

"அந்த மதவெறியன் என்னுடன் இருக்க ஒரு நாள் விரும்புகிறான்!'' என்று உரத்த குரலில் கூவினாள் ஜுலேகா!

அவளுடைய இந்த கர்ஜனைக் குரலைக் கேட்டதும் அவன் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. பேயறைந்தது போல அவன் முகம் கறுத்துச் சுருங்கிவிட்டது.

இருவரிடையேயும் சிறிது நேரம் மௌனம் நிலவியது. மீண்டும் அவன் பேசினான்.

"ஜுலேகா! உன்னை அவன் விரும்புவதில் என்ன தவறு? நீதான் அவன் எண்ணத்துக்கு இணங்கினால் என்ன குடி முழுகிப் போய்விடும்."

"மிஸ்டர்! உமது உடம்பில் ஓடுவது இந்திய இரத்தமா? அல்லது சாக்கடைத் தண்ணீரா''

"ஏன் இப்படிக் கேட்கிறாய்''

"பின்னே என்னவாம்! அவன் நம் எதிரி! இந்தியப் பெண்ணாகிய என்னை ருசிபார்க்க அந்த நாய் அலைகிறது. நான் அதற்கு ஒரு போதும் உடன்படமாட்டேன். நான் நம் சமூகத்தாரால் ஒதுக்கப் பட்டவளாகத் தான் இருக்கிறேன். ஆனால் அதற்காக, வேற்றினத்தான் ஒருவனுக்கு அடிபணிய நான் ஒருப்படமாட்டேன்! என்னை ருசித்த பிறகுதான் நம்மை இங்கிருந்து அனுப்பப் போவதாக அவன் மார்தட்டுகிறான்! நானும் என்னுடனிருப்பவர்களும் இங்கேயே செத் தொழிந்தாலும் பாதகமில்லை. ஆனால் என் தாய்நாட்டின் பெருமையை நான் அவமதிக்கவோ மாசு படுத்தவோ மாட்டேன். இது நிச்சயம்! சத்தியம்!

"ஜுலேகா! நீ வேசி. பல பேரின் சொத்து. நாய் ஒரு சந்தி இருப்பது நகைப்புக்குரியது. மேலும், உன் கையில்தான் எங்கள் அறுவரின் உயிரும் இருக்கிறது. இதை நீ சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாடு என்றால் வெறும் மண்ணின் மகிமை மட்டுமல்ல. மக்களின் தொகையைப் பொறுத்தே அதன் பெருமையைப் போற்ற முடியும்! உன் ஒருத்தியின் பிடிவாதத்தால் ஆறுபேர் மாண்டார்கள் என்ற அவச்சொல் உன்னைத் தான் சாரும்!''

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''

"அந்த மிருகத்தின் ஆசையைப் பூர்த்தி செய்து எங்களைக் காப்பாற்ற வேண்டும்!''—

இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டு படுக்கையில் குப்புற வீழ்ந்து பொருமினாள் ஜுலேகா.

அவன் அவ்விடத்தை விட்டு எழுந்து நின்றான். கூடாரப் படுதாவை விலக்கிக் கொண்டு வெளியேறினான்.

அவனைத் தொடர்ந்து வெளியே வந்த ஜுலேகா அந்த ராணுவ அதிகாரியின் கூடாரத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்!

ஏன்! ஏன்! ஏன்?......

* * *

பொழுது புலர்ந்தது.

சப்பாணிக் குதிரைவண்டியின் ஏர்க்காலைத் தாங்கிக் கொண்டி நின்றது. வண்டிக்காரன் உற்சாகத்தோடு லகானைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவ்விரு பெண்களும், அவர்களுடைய கணவன் மாரும் சந்தோஷத்தோடு வண்டியில் வந்து ஏறினர். தனித்திருந்த வாலிபன் அவர்களுக்குப் பின்னால் வந்து வண்டியில் ஏறினான். அவன் கண்கள் கலங்கி நீரைச் சொட்டிக் கொண்டிருந்தன!......

வண்டி கிளம்பியது; டெல்லியை நோக்கி!

ஜுலேகா? அவள் ஏனோ வரவில்லை! அவள் எங்கே?......

கூடாரத்தில் அவள் பிணம் கிடந்தது! அவள் கையில் ஒரு ரிவால்வர் இறுகிக் கிடந்தது!

உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான். தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியைப் பாதுகாருங்கள்.

மார்கோ சோப்

டாய்லட் & மெடிஸினல்

கல்கத்தா கெமிகல்

CALCUTTA CHEMICAL

ஜண்டு பாலாமிருதம்

வலுவற்ற குழந்தைகளுக்கும், மெலிந்த தேகிகட்கும் மேலான ஔஷதம். தேகத்திற்குப் புஷ்டியைத் தரும். தளர்ந்த நரம்புகளுக்கு வலுவைத் தரும். 4 அவுன்ஸ் புட்டி 1-4-0

கீழ்க் கண்ட ஏஜண்டுகளிடம் கிடைக்கும்.

கும்பகோணம்: பிரிமியர் மெடிகல் ஸ்டோர்ஸ் லிமிடெட், கடைத்தெரு,

தி பார்மஸி, மடத்துதெரு.

காரைக்குடி: இந்திரா மெடிகல் ஹால்

திருச்சி: விநாயகர் மெடிகல் ஹால் தெப்பக்குளம்.

மதுரை: N. R. சாமி அண்டு கோ.

மாயவரம்: பிரிமியர் மெடிகல் ஹால்,

தஞ்சை: P. V. முத்துகிருஷ்ணராஜா சன், அய்யங்கடைத் தெரு.

சிதம்பரம்: நடராஜா டிஸ்பென்சரி,

கடலூர்: ஸ்ரீ ராம் பார்மஸி, புதுப்பாளயம்.

வியாபார நிபந்தனைகளுக்கும், மற்ற விபரங்களுக்கும் கீழேகண்ட விலாசத்திற்கு எழுதவும்,

சென்னை ராஜதானி ஏஜண்டுகள்:

தாமோதர் அண்டு கோ,

113, நயனியப்பநாயக்கன் தெரு சென்னை, 3.

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிட்.

சேர்மென்

ஸர். A. ராமஸ்வாமிமுதலியார் K. C. S. I., D. C. L. (Oxon)

(சென்னை நகரத்திலுள்ள ஆபீஸ்கள்)

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு,
பெரியமேட், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் & தியாகராய நகர்,

பிராஞ்சுகள்

அம்பாஸமுத்திரம்
ஆம்பூர் (N. A. Dt.)
சிதம்பரம்
கடலூர்
ஈரோடு
காஞ்சீபுரம்
காரைக்குடி
கும்பகோணம்
மதுரை
மாருதேரு
மாயவரம்
பாலக்காடு
புதுக்கோட்டை
ராமநாதபுரம்
சீர்காழி
தஞ்சாவூர்
தென்காசி
திருநெல்வேலி ஜங்ஷன்
திருநெல்வேலி டவுன்
வேலூர்
விஜயபுரம்
விழுப்புரம் &
விருதுநகர்

K. S. வைத்யநாதன்
அஸிஸ்டெண்ட் செக்ரடரி

குழந்தைகளுக்கு இன்றியமையாத டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.

புரட்சியின் குருபீடம்

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

விரிந்தகன்ற நெற்றி விழுமிய அறிவை விளங்கக் காட்டும், நீண்டு உருண்ட கண்களோ நெடிய சிந்தனையை எடுத்துரைக்கும்; முகத்தின் பொலிவும் தோற்றமும் மனவலியின் மிகுதியை வலியுறுத்தும், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எட்டாம் ஆண்டிலே அத்தகைய வாலிபர் லண்டன் மாநகரின் வீதி வழியே நடந்து செல்கின்றார்.

அவரது நடையையும் நொடியையுங்கண்ட ஆங்கில மங்கையரில் பலரும் பிரமிப்புக் கொண்டனர். ஒருத்தியோ இவர் "ஆண்மையின் வடிவமே" என்று வியக்கலானாள்; வேறொருத்தியோ, "அழகின் வடிவமேயன்றி வேறு அன்று" என்று மனம் குழைந்தாள்; மற்றொருத்தியோ "இளமையின் நலத்தை இவரிடமே காண்கின்றோம்" என்று உள்ளம் உருகலானாள்.

ஆடவரும் பெண்மையை விரும்பும் அத்துணை அழகு வாய்ந்த அவ்வாலிபரோ பிற மாதரைப் பெற்ற தாயாரெனவே கருதும் பண்பினர், பாரிஸ்டர் பட்டம் பெறப் படிக்கிறார் அவர். பேராசிரியர் அனைவரும் அவரது பெருமதிகண்டு பூரிக்கின்றனர், போற்றுகின்றனர். அப் பட்டம் அளிக்க வேண்டிய சமயம் நெருங்கியது. அப்பேராசிரியர் பரபரப்புக் கொள்ளும் வண்ணம்,

"புரட்சிப் புயலை வெகு தந்திரமாகக் கிளப்பிவரும் அப்பையனுக்குப் பட்டமளித்தல் ஒண்ணாது" என்று மேலிடத்திலிருந்து ஆணை வந்துவிட்டது. அது கேட்டதும், புன்னகையே புரிந்தார் அவ்விளைஞர். தோழர் அஃதறிந்து, இஃதே ஆண்மையின் இலக்கணம்! மலை சரிந்து வந்தாலும், மயங்காத மாண்புடையவர் இவர்!" என்று எண்ணி நின்றனர்.

அங்ஙனமிருக்கையில் அவரது மூத்த சோதரரை இந்தியாவிலே அதிகாரிகள் சிறை செய்துவிட்டனர். இதுகேட்டு அவர் புன்சிரிப்புக் கொண்டதும், "நீர் இந்தியாவுக்குத் திரும்பி வரக்கூடாது" என்னும் ஆணை அவருக்குக் கிட்டியது. அண்ணனது இளம்மனைவி தனியே இருக்கின்றாள். கடைக்குட்டியான சோதரனோ காளைப்பருவம் வாய்க்காதவன். இந்நிலையில் அவர் யாது செய்தார்?

அண்ணிக்குக் கொடுத்த நிருபத்தின் சுருக்கம் இது:—"அன்னையினும் மிக்க அன்பு வாய்ந்த அண்ணி! உனது பாதம் பணிகின்றேன். சின்னஞ் சிறு வயதிலேயே எனது தாயை இழந்தேன். எனினும் நினது அன்பையும் ஆதரவையும் துணைகொண்டு, அத்துயரை மறந்தேன். நீயே எனக்குத் தாயும் தந்தையும் தமரும் சுற்றமும் ஆனாய்!

"பூங்காவிலே பன்மலர்கள் பரிமளத்துடன் பூக்கின்றன, மாலையிலே வாடுகின்றன, பின்பு மண்ணில் உதிர்கின்றன. இதற்கு ஓர் எண்ணிக்கை உண்டோ? இது குறித்துக் கவலை கொள்வார்தாம் உளரோ? முன்னாளிலே முதலையின் வாயில் சிக்கி, கஜேந்திரன் கலங்கி ஓலமிட்டான். ஆதிமூலமே என்று அழைத்தான்; உடனே பரந்தாமனும் பரிவுடன் தோன்றினான்.

"அத்திருமாலின் அடியிணைகளில் அக் கஜேந்திரன் ஒரு மரைமலரைப் பறித்துச் சூட்டினான்' அக்கணமே கஜேந்திரன் விடுதலை பெற்றான், வீடும் எய்தினான். அத்தாமரை மலரும் வாடா மேனியுடன் திகழா நின்றது. என்னே அம்மலரின் மகிமை! ஈசன் பாதம் சேர்ந்த மலரன்றோ? மற்றைய மலர்களுக்கு அம்மேன்மை உண்டோ?

"அன்னை பாரதியும் அக்குஞ்சரத்தின் நிலையில் நிற்கின்றாள்; அடிமையெனும் முதலையின் வாயில் சிக்கிச் சீரழிகின்றாள். அத்தேவி இன்று நம் குடும்பப் பூஞ்சோலைக்கு உள்ளே புகுந்தாள்; நறுமலர் ஒன்று கொய்தாள்; நாராயணனது இணையடிகளில் சூட்டினாள். என்னே நம்தம் பூஞ்சோலை புரிந்த பாக்கியம்! எஞ்சியுள்ள மலர்களையும் அன்னை பாரதி இன்றே கொய்து ஈசன் பாதத்தில் சேர்க்கவேண்டுமென்று நான் துதியா நிற்கின்றேன்!"

இது நிற்க, கொலைக்குற்றம் ஒன்று; கொற்றவனுடன் போருக்கு எழுந்த குற்றம் ஒன்று; வெடிகுண்டு பண்ணும் விதங்கண்டு, விளம்பரஞ் செய்த குற்றம் ஒன்று. இவ்விதம் நானாவிதமான குற்றச் சாட்டுகள். இவை பற்றி அவ்வாலிபனை இங்கிலாந்திலிருந்து இங்கே கொணர்ந்தனர் அதிகாரிகள். அக்குற்றங்களுக்குத் தண்டனை யாது?

தூக்குமேடை என்கின்றனர் சிலர்; அன்று, தீவாந்தர சிட்சை என்கின்றனர் வேறு சிலர். எத்தகைய தண்டனையானாலும் என்ன? இவ்வாலிபரின் வாழ்வு இத்துடன் தீர்ந்துவிடும் என்கின்றனர் மற்றும் சிலர். அங்கிலையிலே கோர்ட்டினுள்ளே நுழைந்தார் அவ்விளைஞர். அவருக்கு வயது இருபத்தைந்து இருக்கலாம்.

நீதிபதிகளும், வக்கில்களும், காவலாளரும் பிறரும் அவ்விளவலை நோக்கி, "என்னே இவனது முகவிலாசம்! அவ்விலாசம் அனைவரையும் பிரமிக்க வைக்குமே! மனத்தூடே கடுகளவும் துயரம் இருப்பதாகத் தோனறவில்லையே! மலர்ந்த முகமும் விரிந்த மனமும் வாய்ந்த இவ்விளைஞன் தனது வாழ்வை வீணே கெடுத்துக்கொள்வானே?" என்று பலவாறு மனம் புழுங்கலாயினர்.

பல சொல்லி என்ன? கொலைக் குற்றத்திற்கு ஒரு தீவாந்தர சிட்சை; அரசருடன் போர் புரிய முயன்றதற்கு ஒரு தீவாந்தர சிட்சை! ஆகவே ஐம்பது வருஷம் அந்தமான் தீவிலே வசிக்கவேண்டும்! என்று தண்டனை இட்டுவிட்டது. உடனே, ரவிக்கை போன்ற ஒரு சட்டையும், ஒட்டுச் சல்லடம் போன்ற ஒரு சராயும், தலைக்கு ஒரு குல்லாயும் கொடுத்து, அவரைக் கோலஞ் செய்து விட்டனர் அதிகாரிகள்.

அந்தமானுக்குச் சென்றுவிட்டால் அவரைப் பார்க்க முடியாதே. ஆதலின் அவரது இளமனைவி, அவரைச் சிறைக்கூடத்திலே காண வந்தாள். இருவருக்கும் இடையே இரும்புக் கம்பிகள் கொண்ட கதவு. அக்கதவின்பின்னே வாலிபர். அருகே சிறை அதிகாரி. காவலுக்கு ஈட்டி தாங்கிய வீரர் இருவர். நெருக்கமான கம்பிகளினூடே ஊடுருவி நோக்க வேண்டும்.

கதவின் முன்னே நிற்கும் இளம் பெண் தனது காந்தனைக் கண்டாள்; கருத்துக் கலங்கினாள். முகமோ அக்கலக்கத்தைச் சற்றே மறைத்து நின்றது. அப்போது யாது சொன்னார் அவ்வாலிப வீரர்!,

"கண்ணே, என்னை அடையாளம் தெரிகிறதா உனக்கு? எனது உடை வேறாக இருக்கலாம். நானே பழைய மனிதன், உனது காந்தன், வேறில்லை. இந்த உடை போதுமா, என்று சிந்தாகுலம் அடையாதே. குளிரைத் தாங்க இந்த ஆடை ஓரளவு போதும். ஆண்டவன் மனம் வைத்தால் நாம் இருவரும் மீண்டும் சந்திக்கலாம், கூடிவாழலாம்!

"இதற்கு இடையில், சை, என்ன வாழ்வு இது! என்று எண்ணுவாயோ? அப்படியானால் சிறிது சிந்தனை செய். இல்வாழ்க்கை என்றால், கூடிக்குலாவுதல், குழந்தை குட்டிகளைப் பெற்று மகிழ்தல் என்று கொள்வது?, அப்படியானால், குருவியும் காக்கையும், நாயும் பன்றியும், குலவுகின்றன, குட்டி போடுகின்றன.

"அவற்றினுக்கும் வீர மனிதனுக்கும் வேற்றுமை இல்லையா என்ன? நாமோ ஆண்மை மிக்க மானிடராக அவனியிலே வாழவேண்டும். இதனை எண்ணிப் பார். நமது வீட்டிலே அடுப்பு புகையவில்லை, வறுமை தாண்டவமாடுகிறது என்று எண்ணாதே.

"பின்னாளிலே நம் தேசத்தில் பல்லாயிரக் கணக்கான வீடுகளிலே பொன்னும் மணியும் கொழிக்கும், இன்பமும் நலமும் திகழும், அகமும் முகமும் மலர்ந்து மக்கள் தோன்றுவர். எடுப்பும் ஏற்றமும் எங்கும் துலங்கும், இதற்கு நாம் வகைதேடி இருக்கிறோம். இதுவே நாம் பிறவி எடுத்த பயன்!"

அப்பால் அந்தமான் தீவுக்கு அவரை அதிகாரிகள் அழைத்துச் சென்றார்கள். 1910-ஆம் ஆண்டிலே அவருக்கு அத்தண்டனை வாய்த்தது, சிறையாளிக்கு அச்சிறையில் கழுத்தில் கயிற்று மாலை ஒன்று போடுவர். மாலையின் கீழ் பதக்கம்போல் மரக்கட்டை ஒன்று அல்லது தகரத் தகடு தொங்கும். அதில் சிறையாளியின் பெயர் இராது. இத்தனையாவது நபர் கைதி என்றே குறித்திருக்கும். தவிர தண்டனையடைந்த வருஷமும் விடுதலையாகும் வருஷமும் பொறித்திருக்கும்.

தன்னைத் தண்டித்தது அநீதம், தன்னை விசாரிக்க ஆங்கில அரசுக்கு உரிமை இடையாது என்று அகில உலக சங்க ஸ்தாபனத்துக்கு அவர் மனுச் செய்து கொண்டார். ஆங்கில அரசின் கைப்பொம்மையாக இருந்த அந்த ஸ்தாபனம் அவரது மனுவைத் தள்ளிவிட்டது. சிறையதிகாரி அச்செய்தியை அவருக்கு அறிவிக்க வேண்டும்.

ஐம்பது வருஷம் தீவாந்தர சிட்சையா என்று அந்த அதிகாரி கலங்கினர். மனிதர் தானே மறு நிமிஷத்திலே அந்த அதிகாரிக்கு அதிகார ஆணவம் தலையெடுத்தது. எடுக்கவே,

"ஐயோ பாவம்! ஐம்பது வருஷம் தண்டனை தந்துளரே. அத்தனை காலம் உயிரோடு இருப்பது எப்படி என்று கவலைப்பட வேண்டாம். 1960-ஆம் வருஷம் ஆங்கில அரசாங்கம் உன்னை விடுவித்துவிடும், கலங்காதே!" என்று கூறினன்.

அவ்வளவுதான் தாமதம், சுடச்சுடப் பதில் கொடுத்தார் அப்பெருமகன், அப்படியா? இந்த ஆங்கில அரசாங்கம் இந்தியாவிலே 1960-ஆம் ஆண்டு வரையில் நிலைக்குமா, என்ன, மனப்பால் குடிக்கவேண்டாம்' என்பதே அவ்வீரரின் மறுமொழி.

அரிச்சந்திரன் சந்திரமதி இருவரின் வார்த்தை கேட்டு, விசுவாமித்திர மகாமுனிவர் தமது வாயும் மதியும் இழந்து, வந்த வழியே போனதுபோல் அந்த அதிகாரியும் வாயும் மதியும் இழந்து சென்றான்.

அவ்வாலிபரையும் அவர் சோதரரையும் தீவாந்தர தண்டனைக்கு உள்ளாக்கியதுடன் அரசாங்கம் திருப்தியடையவில்லை. அவரது குடும்பத்தின் ஆஸ்தி பாஸ்தி அனைத்தும் பறித்துக் கொண்டு அட்டகாசம் செய்தது.

குடியரசு ஆட்சி நாம் பெற்றும் என்ன? அக்குடும்பத்தின் பறிமுதலான ஆஸ்தி திரும்பக் கொடுக்கப்படவில்லை. அவ்வாலிபரும் வயோதிகராக இன்றும் இருக்கிறார்.

லண்டன் மாநகரில் அவ்விளைஞர் இருந்த காலத்திலே இந்தியாவின் சுதந்திர தாகத்தைக் குறித்து அவர் சிறிய நூலொன்று எழுதினர். அதனை அதிகாரிகள் கைப்பற்றி வெளியே விடாமல் தடுத்துவிட்டனர். ஆயினும், லாயிட் ஜார்ஜ், வின்ஸ்டன்சர்ச்சில் போன்ற மந்திரிகள் அதனை வாசித்துப் பார்த்தனர்.

சர்ச்சில் என்பார் ஆங்கிலம் பேசுவதிலும், எழுதுவதிலும் மகா வல்லவர். இரண்டாவது உலகமகாயுத்த சமயத்தில் அவரது பேச்சே ஆங்கில மக்களைத் தட்டி எழுப்பியது; உலகத்தையும் மயக்கியது. அவ்வாலிபர் எழுதிய சிறிய நூலை வாசித்துப் பார்த்ததும், "இதனை எழுதிய இந்தியருக்கு நான் வணக்கம் செலுத்துவேன். ஆங்கிலேயர்கள்கூட இவ்வளவு அழகாக அழுத்தமாக ஆழமாக ஆணித்தரமாக ஆங்கிலம் எழுத முடியாது. அந்நூலைச் சுதந்தர மகாகாவியம் என்றே கூறவேண்டும்." என்று மனமாரப் புகழ நேர்ந்தது.

அத்தகைய இளைஞர் அந்தமான் தீவிலே சிறையில் கிடக்கையில், அவரது மூளைக்கு வேலை வேண்டுமே. பொழுதும் போக வேண்டுமன்றோ! எழுதவோ, படிக்கவோ அவருக்கு வசதி கிடைக்கவில்லை. மூளையும் சும்மா இருக்கவில்லை. இயற்கையிலேயே கவிஞர் அவர். ஆதலின் கவி கட்டத் தொடங்கினர்.

பிருஹத் கதை எனும் நூலை குணாட்டியர் என்பார் கானகத்தே எழுத நேர்ந்தது. எழுதுகோலும் கடுதாசியும் மையும் வேண்டுமே. தமது உடம்பின் ரத்தத்தையே மையாகவும், மரத்தின் இலைகளையே கடுதாசியாகவும், கை நகத்தையே எழுதுகோலாகவும் கையாண்டதாகக் கர்ண பரம்பரைகூறும்.

நமது இளைஞரோ சிறைக்கூடத்தின் சுவரையே கடுதாசியாகவும், கூரிய ஓட்டாஞ்சில்லையும், மூங்கில் முள்ளையும் எழுதுகோலாகவும் கொண்டு, கட்டிய கவிகளை வரைந்து வந்தார். மாதம் ஓர் முறை சிறைக்கூடச் சுவருக்குச் சுண்ணும்பு அடிப்பது வழக்கம். அப்பொழுது அக்கவிகள் மறைந்துபோம்.

அதன்மேல் அவர் தமது மன ஏட்டிலும் அக் கவிகளை எழுதிவந்தார். அத்துடன் இதர அரசியல் கைதிகள் சிலருக்கும் அக் கவிகளைக் கூறி, அவற்றின் பொருளை விளக்கி, மனனம் செய்யச்சொன்னர். பானிபட் (பானிபதம்) எனும் இடத்தில் நடந்த மூன்று யுத்தங்களே நமது தேசத்தின் தலைவிதியை மாற்றின.

அந்த யுத்தங்களைக் குறித்தே அவர் அக் கவிகளைக் கட்டினர். பானிபத மகா காவியம் என்று அதற்குப் பெயரிட்டுப் பதினயிரம் கவிகள் பாடினர். அவற்றைப் பிரசுரிக்க வேண்டும் என்பதே அவரது ஆசை. தாம் உயிருடன் வெளிவர முடியுமோ முடியாதோ வென்று அவருக்குத் தோன்றியது.

ஆதலின் தமக்கு முன்னே விடுதலையான அரசியல் கைதிகளுக்கு அக் கவிகளைப் பாடம் பண்ணிவைத்து வெளியே சென்றதும் தமது

அண்ணனிடம் அவற்றை ஒப்புவிக்கும்படி செய்தார். அவ்வாறே அவர்களும் செய்த னர். அக் கவிகளின் நயத்தையும் பொருளை யும் அறிந்த பலரும், "மகாகவிஞரே இவர்." என்று புகழ்ந்துள்ளனர்.

வேதங்களை மறையென்பர். எழுதாக் கிளவி யென்றும் சொல்வர். சமீபகாலம் வரையில் அவை அச்சுவாகனம் ஏறவில்லை. தலைமுறை தலைமுறையாக மக்களின் மன ஏட்டிலேயே அவை விளங்கிவந்தன. அவ் விதம் மறைகள் திகழ்ந்து வந்தமையை நமது இளைஞர் தமது செயலால் நிரூபித்தார்.

இனி ஆண்டவன் செயலால் இருபது ஆண்டு ஆனதும் அவர் விடுதலை அடைந் தார். லூயி பிஷர் என்பார் உலகப் பிர சித்திபெற்ற அமெரிக்க எழுத்தாளர். அவர் முன்னம் ஓர் சமயம் இந்தியாவுக்கு வந்து பலவாறான தலைவர்களையும் கண்டு பேசினர். பேசியதையெல்லாம் கட்டுரை களில் கோத்து வெளியிட்டார். நமது வாலி பரையும் கண்டு பேசினர். இதுபற்றி ஓர் வார்த்தைகூட அக்கட்டுரைகளில் இல்லை. ஏன் தெரியுமா?

நமது இளைஞருடன் லூயி பிஷர் பேசி யிருந்தபொழுது, முஸ்லீம் லீக் விரும்பும் வண்ணம், பாகிஸ்தான் கொடுத்துவிட்டால் என்ன? குடி முழுகிப் போய்விடுமா? என்று கேட்டார். அதற்கு நமது வாலிபரோ உங் கள் நாடாகிய அமெரிக்காவிலே நீக்ரோ ஸ்தான் ஏற்படுத்தி விட்டாலென்ன? என்று பதில் கேள்வி போட்டார். அதற்கு லூயி பிஷர், அவ்விதம் நீக்ரோஸ்தானம் அளித் தால் அது தேசியத்துக்கு மாறாகும் என்றார். "பாகிஸ்தானும் அப்படித்தான்" என்றார் நமது இளைஞர். இவ்வாறு நாலைந்து கேள்வி கள் போட்டு அந்த அமெரிக்க எழுத்தா ளரை நமது இளைஞர் மடக்கினர். அதனல் அந்த எழுத்தாளர் வெட்கிப் போனர். ஆன துபற்றியே நமது வாலிபரைப்பற்றி ஒரு வார்த்தைகூட அந்த எழுத்தாளர் தமது கட்டுரைகளில் கூறவில்லை.

காலஞ்சென்ற மகாகனம் சீனிவாச சாஸ் திரியார் ஒரு சமயம் நமது இளைஞரைக் காணச் சென்றார். அவரது வீட்டிலே ஆடம் பரப் பொருள்கள் எதுவும் காணப்பட வில்லை. பெஞ்சு, நாற்காலி துணிமணி எல்லாம் மிக மிகச் சாமான்யமாகவேயிருந் தன. அது கண்டு சாஸ்திரியார் ஆச்சரியம் அடைந்தார். "எல்லாரும் இன்புற எண் ணியே நகம் முளைத்த நாள்முதல் உழைத்து வருபவன் நான். இந்த அற்பமான பொருள் களும் அத்தியாவசியமா என்று எனக்குத் தோன்றும். தவிர இந்த அற்பப் பொருள் களும் இல்லாத மக்கள் எத்தனையோபேர் இருக்கிறார்களே." என்று மனம் கரைந்தார் நமது இளைஞர்.

லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை உலகப் பிரசித்திபெற்றது. அதன் கீழ்நாட்டு நிருப ராக இருந்தவர் ஸர். வாலண்டைன்சிரால் என்பவர். "இந்தியாவில் குழப்பம்" என்று அவர் அன்று எழுதிய நூலை அப் போது படிக்காத ஆங்கிலேயரும் இந்திய ரும் கிடையாது. அவர் பேரறிஞர். உலகப் பிரசித்திபெற்ற எழுத்தாளர். அவரது எழுத்தை ஆங்கில அதிகாரிகள் வேதவாக் கைப் போல் மதிப்பதுண்டு.

நமது இளைஞரின் தகைமையும் தோற்றத் தையும் எழுத்தையும் செயலையும் அறிந்தவு டனே, "இவருக்கு இணை ஏது? இவரது திறமைக்கும் ஈடு கிடையாது. இவரே புரட்சி யின் குருபீடம்" என்று புகழ்ந்து பேசி, வரைந்து வைத்திருக்கிறார்.

லூதர் என்பார் கிறிஸ்துவ மதத்தின் ஒரு சார்பையேற்படுத்தியவர். அது கண்டு மத வெறியர் வெகுண்டு, அவரைக் கொல்ல முயன்றனர். அப்போது அவர், "அந்தோ எனக்கு ஓர் உயிர்தானேயிருக்கிறது. ஐம் பது உயிர்கள் இருந்தாலும் ஒருங்கே வழங் கத் தயங்கேன்" என்று கூறினர்.

நமது வாலிபரும் தமது தமையனையும், தம்பியையும் அதிகாரிகள் சிறை செய்த வுடனே "அந்தோ எனக்கு இரு சோதரரே உளர், இருபது சோதரர்கள் இருந்தாலும் என் தேசத்தின் பொருட்டு அந்த இருபதின் மரையும் பலி கொடுக்கப் பின் வாங்கமாட் டேன்." என்று கூறியிருக்கிறார்.

தேசபக்தி காரணமாக பாரிஸ்டர் பட்டம் பெறாதுபோன முதல் இந்தியர் அவரே. தேசப்பற்றுக் காரணமாக அரசாங்க உப காரச் சம்பளத்தை வீசியெறிந்த முதல் இந்தி யர் அவரே. பரிபூர்ணமான சுதந்திரம் வேண்டுமென்று முதன் முதல் பகிரங்க மாகப் பறை சாற்றிய முதல் இந்தியர் அவரே. பரதேசத் துணிகளை அனைவரும் காண அக்கினிக் கடவுளுக்கு ஆகுதிசெய்த முதல் இந்தியர் அவரே. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் நீதி ஸ்தலத்தின் முன்னே வாதாடு வதில் பயனில்லையென்று முதன் முதல் கூறிய இந்தியரும் அவரே.

கொஞ்ச நாளாக அவர் நீறுபூத்த நெருப் பைப்போல் மறைந்து கிடக்கிறார். ஏன்? காலத்தின் கோலமா, தலைவிதியின் வலியா? அவர் யார்?

துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S 182-50 TM



நீங்கள் எங்கிருந்தாலும்...

ஹிமாலயா புக்கெ ஸ்னே

உபயோகியுங்கள்.



ஏனென்றால் இது பிரத்தியேகமாக இந்தியாவின் சீதோஷ்ணத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டது

சீதோஷ்ண நிலை எப்படி இருந்தாலும்—இந்தியாவில் நீங்கள் எங்கிருந்தாலும், ஹிமாலயா புக்கெ ஸ்னே உங்கள் சருமத்தை அதிக மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்கிறது. இதன் நறுமணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்.

இன்னுமொரு நேர்த்தியான **இராஸ்மிக்** தயாரிப்பு

HBS. 6-X30 TM

இராஸ்மிக் கம். லிட். லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது.


தொடர் கதை
ஜி. எஸ். மணி
எழுதும்
நாகரீகம் எங்கே?

நாகரீகம் எங்கே?

ஜி.எஸ்.மணி

4

மீனாக்ஷிசுந்தரத்தின் வரவால் பத்மநாப முதலி யாரைக் காட்டிலும் அதிகமான தொல்லையடைந்தவள் அவருடைய மூத்த தாரத்தின் பெண் வனஜாதான்! அவன் கொட்டியிறைத்த பண்டங்களை அவள் வாரிவைத்தாள்; அவன் அலங்கோலமாக்கிய அறைகளை அவளே சுத்தம் செய்து மீண்டும் திருத்தியமைத்தாள்; அத்துடன் அவள் பொறுப்பும் இன்னும் அதிகமாகியது. தினப்படி தோய்த்து உலர்த்த வேண்டிய துணிமணிகள் இன்னும் பன்மடங்காகப் பெருகின; சமையல் கெடுபிடிகளும் அதிகமாயின. என்ன செய்தும், கடைசியில், அவளுக்கு மிஞ்சியது அவச்சொல்லும், கொடுமையும் தான். அவள் விஷயத்தில் சொர்ணம்பாள் அரக்கியாகவே இருந்தாள்.

மீனாட்சி அந்த வீட்டை அல்லோல கல்லோலப்படுத்தும் அரக்கனாக மட்டும் நிற்கவில்லை; ஸதா ஸர்வதா வனஜாவைப் பின் தொடரும் 'கீசக'னாகவும் மாறிவிட்டான்.

அடிக்கடி வனஜாவை வெறித்து நோக்குவான்; அவள் போகுமிடமெல்லாம் பின்தொடர்ந்து பல்லைக் காட்டுவான்; வாயில் வந்ததைப் பிதற்றுவான்.

அந்த ஹிம்சை வனஜாவுக்குத் தாங்க முடியாமல்போய்விட்டது. சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் அவள் திண்டாடினாள்.

மீனாட்சி ஒருநாள் சொர்ணத்திடமே, "அக்கா! வனஜாவை நான் கட்டிக்கிறேனே?" என்று அசடுவழியச் சொன்னான்.

அதற்கு மட்டும் அவள் அவனை அடக்கினாள்; ஆயினும் சரியானபடி கண்டிக்கவில்லை "சீ, உனக்கு எதுக்குடா இந்த வாழாவெட்டிப் பொண்ணு! ஜோராய்—ராணிமாதிரி உனக்கு ஒரு பெண்டாட்டியைப் பார்த்து நான் பண்ணிவைக்கறேண்டா, கண்ணே!" என்று சொல்லிச் சீராட்டினாள்.

மீனாட்சி கேட்கவில்லை: "போக்கா! நான் மாட்டேன்! வனஜாவைத்தான் கட்டிக்குவேன்! மாட்டேன்னா ஒன்னை அடிப்பேன்!" என்று பிதற்றினான்.

அதேபோல் ஒருநாள், வனஜா தனித்து இருக்கையில், துராசையோடு அவன் அவளை அணுகினான்.

வனஜா பாம்பெனச் சீறினாள்; "சீ! மானங் கெட்டவனே! போ அந்தாண்டே!" என்று அவன்மீது புலியாகப் பாய்ந்தாள்.

சரியாக அதே சமயம் அங்கே வந்து பார்த்த சொர்ணம்பாள் பத்ரகாளி சொரூபம் எடுத்து விட்டாள்.

"ஏண்டி மானங்கெட்ட நாயே? நீ தாண்டி மானங்கெட்டவள்; உன்னைப் பெத்த அப்பன் ஒரு

விட்டாய்? நான் போட்ட லெட்டருக்கும் பதில் இல்லை''

''எழுதுவதற்கு ஒன்றுமே யில்லை பத்மா''

''ஒன்றுமே இல்லையா—ஒன்றும் தோன்றவில்லையா? நானே வந்துகூட உன்னைப் பார்த்திருப்பேன்; ஆனால்...... உன் சித்தியை நினைத்தால்... எனக்கே பயமாய் இருக்கு வனஜா!'' என்றாள் பத்மா.

வனஜா வாய்திறக்காமல் இருந்தாள்.

அவள் விஷயத்தில் அதிக சிரத்தை கொண்டவளான பத்மா அவளைக் கூர்ந்து நோக்கியபடியே ''இன்னும் நல்லகாலம் பிறக்கவில்லையா?'' என்று எல்லையற்ற பரிவுடன் கேட்டாள்; வனஜாவின் கண்கள் கலங்குவதைக் கண்டாள்.

''அடி, அசடே? ஏன் அழறே'' என்று உள்ளக் குழைவுடன் சொல்லிவிட்டு, ''இதோ பிராகாரத்தைச் சுற்றி வருவோம்; வா; இங்கேயே நின்றால் நாலுபேர் பார்ப்பதற்கு இடமாகும்'' என்றழைத்தாள்.

இருவரும் மெதுவாகப் பிராகாரத்தைச்சுற்றி வலம் வந்துகொண்டே பேசலாயினர்.

''கிளி போன்ற உன்னை உன் அகமுடையான் என்ன காரணத்துக்காகட வேண்டாமென்கிறான்?'' என்று வினவினாள் பத்மா.

அவர் சொல்லும் காரணம் விசித்ரமாய்த்தானிருக்கு; நான் நாகரிகமாய் இல்லையாம்!'' என்று வருத்தத்துடன் வனஜா சொன்னாள்.

''அப்படி யென்றால்?''

''எங்களுக்குக் கல்யாணமான பிற்பாடு ஒரு முறை இங்கே வந்திருந்தார்; அவருடைய நண்பர் ஒருவரும் கூடவே வந்தார்; அவர்களுக்கு எதிரே நான் தாராளமாகப் பழகவில்லையாம்; அவர்களோடு உலாவ வரவில்லையாம்; அவர் நண்பரோடு ஸகஜமாகப் பேசவில்லையாம்; இன்னும் எவ்வளவோ—கை குலுக்கவில்லையாம்; ஆடவில்லையாம்; பாடவில்லையாம்; என் டிரஸ்கூட கர்னாடகமாய் இருக்காம்; போதுமா?''

ஸரிதான்; அவர் அசல் மேல்நாட்டுக்காரரைப் போலவே இருப்பார் போலிருக்கு!''

''வெள்ளைக்காரன் அவரிடம் பிச்சை வாங்க வேண்டும்!''

''உன்னையும் வெள்ளைக்காரி யாக்கிப் பார்க்க வேணுமென்கிறார்?''

வனஜா மௌனமாய்ப் பெருமூச்செறிந்தாள்.

அவள் புருஷனின் மனப்போக்குப் பத்மாவுக்கு வேடிக்கையாக இருந்தது; ''நீயே பார்த்துக்கொள் வனஜா-இதிலிருந்து நம் அடிமை மோகம் எவ்வளவில் இருக்கிறதென்பதை! நம்மவர்கள், ஸகல விதத்திலும் வெள்ளைக்காரனைக் காப்பியடித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, இன்றுவரை, ஒரு வெள்ளைக்காரனாவது நம்மவர் பழக்க வழக்கங்களைக் கையாண்டு, வேஷ்டி உடுத்திக்கொண்டதை நீ பார்த்திருக்கையோ? ஏன் நம் ஜனங்களுக்கு மட்டும் இவ்வளவு அடிமை மோகம்?'' என்றாள்.

வனஜா வாயே திறக்கவில்லை; தலை குனிந்தபடி மெதுவாக நடந்துகொண்டேயிருந்தாள்.

''ஏன், வனஜா? நீதான் உன் கணவன் இஷ்டப்படி நடந்துகொண்டால் என்ன?'' என்று சட்டென்று அவளைப் பார்த்துக் கேட்டாள் பத்மா.

''இப்போது அவர் என்ன சொன்னாலும் நான் கேட்கத் தயார்தான்; இதைத் தெரிவித்து அவருக்கே எத்தனையோ கடிதங்களும் எழுதிவிட்டேன்; என் கைதான் ஓய்ந்து போகிறதே தவிர அவரிடமிருந்து பதிலே இல்லையே? நான் என்னடி செய்வேன், பத்மா? வாழாவெட்டி என்னும் கடுஞ் சொல்லை என்னால் பொறுக்கவே முடியவில்லை'' என்று சொல்லி வனஜா பத்மாவைக் கட்டிக்கொண்டு தேம்பினாள்.

பத்மா எதைப் பற்றியோ அதிதீவிரமாக யோசிப்பதாகப் புலப்பட்டது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டவளாய், வனஜாவின் முகத்தை நிமிர்த்தி அவளை உற்றுக் கவனித்துக்கொண்டே, பத்மா ''எனக்கு ஒரு யோசனை தோணறது வனஜா; அதுதான் சரியென்றும் என் புத்திக்குப் படுகிறது. அவர் அழைக்காவிட்டாலதான் என்ன மோசம்? நீயாகவே தான் அவரிடம் போயிரேன்? கல்யாணம் என்று ஆனபிற்பாடு இந்த உரிமைகூடவா உனக்குக் கிடையாது? நேரிலேயே புறப்பட்டுப் போய்விட்டால் வெட்டியா தள்ளிவிடப் போகிறார்? என்னதான் ஆகிறது, பார்க்கலாமே? என்றாள்.

ஆலயமணி 'டணார்—டணார்' என்று ஒலிக்கத் தொடங்கியது.

வனஜா சொன்னாள்: ''நானும் இப்போது அதைப்பற்றித்தான் அடிக்கடி யோசித்து வருகிறேன்; இங்கேயே கிடந்து இந்தச் சித்தியிடம் மாட்டிக்கொண்டு உழல்வதைவிட, கஷ்டமோ—சுகமோ, அவர்காலடியிலேயே பிராணனை விடுவது மேலென்றுதான் படுகிறது''.

''ராமன் இருக்குமிடம் அயோத்தி; அப்படியே தீர்மானம் செய்துவிடு, வனஜா!'' என்றாள் பத்மா.

தீப ஆராதனைக்காக ஆலய மணி ஓயாமல் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

6

பத்மநாப முதலியார் ராமாயணம் வாசித்துக் கொண்டிருந்தார்; ஸ்வரம் தவறாமல், ராகம்

போட்டுப் படித்து ரஸிப்பதில் வெகு சுவாரசிய மாக ஈடுபட்டிருந்தார்.

"இன்னுமொரு குழந்தை பிறக்கணுமென்பதற் காக ராமாயணம் வாசிக்கிறீர்களா என்ன? இருப் பது போருதா?" என்று பாதி ஹாஸ்யமாகவும், பாதி மிடுக்காகவும் சொல்லிக் கொண்டு அங்குப் பிரசன்னமான சொர்ணத்தைக் கண்டவுடனே, அடுத்த எழுத்தைக்கூடப் பாராமல் அப்படியே 'டப்'பென்று புஸ்தகத்தை மூடிவிட்டுத் திரும் பினர்.

"குழந்தை வேணுமென்ருல்தான் ராமாயணம் வாசிப்பதா என்ன? சுருக்க, ஸம்சார பந்தத்தி லிருந்து விடுபட்டுப் பரலோகம் போய்ச் சேர வேணுமின்னு ஆசையிருந்தாலும் ராமாயணம் படிக்கலாம்; அப்பொ யுத்த காண்டத்தைப் படிச்சால் போதும்; ஆரம்பிக்கலாமா?"

"ஏன்? என்னைக் கண்டால் அவ்வளவுக்குக் கசந்து போயிடுத்தோ?"

"இல்லை இல்லை; தித்திப்பு அளவுக்கு மீறிப் போயிடுத்து!"

"அப்படி வேண்டாம்னு இருந்தால்—பாவம்— நீங்க பரலோகம் போவானேன்? ஓங்க மாப் பிள்ளை ஓங்க பொண்ணைப் பண்ணியிருக்காப் புலே—'வேண்டாம்'னு தள்ளி வச்சூட்டா தீர்ந் தது!"

"இந்தா—வனஜாவுக்கு மனசு புண்ணுகும்படி யாய் பேசாதே பேசாதேன்னு அடிச்சுக் கிறேனே? மூளையில்லை?—பாவம் அது ஏற்கனவே ரொம்ப நொந்து போய்க்கிடக்குது—நீ வேறு சள்ளையாய் இருக்கியே?

"அதுதான் சள்ளையாய் இருக்கேன்னு ஒரு வழியா ஒழிச்சுப்பிடுங்கன்னு சொல்றேன்!

"கிடக்கு கிடக்குன்னு பார்த்தால், என் னவோ, ரொம்ப ரொம்ப பயமுறுத்தறியே? உன் னைத் தள்ளியே வச்சூட்டேன்னு நீ என்னதான் செஞ்சூடுவே? கிழிச்சிப்புடுவியோ, கிழிச்சு!"

"அப்படி வாடா என் சிங்கக்குட்டி! என்ன செய்வேன்னு கேக்கறியளா? கோர்ட்டிலே தாவா போட்டு ஜீவனும்சம் வாங்குவேன்னேன்! தெரியுமா?"

"பொண்டாட்டியே வேண்டாம்னு தள்ளற ஒரு மனுஷன் அப்புறம் அவளுக்கு ஜீவனும்சம் வேறே குடுக்கச் சம்மதிப்பனுன்னு கேட்கிறேன்!"

"அப்படீன்னு என் கதி?"

"நீ இஷ்டப்பட்டால்-வேறு யாராவது ஒரு கிழ வனைக் கட்டிக்கொண்டு மாரடிக்க வேண்டியது தான்!" என்று சொல்லிச் சிரித்தார் முதலியார்.

"அப்போ ஓங்க வனஜா அந்தமாதிரி பண்ண லாம்னு சொல்லுங்க!" என்ருள் சொர்ணம் சளைக்காமல்.

"சீ! அதிகப் பிரசங்கி! வாயை மூடு!" என்று சீறினர்.

சொர்ணம் சிறிதும் மிரளவில்லை; அவர் கோபத்தைக் கடுகளவுகூட மதிக்காமலே, "ரொம்ப ஸரி, அப்ப டீன்னல், ஓங்க வனஜாவாலே என் தம்பிக்குக் கெட்ட பெயர் வரவிருக்குது போலிருக்கு? முதல்லே அவளுக்கு எப்படியாவது ஒரு வழிபண் ணிப்புட்டு அப்புறம் நீங்க ராமாயணம்—மஹா பாரதம்-எல்லாம் வாசியுங்க; ஆமாம்; இப்பொ வேயே அவ என் தம்பிக்குக் கெட்ட பெயரைக் கொண்டு வந்தூட்டா!" என்ருள்.

"அதுக்கு ஒரே வழி; உன் தம்பியை உங்கம்மா கிட்டெ அனுப்பிவச்சூடறது தான்!" என்று பரம நிதானமாகச் சொன்னர் முதலியார்.

"ஏன்? அவளைப் புருஷன் வீட்டுக்கு அனுப் புறத்துக்கு வழியே இல்லையோ? அவள் பண்ணு கிற அட்டஹாஸம்—அந்த மாய்மாலம்......"

"உன் தம்பி மகா யோக்யனே? எனக்கு ஒண் ணுமே தெரியாதுன்னு நினைத்துப் பேசாதே!" என்று அவர் உறுமினர்.

"அப்பா!" என்று வனஜாவின் குரல் வந்தது.

அறைவாயிற்படியருகிலே சாக்ஷாத் வனஜாவே நின்றுகொண்டிருந்தாள்! அவள் மதி முகத்திலே எல்லையற்ற அமைதி குடிகொண்டிருந்தது; அவள் சொன்னுள்:

"அப்பா என் விஷயமாக இனியாருக்கும் மனஸ் தாபப்பட இடமே இருக்காது; நானே போகத் தீர்மானித்துவிட்டேன்!"

"எங்கேயம்மா?" என்று கேட்டார் திகைத்துப் போன முதலியார்.

"என் கணவரிடம் தான்! கல் என்ருலும் கணவன்; புல் என்ருலும் புருஷன்; நானும் தான் எவ்வளவுகாலம் இருக்க முடியும்? அவர் என்னை விரும்பாவிட்டாலும் பரவாயில்லை; நான் போகத் தான் போகிறேன்!" என்ருள் பரம நிதானமாய்; ஒவ்வொரு சொல்லிலும் தீர்மானம் தெளிவாகப் பிரதிபலித்தது.

"ஸரிதான் வனஜா; ஆனுல்......அவன் உன்னை ஏற்காவிட்டால்......?" என்று தயங்கினர்.

"அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாமப்பா!" என்று அவள் சொன்னபோது உறுதியான தன் நம்பிக்கை அந்தக் குரலிலே ஒலித்தது.

பத்மநாப முதலியார் சொல்வதறியாமல் சொர் ணத்தின் முகத்தைப் பார்த்து விழித்தார்.

சொர்ணம் பதிலே சொல்லாமல் விறைப்புடன் உள்ளே போனுள்.

"அந்த நாய் என்னவோ பேத்துகிறதென்று நீயும், இப்படி........." என்று ரகசியக் குரலில் சொல்ல ஆரம்பித்த தகப்பனுரை இடைமறித்து வனஜா, 'அதெல்லாம் ஒன்றுமில்லையப்பா; நீங்கள் வீண் கவலைப்படாதிர்கள்; எனக்கே கஷ்டமாய் இருக்கிறது" என்ருள்.

கடைசி வார்த்தைகளைச் சொல்லும்போது அவளையும் அறியாமலேயே கண் கலங்கி, குரலும் கம்மியது.

"இது எதில் போய் முடியுமோ" என்று திகைப்பவரைப் போலே சிறிது நேரம் முதலியார் வனஜாவின் வதனத்தையே கண்கொட்டாமல் பார்த்தபடி நின்ருர்.

அப்புறம் அவளிடம், அன்பும், பரிவும், இரக்கமும் ஒருங்கே, கலந்த குரலில், "அப்படியென்ருல், உன் இஷ்டத்திற்குத் தடையாக நான் ஒன்றுமே சொல்லப் போவதில்லை, வனஜா; நானே உன்னை அழைத்துக் கொண்டுபோய் விட்டுவிட்டு வருகிறேன். எவ்விதத்திலாவது நீ நன்ருக இருந்தால் ஸரி;" என்று சொல்லும்போது அவருக்கும் கண்களில் நீர் சோர்ந்தது.

நல்ல நாள் பார்க்கப் பஞ்சாங்கத்தைப் புரட்டலானுர்.

"நாளும் பார்க்க வேண்டாம்; நக்ஷத்திரமும் பார்க்க வேண்டாம் அப்பா; இன்றே–இப்பவே புறப்படுவோம்" என்ருள் வனஜா.

7

பத்மநாப முதலியாரும், வனஜாவும் கோபாலனின் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

அவர்கள் போன ஸமயம் கோபாலன் வீட்டிலே இல்லை; எங்கேயோ வெளியில் போயிருந்தான்.

கோபாலனின் தங்கை சுசீலாதான் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தாள்.

சற்றும் எதிர்பாராத வகையில் அவர்களுடைய திடீர் வரவைக் கண்டு முதலில் அவளும் சற்றே திகைத்து நின்றுவிட்ட போதிலும் நிமிஷத்திலே சமாளித்துக் கொண்டுவிட்டாள்; தம் வீட்டு வாசலிலே வாடகை வண்டி வந்து நிற்பதைக் கவனித்த சுசீலா, 'யார் வருகிருர்களோ' என்று பார்க்க ஓடோடியும் வந்தாள். முதலில் பத்மநாப முதலியாரும், அடுத்தாற்போல் வனஜாவும் வண்டியிலிருந்து இறங்குவதைக் கண்டு ஆச்சர்யத்திலுல் ஸ்தம்பித்து விட்டாள்.

அப்புறம் நிலைமையை அனுசரித்து, "வா, வா, மன்னி! வாங்கோ மாமா!', என்று வாய் நிறைய அழைத்தாள்,

அசட்டுச் சிரிப்புடன் முதலியார் அவளைப் பார்த்து, "வந்தோம்; மாப்பிளேக்கு கடுதாசிமேல் கடுதாசியாக எழுதி எழுதிப் பார்த்தோம்; ஏனோ அவர் மனசு இரங்கவில்லை; நம்ப வனஜாவோ, 'என்ன வந்தாலும் வரட்டும், என்னை அழைச்சிண்டு போய் விட்டுடு' ன்னு ஒரு காலிலே நின்ருள். அதது அந்தந்தக் காலத்துலே, ஏதோ, குடியும் குடித்தனமுமாய், நன்ன இருந்தால் தானே பெத்தவங்க மனசும் குளிரும்; குழந்தையை அவள் இஷ்டப்படியே அழைச்சுண்டு வந்தூட்டேன்; இனிமே...... ஏதோ......... உங்க தயவு......" என்று சொல்லித் தயங்கினுர்.

இன் முகத்துடன் சசீலா, "அதுக்கென்ன மாமா; இனிமேல வனஜா கண் கலங்காமல் பார்த்துக் கொள்வது என் பொறுப்புன்னு வச்சுக்குங்கோ; நீங்க வீணுய் உங்க மனசை அலட்டிக்க வேண்டாம்" என்று சொன்னுள்.

வனஜா தலை குனிந்தபடி சுசீலாவின் அருகில் போய் நின்ருள்; ஒரு கையால் அவளை ஆதரவுடன் அணைத்துக் கொண்ட சுசீலா, மற்ருெரு கரத்தால் அவள் முகத்தை நிமிர்த்தி, "இப்பொவாவது தைரியமாய்ப் புறப்பட்டு வந்தையே வனஜா; இதுவே நல்ல காலம் வந்துவிட்டதற்கு அடையாளம்" என்று அன்புடன் சொன்னுள்.

அளவற்ற நன்றியால் வனஜாவின் கண்ணில் நீர் துளித்தது.

"ஆத்திலே எல்லாரும் சௌக்யந்தானே?" என்று அசடு வழியக் கேட்டார் முதலியார், சுசீலாவைப் பார்த்து,

"ஆஹா; சௌக்கியத்துக்கு ஒன்றும் குறைவு இல்லை, உங்கள் வீட்டிலும் சௌக்கியந்தானே?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"உம்" என்று தலையாட்டிக் கொண்டே முதலியார் சுற்றும் முற்றும் பார்த்தார்; "மாப்பிள்ளை எங்கே? காணுமே!" என்று நன்ருக வெளிப்பட்ட பயத்துடனே வினவினுர்; குரலும் கம்மியது.

"எங்கேயோ வெளியில் போனுன்; வந்து விடுவான்; நின்னுண்டே இருக்கேளே! உக்காருங்கோ; காப்பி கொண்டு வரேன்" என்று உபசரித்தாள்" சுசீலா.

வனஜாவை அழைத்துக் கொண்டு சுசீலா உள்ளே போனுள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் திரும்பி வந்து, பத்பநாப முதலியாருக்கெதிரில் பக்ஷணத் தட்டையும், காப்பியையும் வைத்தாள்.

சாப்பிட்ட பின்னர், முதலியார், "மாப்பிள்ளை வர ரொம்ப நேரமாகுமோ?" என்று கேட்டார்.

"எப்போ வராளே சொல்ல முடியாது; நேர மானுலும் ஆகும்" என்றுள் சுசீலா.

"அப்போ நான் உத்தரவு வாங்கிக்கறேன்! மாப்பிள்ளை வந்தால் சொல்லுங்கோ!" என்று சொல்லிக் கொண்டே எழுந்து நின்று விடை பெற்றுக் கொள்ளும் பாவனையில் கைகூப்பினர்.

"அதுக்குள்ளேயா ஊருக்குப் போகணும்? இருந் திருந்து வந்திருக்கிறீர்கள்! இரண்டு நாளாவது தங்கிவிட்டு, சம்பந்தி வீட்டுச் சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டுப் போனுல்தான் அழகாயிருக்கும்! எங்களுக்கும் கௌரவமாய் இருக்கும். விபரீதம் ஒன்றும் நடந்துவிடாது; பயப்படாதீர்கள்!" என்று சிரித்தாள் சுசீலா.

"இவ்வளவு குணவதியாய், அன்பாய் நீங்கள் இருக்கும்போது எனக்குப் பயமென்னம்மா? உங் களைப் பார்த்துப் பேசினதுமே என் கவலையெல் லாம் பஞ்சாய்ப் பறந்தூட்டுது!...... இருந்தாலும் ஊரிலே ரொம்ப வேலையிருக்கு; இப்போ போய் விட்டு அப்புறம் சாவகாசமாய் இன்னொரு நடை கட்டாயம் வரேன்!" என்றுர் முதலியார் பிடி வாதமாய்.

"என்னமோ; வந்தவரை ஏன் அதற்குள் போகச் சொல்லிவிட்டாய்' என்றுதான் அண்ணு கோபித்துக் கொள்வான்; இனிமேலாவது நீங்கள் ளாம் இங்கே வரப்போக இருந்தால்தான் நன்னு யிருக்குமென்று எனக்குப் படுகிறது" என்றுள் சுசீலா.

"அப்புறம் கட்டாயம் வந்து பார்க்கிறேன்; இப்போ அவசரமாய்ப் போகணும்!" என்று சொல்லி, பத்மநாப முதலியார் விடைபெற்றுக் கொண்டார்.

அந்த வீட்டிலே சுசீலா தான் பெண்—பெரிய மனுஷி — யுவதி—எஜமானி—எல்லாமே. சிறு வயதிலேயே பெற்றேரை இழந்து விட்டார்கள்; குடும்பத்தின் மூத்த சகோதரனின் மேற்பார்வை யிலே வளர்ந்து வந்து, தகுந்த வயதை அடைந் ததும், தம்மைத் தாமே கவனித்துக் கொள்ளலா னுர்கள்.

முரட்டுச் சுபாவத்தினுலும், தன்னிச்சைப்படியே போக விரும்பும் மனப்போக்கினுலும், யாருக்கும் அடங்காமல் திரிந்து வந்த கோபாலனைத் தக்க படி கவனித்துக் கொள்வதற்கு அவன் தங்கை சுசீலா அவனிடமே தங்கவேண்டியிருந்தது.

கன்னி கழியாத யுவதிதான் என்றுலும் சுசீலா பெரிய விவேகியாய் இருந்தாள்; யார் யாருடன், எந்தெந்த ஸமயங்களில் எந்தமாதிரி பழகவேண் டுமோ, அந்த முறையில் நடந்துகொண்டு, பார்ப் பவர் உள்ளங்களைக் கவர்ந்து வந்தாள். ஆகவே முரடனுன கோபாலனிடம் சுசீலாவுக்குச் செல் வாக்கு இருந்தது; அந்த வீட்டிற்கு வருவோர்— போவோர் முதற்கொண்டு, வீட்டில் வேலை பார்க் கும் மற்றவர்களுக்கும் அவளிடம் விசுவாசம் இருந் தது; வீட்டு எஜமானியாகி அந்த ஸ்தானத்தை யும் திறமையுடன் நிர்வகித்து வந்தாள்.

வனஜா சுசீலாவைத் தெய்வமாகவே மதித்து விட்டதில் வியப்பென்ன?

"நானே கூட உன்னை இங்கே வரச்சொல்லி எழுதலாமாவென்று எவ்வளவோ தடவைகள் யோசித்திருக்கிறேன் மன்னி; இருந்தாலும் உன் மனசைப் பூர்ணமாக அறிந்துகொள்ள வழியின்றி, பேசாமல் இருந்துவிட்டேன்; ஸமீப காலமாகத் தான் நீ கோபுவுக்கு எழுதிய கடிதங்களைப் பார்க் கும் சுதந்திரம் எனக்கும் கிடைத்தது; அதிலி ருந்து உன் மனசை ஒருவாறு தெரிந்துகொண் டேன். நான் உனக்கு எழுதுவதற்குள் நீயே புறப்பட்டு வந்துவிட்டாய்" என்று மனப்பூர்வ மான பரிவோடு பேசினுள் சுசீலா.

"இன்னும் முன்னுடியே இங்கே வராமலிருந் தது என் முட்டாள்தனம்தான் சுசீலா; இப்போது தான் எனக்கே அது தெரிகிறது" என்று சொன் னுள் வனஜா.

"இதில் உன் முட்டாள்தனம் ஒன்றுமேயில்லை மன்னி; அண்ணுவின் முரட்டுத்தனம்தான் இத் தனைக்கும் காரணம். தவிர —பிராப்த காலமும் வந்து ஒத்துக்கொள்ள வேண்டுமே!" என்று அனு பவத் துறையில் பழுத்த பழம்போல் பேசினுள் சுசீலா.

"அவர் வந்து பார்த்த பிறகு என்ன சொல்லு வாரோ என்பதை நினைத்தால்—நினைக்கவே என் நெஞ்சு நடுங்குகிறது சுசீலா" என்று வனஜா சொன்ன பொழுது, வாஸ்தவமாகவே, கைதிக் கூண்டிலே, மரணதண்டனையை எதிர்பார்த்து நிற்கும் குற்றவாளியைப் போலவே காணப் பட்டாள்.

சுசீலாவும் சற்றே யோசித்தாள்: "அண்ணு கொஞ்சம் மூர்க்கன்தான்; இருந்தாலும் பிரளயம் ஒன்றும் வந்து விடாது மன்னி! தைரியமாயிரு; நான் உன் பக்கம்தான் நிற்பேன்; அண்ணுவின் உள்ளப் போக்கை என்னுல் அணை போட்டுத் தேக்க முடியுமென்பதை நீ பூர்ணமாக நம்பு" என்று அவள் சொன்னபோது, 'ஆதிமூலமே' என்றழைத்த யானையைக் காப்பாற்ற ஓடோடி யும் வந்த பரம்பொருளே சுசீலாவின் உருவத் தில் நிற்பதாக வனஜாவுக்குத் தோன்றியது.

அவள் சுசீலாவை இறுகக் கட்டிக் கொண்டு தேம்பினுள்.

8

கோபாலன் வந்தான்; வரும்போதே கன குஷியுடன் வந்தான்; ஆங்கில மெட்

டில், 'லா–லல்லல்லல்லா–லா–லாலல்லா' என்று மெதுவான குரலில் பாடிக்கொண்டே வந்தான்.

வெகு லாகவமாகக் கோட்டைக் கழற்றி ஒரு நாற்காலிமீது வீசிவிட்டு, எதிரிலிருந்த சோபாவில் உட்கார்ந்துகொண்டான்.

''சுசீலா!'' என்று குரல் கொடுத்தான்.

உள்ளே யிருந்தபடியே, ''இதோ–வந்துவிட்டேன்!'' என்று சுசீலா பதில் குரல் கொடுத்தாள்.

அடுத்த நிமிஷம் கையில் காப்பியுடன் அவள் கூடத்திற்கு வந்தாள்; கோபாலனின் எதிரில் காப்பிக் கோப்பையை வைத்துக்கொண்டே ''ஏது அண்ணு! இன்றைக்கு ரொம்பக் குஷியாய் இருக்கே!'' என்று கேட்டுப் புன்னகை பூத்தாள்.

''பாரு சுசீலா! இன்னிக்கு ஸரியான 'பிஸினஸ்' ஒண்ணு பண்ணினேன்; முதலே இல்லாமல் ஒரு இரண்டுஆயிரம் லாபம் தட்டிவிட்டேன்! Two Thousands! தெரிஞ்சுதா! ஒரு கான்ட்ரேக்ட், இந்தக் கைக்கு அந்தக்கை மாற்றம்; நான் நடுவில் நின்று பேசினேன்; அதுக்கு Two Thousands! எப்படி? அதுதான் குஷி!'' என்ருன் பெருமை பிடிபடாமல்.

''பேஷ்! நல்ல போடு போட்டாய்; கிருஹலக்ஷ்மி வந்து நுழைஞ்சதுமே அதிர்ஷ்டம் அதிகமாய் விட்டது போலிருக்கே!'' என்று சிரித்துக் கொண்டே மெச்சினுள்; கிடைத்த ஸந்தர்ப்பத்தை நழுவவிட மனமின்றி, புதிர் போட்டாற் போலவும் பேசினுள்.

கோபாலன் 'சடக்'கென்று தலை நிமிர்ந்து சுசீலாவை ஏறிட்டு நோக்கினுன்; ''கிருஹலக்ஷ்மியா! அப்படி வேறு யாரோ வந்து நுழைந்து கொண்டிருக்கிற மாதிரி யல்லவா பேசுகிருய்! நீதான் இப்போது இந்த வீட்டின் லக்ஷ்மி!'' என்ருன்.

''இல்லை—ஸாக்ஷாத் கிருஹலக்ஷ்மியே வந்திருந்தால்.........?.........''

''என்ன சுசீல்! புதிர் போடுகிருய்! விஷயம் ஏதாவது இருந்தால் 'பளிச்' சென்று சொல்லிவிடு!'' என்று கூறிய அவன் குரலில் அடக்க முடியாத ஆத்திரம் ஒலித்தது.

அறையினுள்ளே நுழைந்து பார்த்த கோபாலன் நின்ற நிலையிலேயே ஸ்தம்பித்துவிட்டான்

"மன்னி வந்திருக்கிறாள், அண்ணா!" என்றாள் சுசீலா.

"மன்னியா? எந்த மன்னி?"

"பெரிய மன்னியில்லை; சின்ன மன்னி!"

"விளையாடுகிறாயா - இல்லை, நிஜம் தானா?" என்று சீறினான் கோபாலன்; க்ஷணநேரத்திலே அவன் குஷியெல்லாம் கோபமாக மாறிவிட்டது.

"இப்படி இரையாதே அண்ணா; எனக்கே பயமாயிருக்கு!" என்று கெஞ்சினாள் சுசீலா.

இருக்குமிடத்தைவிட்டு எழுந்துவிட்டான் கோபாலன்; ஒரு நிலையில் அவனுக்கு இருப்பே கொள்ளவில்லை; தன்னை நிதானப்படுத்திக் கொள்ள முயன்றும் அவனால் முடியவேயில்லை.

"நிஜமாய்த்தான் சொல்லுகிறாயா, சுசீலா?" என்று அவன் மீண்டும் படபடத்தான்.

"பொய் சொல்லுவேனா அண்ணா?"

"யாருடைய உத்தரவின் மீது அவள் இந்த வீட்டிற்குள் நுழைந்தாள்?" என்று ஆக்ரோஷத்துடனே அடித்தொண்டையிலிருந்து கூச்சலிட்டான் கோபாலன்,

"அவளுக்கே சொந்தமான உன்னிடம் வருவதற்கு அவள் யாருடைய அனுமதியைக் கோர வேண்டும், அண்ணா?" என்று நிதானமாகவே கேட்டாள் சுசீலா.

ஆத்திரத்தில் அவன் தன்னையறியாமலேயே, சுசீலாவைப் பார்த்து, "சீ! மூடு வாயை!" என்று அலக்ஷியமாகக் கத்திவிட்டான், ஆனால் அடுத்த க்ஷணமே அவன் தன் தவறை உணர்ந்துகொண்டு உதட்டைக் கடித்துக்கொண்டான்.

"நீ என்னை என்னவேண்டுமானாலும் சொல்லு; ஆனால் மன்னியை ஏற்றுக்கொள்ள மறுக்காதே!" என்று புன்னகையுடன் சுசீலா சொன்ன பதில் அவனை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது.

"மனக்குழப்பத்தில் உன்னையே கோபித்துக் கொண்டுவிட்டேன் சுசீலா; வருத்தப்பட்டுக் கொள்ளாதே" என்று குழைவாக அவள் மன்னிப்பைக் கோரினான் கோபாலன்; ஆவலையோ-ஆத்திரத்தைத்தானோ – அடக்கமுடியாதவனாக, அவன், மீண்டும், "நிஜமாகவே, அவள், இப்போது, இங்கேதான் இருக்கிறாளா?" என்று கேட்டான்.

"அதோ-அந்த மாடி அறைக்குள் போய் நீயே பார்த்துக்கொள் அண்ணா; ஆனால் நிதானமாக நடந்து கொள்ளவேண்டும்!" என்று சொல்லி எச்சரிக்கையும் விடுத்தாள் சுசீலா.

அவள் காண்பித்த மாடி அறைப்பக்கம் ஓட்டமாக ஓடினான் கோபாலன்; மாடிப்படிகளை ஒரு அடிக்கு நான்காகத் தாவிக்கொண்டு ஓடினான்; அந்த அறைக்கதவை ஒரே தள்ளில் விரியத் திறந்துவிட்டான்.

அறையினுள்ளே நுழைந்து பார்த்த கோபாலன் நின்ற நிலையிலேயே ஸ்தம்பித்துவிட்டான்.

பார்ப்பவர் யாருமே பிரமிக்கத் தக்க விதத்தில் தற்காலத்திய நவநாகரிக ஆடையணிகளுடனே, பேரழகியாய் நின்று கொண்டிருந்தாள் வனஜா.

ஆயினும் அத்தகைய நவீன அலங்காரங்களுக்குப் பொருத்தமான பாவமும், அதற்கேற்றபடி அசைவு, நெளிவுகளும் அவளிடம் காணப்படவில்லை. கோபாலனும் அதைக் கவனித்தான்.

அவனுடைய பார்வையின் கூர்மையைத் தாங்க மாட்டாத வனஜா தலையைக் கவிழ்ந்துகொண்டாள். தைரியத்தை இழந்துவிட்ட நெஞ்சின் படபடப்பினால் அவள் உடலும் வெட வெட வென்று நடுங்கியது; என்ன சொல்லுவானோ வென்ற பயத்தால் தேகமெங்கும் வியர்வை வெள்ளமாக வழிந்தோடியது. வனஜா குனிந்த தலை நிமிரவேயில்லை.

"என்ன அண்ணா! வைத்த கண்ணை எடுக்காமல் பார்க்கிறாயே? எப்படியிருக்கிறாள் மன்னி?" என்று சுசீலாவின் குரல் அறைக்கதவின் புறமிருந்து வந்தது.

"சிலைக்கு அலங்காரம் செய்து வைத்ததுபோல் இருக்கிறது!" என்று கோபாலனிடமிருந்து 'பளிச்' சென்று பதில் வந்தது.

"வேஷப் பொருத்தம் இருக்கிறதல்லவா! அதுவே போதுமே? தகுந்தபடி நடந்துகொள்ள வேண்டிய விதத்தை நீ கற்றுக் கொடுத்துவிட்டாயானால் அப்புறம்......!..."

"இந்த அலங்காரமெல்லாம் உன்வேலை தானே?" என்று கேட்டு, கோபாலன் சுசீலாவைக் குறுக்கிட்டான்.

"உனக்கு எப்படித் தோன்றுகிறது?"

"இந்த மூதேவி நிற்கும் விதத்திலிருந்தே உன் வேலைதான் என்பது நன்றாய்த் தெரிகிறது!"

"இன்னொரு முறை இந்த மாதிரி சொல்லாதே அண்ணா; மன்னி ஸ்ரீதேவிதான்; இன்று காலையில் தான் வந்தாள்; மன்னி தானாகவே வந்த முகூர்த்தம்-உனக்கு இரண்டாயிரம் ரூபாய் அனாயாஸமாய்க் கிடைத்திருக்கிறது!" என்றாள் சுசீலா,

"இவள் வந்திருக்காவிட்டால் எனக்கும் பணம் வந்திருக்காதோ?"

"நல்ல சகுனத்துடன் வருவது எப்படி? கெட்ட சகுனத்துடன் வருவது எப்படி? இரண்டும் உனக்கு ஒன்றுதானோ?" என்று சவால் விடுத்தாள் சுசீலா.

கோபாலன் மறுபடியும் வனஜா மீது தன் பார்வையைச் செலுத்தினான்.

"இப்போதே மன்னியை இந்த மாதிரி பார்த்துப் பார்த்து தின்று விடாதே அண்ணா! நாளைக்கும் கொஞ்சம் பாக்கி வைத்துக்கொள்; இப்போது மற்ற விவரங்களையும் சொல்லுகிறேன்; அவளைக் கொஞ்சம் தனியே இருக்கவிட்டுக் கீழே வா!" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் சுசீலா.

கோபாலன் மௌனமாகத் திரும்பினான்.

வனஜா விச்ராந்தியாக நீண்ட மூச்சுவிட்டாள்.

(தொடரும்)



வாழ்வு

கே.வி.கே.

மறு கரையை அடைய வேண்டிய அவன், மிதந்து ஓடிய அவ்வாற்று வெள்ளத்தையே நோக்கிக் கொண்டிருந்தான் சற்று நேரம். இதற்கு ஓய்வே கிடையாதா? நூற்றாண்டுக் கணக்கில் ஆயுளைச் சுமந்து செல்லுவதில் அலுப்பே இல்லாமலா இது வாழ்கிறது! பற்றற்று, தன் பணியே லட்சியமாகச் செல்வதில்தான் அதன் சாந்தி உருவாகி இருக்கிறது போலும்!

மாலை வெயில் மங்கிக்கொண்டிருந்த அத்தருணத்தில் எவ்வளவு நேரம் அவன் நின்று கொண்டிருந்தான் என்பது அவனுக்கே தெரிந்தால்தானே. வாழ்க்கைத் தணலில் வெந்து விட்டிருந்த மனத்துடன் அமைதியை நாடிச் சென்று கொண்டிருந்தவனுக்கு, கர்ப்பிணிபோல் நிறைவுடன் தளர்ந்து செல்லும் அவ்வாறு ஏனோ ஆறுதலாகத்தான் இருந்தது.

“ஐயா” என்ற குரல் அருகில் ஒலித்தபோதுதான் அவன் சுய உணர்வு பெற்றுத் திரும்பினான். அஸ்தமித்துவிட்ட அவ்வேளையிலே எங்கிருந்தோ வந்த படகோட்டி ஒருவன் தன் படகை அவன் பக்கமாகச் செலுத்திக் கொண்டு வந்து நிறுத்தினான். நீண்ட பெருமூச்சுடன் மெல்லப் படகை அடைந்தவன் அதனுள் ஏறி எதிர் பக்கத்தில் அமர்ந்து, மறுகரைக்குப் போகும்படி படகோட்டியிடம் கூறிவிட்டு, மௌனமாக ஆற்று நீரை நோக்கிக் கொண்டிருந்தான்.

நீண்ட கால அனுபவத்துடன் ஓடப் பாட்டு ஒன்றை முணுமுணுத்தவாறே நிர்மானுஷ்யமான அந்நீர்ப் பரப்பில் படகைச் செலுத்தினான் ஓடக்காரன்.

அசைந்தாடிச் சென்ற படகின் அரவணைப்பில் அவன் மனமும் ஆழ்ந்து நின்றது. ஓடக்காரனின் கீதம் சிரமமின்றி, செவியில் புகுந்து, துடித்துக்கொண்டிருந்த நரம்புகளை ஆசுவாசப் படுத்தியது.

பத்து வருடங்களுக்கு முன்பு அவன் வாழ்வு ஓடத்தைப் போலவா சென்றது! ககன மார்க்கமாய்ப் பறந்து வட்டமிடும் விமானமாகத் தோன்றவில்லையா! கை நிறையப் பொருளும், கலாசாலை நாட்களும், பொறுப்பற்ற நிலைமையும், அவன் வாழ்வின் அம்சங்களாகத்தானே விளங்கின!

அப்போது ராஜியின் வார்த்தைகளெல்லாம் அர்த்தமற்றவைகளான விளையாட்டுச் சொற்களாகப் படவில்லையா, இளமைக் கற்பனையில் மிதந்த அவன் மனதிற்கு! ஆர்வமும் அன்பும் ததும்பும் அவள் இதய உணர்ச்சிப் பெருக்கு அவனுக்குத் துளிக்கூடப் புரியவில்லையே!

"அத்தான்! கலாசாலைப் படிப்பு முடிந்தவுடன் என்ன செய்யப்போகிருய்......?"

"செய்வதென்ன! சென்னையிலேயே தங்கி, ஆனந்தமாக ஓர் உத்தியோகத்தில் அமர்ந்து ஊர் சுற்றப் போகிறேன்...!"

"அப்பா ஊரோடு போய்த் தங்கிவிடப் போகிருராமே...! நீ வரப்போவதில்லையா...?"

"நீயும், உன் அப்பாவும் ஊருக்குப் போங்கள்...! நான் அங்கு வந்து என்ன செய்வது......? எனக்கு இங்கேதானே வாழ்வு...!"

வாழ்வு! ஆம்! அவன் வரைக்கும் அது வாழ்வுதான்! அப்படித்தான் எண்ணிக்கொண்டிருந்தான்! ஆனல் அவளுக்கு...! அவள் வாழ்விற் பெரும் பகுதி அவன் கையில் மறைந்திருந்தது அவனுக்குத் தெரியாமலா இருந்தது! அல்லது தெரிந்துதான் அலட்சியமாய்ச் சென்று கொண்டிருந்தான...!

நீண்ட பெரு மூச்சுடன் திரும்பியவள் மேலும் ஒரு கேள்விக்குத் துணிந்தாள்:

"எப்போதாவது ஊருக்கு வருவாயா...... அத்தான்......?"

அத்தொனியில் தோன்றிய ஏக்கம் அவனுக்குப் படவேயில்லை என்று அவனல் சத்தியம் செய்ய முடிந்திருக்குமா அப்போது: ஆயினும் அவன் சாதாரணமாகத்தானே பதிலளித்தான்.

"அங்கு எனக்கென்ன வேலை. ராஜி! எதற்காக வரவேண்டும்......! பைத்தியம் மாதிரி பேசுகிருயே......!"

அவள் உதடு ஏனே துடித்தது. பைத்தியத்தின் கண்களைப் போல்தான் அவள் கண்களும் விரிந்து மடிந்தன. எங்கிருந்தோ பொங்கி வந்த ஆத்திரத்தின் ஒரு பகுதி மட்டும் வார்த்தைகளாகக் கொட்டியது.

"என்ன வேலை என்று கேட்கிருயே அத்தான்! ஏன்! என்னைப் பார்க்க வேண்டும் என்று உனக்குத் தோன்றவே தோன்ருதோ......!"

அவன் இதை எதிர்பார்த்தானே இல்லையோ! ஆனல் அவன் ஒரு கணம் பேசமுடியாமல்தான் நின்று விட்டான். ஆயினும் சற்று நேரத்திலேயே சமாளித்துக்கொண்டு சிரித்தபடியே அவன் திரும்பியபோது, அவள் போய்விட்டிருந்தாள், அவன் பரிகாசத்திற்குத் தகுதியற்றவளைப் போல.

ஆற்று நீர்ப் பரப்பின் மேல் மிதந்து வந்த காற்று, சில்லென அவன் முகத்தில் வீசி அவனுடலை உலுக்கியது, மேலே போட்டிருந்த வஸ்திரத்தை இழுத்துப்போர்த்திக் கொண்டான்.

கடைசியில் ராஜியும் அவள் தந்தையும் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றபோது, அவள் உள்ளத்தில் பாய்ந்த வேதனை அவனைப் பாதிக்காமலேதானே இருந்தது! ரயிலடியில் அவள் விடை பெற்றுச் செல்லும் போதுகூட, அவனிடம் தோன்றிய உற்சாகம் அவளை இன்னும் அதிக மனச்சலிப்புக்குத் தானே ஆளாக்கியிருக்கவேண்டும். இருபதினும் அவளை உற்று நோக்கியபோது அவள் கண்களில் தோன்றிய கனிவு இன்னும் ஏனே அவனல் மறக்க முடியவில்லை. கடைசி முறையாகவும் அவள் தன் கோரிக்கையை வெளியிடத் தயங்கவில்லையே அப்போதும்.

அத்தான்! நீ இங்கே தங்கி உத்தியோகம் பார்க்கவேண்டும் என்ற அவசியமே இல்லையே......! இப்போதும் ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை! நீயும் கூடவே ஊருக்கு வந்துவிடு, அத்தான்......! என்னைப் பைத்தியம் என்று வேண்டுமானலும் அழை! ஆனல் பைத்தியத்தின் உள்ளம் பளிங்கு போன்றது என்பதை மறக்காதே......!"

அவனல் பதில் கூற முடிந்ததா! அவள் உள்ளத்தின் நங்கூரம் இவனிடம் பதிந்திருந்ததுபோல், இவன் சித்தத்தின் சபலம் வேறொரு பெண்ணிடம் அடைக்கலமடைந்து விட்டிருந்ததை, அவன் ஏன் பகிரங்கமாய் அவளிடம் வெளியிடத் துணியவில்லை! கல்லூரி மாணவி காந்தாவின் காந்தம் அவனை எதற்கும்தான் துணிய வைத்திருந்ததே! அப்படியிருந்தும் இவள் விஷயத்தில் துணிவற்றவனகத்தானே நின்ருன்!

சமாளித்து அவன் பதில் கூறுமுன்பே தான் ரயில் நகர்ந்து விட்டதே! ராஜியின் வெளுத்த முகம் ஜன்னலின் வெளியே தோன்றி,

"அத்தான்! கடிதமாவது போட்டுக்கொண்டிரு........!" என்று எச்சரித்துவிட்டுச் சென்றபோதும் அவன் கல்தூணைப்போலத் தானே நின்றான்.

கண்களை விட்டு ரயில் மறைந்த அதே தருணம் அவன் மனத்தை விட்டு ராஜியும் மறைந்தது 'காந்த' சக்தியின் மகிமையினால் தானே! இன்பமும், குதூகலமும், சஞ்சலமற்ற கற்பனை வாழ்வும் அவனை எதிர் நோக்கின. மலை போன்ற செல்வம் அவனுக்கு எவ்வளவு தைரியத்தையும் பலத்தையும் அளித்திருந்தது!

இரண்டே மாதத்தில் அவனும் காந்தாவும் காதல் வெள்ளத்தில் கூடி மணம் புரிந்து கொண்டு, நீரைக் கிழித்துக் கொண்டு ஓடிய வாழ்க்கைப் படகில் சஞ்சரிக்க ஆரமபித்தனர். பூரிப்பையும், எல்லையற்ற இன்பத்தையும் அள்ளி வீசிக்கொண்டு சென்ற அப்படகு, இப்போது செல்லும் இந்தப் படகைப் போலவா இருந்தது!

பணத்திற்குள் படியும் எப்பொருளும் இன்பமும் அவர்களுக்குப் பணிந்துதானே நின்றது. காந்தாவின் கொஞ்சு மொழிகளும், குதூகலச் சிரிப்பொலியும் அவன் சுலபத்தில் அடையக்கூடிய பாக்கியங்களா! அவளுக்காக அவன் தன் வாணாளையே அர்ப்பணிக்கக்கூடத் தயாராகத்தானே யிருந்தான்!

சகல போக்கியங்களும் பெற்றிருந்த அவனுக்குக் காலத்தின் வேகம் புலனாகுமா! ஐந்தாண்டுகள் ஓடி மறைந்துவிட்ட போதும் கூட, காந்தாவுடன் நடத்திவந்த இல்வாழ்க்கையை விமர்சனம் செய்து பார்க்க ஏனோ அவனுக்கு ஒழியவில்லையே! எப்போதோ ஒன்றிரண்டு வந்த ராஜியின் கடிதங்கள் கூடப் பதிலளிக்கப்படாமலே கிடந்தன.

ஆயினும் எல்லையற்ற இன்பத்தைத் தான் பெற்று விட்டதாக எண்ணிப் பூரித்திருந்த அவன், ஐந்து வருஷங்களுக்குப் பிறகு அவ்வெல்லையைத் தாண்டிவிட்டு வெற்றுலகில் நிற்பனதைப் போலத்தான் உணர்ந்தானே யன்றி, தன் இன்பத்தின் லட்சியத்தை அடைந்து விட்டவனாகத் தெரியவில்லை!

அவன் காந்தா இப்போது காந்தமற்றவளாகப் போய்விட்டாளா......! அல்லது தான்தான் தகுதியற்றவனாகப் போய்விட்டானா...! தன் மனஉணர்ச்சியைப் பொறுத்த மட்டில் அவன் ஒரு மாறுதலையும் காணவில்லையே! ஆனால் அவளிடம் ஏனோ பல மாறுதல்கள் தோன்றியிருக்கவில்லையா...!

காந்தா காந்தமற்றவளாக மாறிவிட்டிருந்தாளோ என்னவோ, ஆனால் கண்ணற்றவளாக மட்டும் மாறிவிடவில்லை. அவன் கண்களை மூடி, தன் கண்களால் அவைகளை விழுங்கி விட்டிருந்தவள்போல் தான் தோன்றினாள். முதல் இரண்டொரு வருஷங்களில் இருந்ததுபோல் அல்லாமல் இப்போதெல்லாம் அவள் தன் தந்தையில்லத்திலேயே காலத்தைக் கழித்து வந்ததும், அவனும் அவளுக்காக அங்கேயே தங்கியிருந்ததும் அவனுக்குச் சகஜமாய்தானே இருந்தன!

அவள் சுய வாழ்வும், நண்பர்கள் கூட்டமும், தந்தையின் செல்வாக்கும், எல்லாவற்றையும்விட அவனிடம் அவள் நடந்து கொண்ட பற்றற்ற விதமும் அவனைச் சிந்தனையாளனாக மாற்றியது விந்தையல்லவே!

வாழ்வில் முதல் முறையாக அன்றவன் மனப்போரில் மூழ்கி அமர்ந்து கொண்டிருந்த போதுதான் அக்கடிதம் வந்தது. எங்கெங்கோ அடிபட்டுப் பலநாள் கடந்து வந்து சேர்ந்த அக்கடிதத்தில் ராஜியின் குரல் தொனித்தது.

"அத்தான்! எத்தனையோ வருடங்கள் ஓடிவிட்டன, வாலிபத்தில் தோன்றும் மிருதுவான பாதை, வயதாக ஆக, கரடு முரடாகத்தானே செல்கிறது...! மனமும் தனமும் சேர்ந்திருக்கும்போது இரண்டையும் ஆராய முடியவில்லை...! ஒன்று பிரிந்தால்தான் இன்னொன்று கட்டில் அடங்குகிறது! எதைப் பிரித்து எதை அடக்கவேண்டும் என்பதில்தான் நமக்குத் தெளிவேற்படுவது இல்லை...! ஆனால் காலம் வழிகாட்டிவிடுகிறது! முடிந்தால் ஒரு நடை வந்துவிட்டுப் போயேன்.........ராஜி"

அதே சமயம் உள்ளே வந்த காந்தாவும் அவன் பின் நின்று அக்கடிதத்தைப் படித்தாள். புற உலகையே மறந்துவிட்டு வெற்றுப் பார்வையுடன் ஜனனல் வெளியே பார்த்துக் கொண்டிருந்தவன், அவள் நகைப்பைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான்.

"கடிதம் எங்கிருந்து வந்தது......?"

அவன் காதில் இது விழுந்ததோ இல்லையோ தெரியாது. அன்றுதான் முதல் தடவையாக அவள் கேள்விக்குப் பதிலளிக்காமல் இருந்தான் அவன்!

"யார் அந்த ராஜி......?"

இம்முறை அவன் காதில் இது விழுந்தது போல்தான் தோன்றியது. ஆயினும் அவன் வாயினின்றும் பதில் ஒன்றும் வரவில்லை.



ஆனால் அவள் விடுவதாக இல்லை. ஏளனச் சிரிப்புடனேயே மேலும் தொடர்ந்தாள்.

"ஏன்! தனத்தைப் பிரிந்தவுடன் மனத்தைக் கட்டில் அடக்குகிறீர்களா......!"

பெருமூச்செறிந்தவாறே அவன் மெல்ல அவள் பக்கம் திரும்பினான்.

"காந்தா! இந்த அடிமை வாழ்வு எனக்குப் பிடிக்கவில்லை! நீ என்னோடு புறப்பட்டு விடேன்!"

அவள் மறுபடியும் சிரித்தாள்.

"அடிமை வாழ்வா......! யார் சொன்னது? நான் இங்கே சுயேச்சையாகத்தானே இருக்கிறேன்!"

"நீ இருக்கலாம்.........! ஆனால் நான் இல்லை.........!

"அதற்கு நானா பொறுப்பாளி......! நீங்கள் கூறும் தனி வாழ்வு எனக்குப் பிடிக்கவில்லை......! என் தந்தையும் அதை விரும்ப மாட்டார்......!"

அவனுக்கு ஏனோ 'சுருக்கென்று பட்டது' இதுதானா அவன் கற்பனைக் காந்தா...!"

"என்ன! உன் தந்தையா...? ஏன் அவரையே நான் கேட்டு விடுகிறேனே......!"

"உங்கள் இஷ்டம்...! பிறகு என்னைக் குறை கூறாதீர்கள்......!" என்று கூறிவிட்டு அவள் சிவுக்கென வெளியே போய்விடவில்லையா!

நீண்டநேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தவன் கடைசியில் அவள் தந்தையிடம்சென்று கேட்டே விட்டான். சாவதானமாக யாவையும் கேட்ட அவர் மட்டும் என்ன கூறிவிட்டார்!

"இதோ பாரப்பா...! என் பெண் சகல போக்கியத்தையும் இங்கு அனுபவிக்கிறாள்! அம்மாதிரி வாழ்வை அவளுக்கு உன்னால் இனி அளிக்க இயலாது என்றுதானே அவள் இங்கே தங்கியிருக்கிறாள்...!"

அவன் புருவம் ஒன்றோடொன்று நெறிய ஆரம்பித்தது. ஆயினும் சமாளித்தவாறே பேசினான்!

"ஏன்! என்னுடன் வாழ்வதில் அவளுக்கு என்ன குறை! என் செல்வம் அவள் தேவைக்குப் போதாதா......!"

பரிகாசம் கலந்த நகைப்பு அவரிடமிருந்து வெடித்தது.

"அப்பா! உன் நிலையைப்பற்றி உன்னைவிட என் பெண் நன்றாக அறிந்திருக்கிறாள்! நீ எண்ணியிருப்பதைப்போல உன் தனம் மலைக் குவியல் அல்ல? என்னைக் கேட்டால் நீ உடனே உன் நிலைமையை உணர்வதும் நலம்! கேவலம் வகையற்ற ஒருவனுக்கு என் பெண்ணை அடிமையாக்கியதற்கு என்னை நானே நொந்து கொள்ளுகிறேன்......!"

அதற்குமேல் அவன்கேட்கவில்லை! சவுக்கடிபட்ட வேங்கையைப் போல் துள்ளி வெளியே வந்தவன் நேராகத் தன் பாங்குக்குத் தானே சென்றான்! மலைபோன்ற அவன் செல்வம் என்னவாயிற்றென்றறிய மனம் துடிக்கவில்லையா...! அப்படியவன் விதியற்றவனாகவா நிற்கிறான்...!

ஆம்! அவனை எதிர் கொண்டழைத்தது அவன் 'மலைக் குவியலா'! சென்ற ஐந்தாண்டுக்குள்ளாகவே அவன் ஆஸ்தி அத்தனையும் கரைக்கப்பட்டு, அதற்குமேல் கடன்தானே நின்றது!

மனமொடிந்து வெளியே வந்தவன் ஏனோ நடக்கக்கூடச் சக்தியற்றவனாய் அக் கட்டிடத்தின் வாசற்படியிலேயே அமர்ந்து விட்டான்! காந்தாவைக்காந்தம்போல் இவ்வளவு காலம், தான் இழுத்ததாக எண்ணிக்கொண்டிருந்ததெல்லாம் கனவுதானா! தனக்கும் அவளுக்கும் நடுவே பிணைத்திருந்த பந்தமெல்லாம் கடைசியில் இந்தச் செல்வம்தானா! இத்தனை காலம் அவன் கண்மூடியாகவா இருந்து வந்தான்! காந்தாவே தன் உயிர் என்றவன் எண்ணியிருந்ததற்கு மாறாக, அவள் அவன் உயிரையல்லவா குடித்துவிட்டுச் சென்றிருக்கிறாள்!

அதற்குப் பின் அவன் எங்கே சென்றான் என்பது அவனுக்கேகூடத் தெரியாது. இரண்டு மூன்று வருஷங்கள் எங்கெங்கோ சுற்றியலைந்துவிட்டு முடிவில் ஓய்ந்து நின்ற அவன் கண்களுக்கு அந்த ஆறுதான் முதன் முதலாகப் பட்டது. அதன் மறுகரையில் தானே ராஜியின் கிராமம் இருக்கிறது!

"முடிந்தால் ஒரு நடை வந்துவிட்டுப் போயேன்... அத்தான்...!" என்ற அவள் குரல் அவன் காதில் ரீங்காரம் செய்தது.

படகில் அமர்ந்திருந்தவன் 'உஸ்' என்ற பெருமூச்சுடன் தன் உணர்ச்சிப் புயலை வெளி விட்டான். "இத்தனை காலத்திற்குப் பின் இந்நிலையில் தன்னை ராஜி வரவேற்பாளா...! தன் வருகை அவளுக்கு உண்மையில் மகிழ்ச்சியளிக்குமா...!"

"ஏன் அளிக்காது...!" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுச் சிந்தனை கலைந்து தலை நிமிர்ந்தான். புன்சிரிப்புடன் ஓடக்காரன் அவனை உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

"என்னப்பா! ஆச்சரியத்துடன் பார்க்கிறாய்...! உன் முகத்தையே வெகு நேரமாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றேன்; அதில் தோன்றும் உணர்ச்சிகளே உன் மனதில் எழும் எண்ணங்களையெல்லாம் கண்ணாடிபோல் காட்டுகின்றனவே...!"

வியப்புடன் அமர்ந்துவிட்டவன் அவ்வோடக்காரனை மேலும் கீழும் உற்று நோக்கினான். இன்னதென்றே நிர்ணயிக்க முடியாத வயதுடன் தோற்றமளித்த அவன், சாமானிய ஓடக்காரனாகத் தெரியவில்லை. அவன் பேச்சும் பண்பும் உயர்குடிப் பிறப்பைத்தான் சுட்டின.

இவன் பேசு முன்பே ஓடக்காரன் மேலும் கூறிக்கொண்டு சென்றான்.

"இரண்டு வருஷத்திற்கு முன்பு நானும் உன்னைப்போல்தான் இவ்வாற்றைக் கடந்து எதிர்கரைக் கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். இதேபோல்தான் அப்போது நானும் என் வரவேற்பைப்பற்றிச் சந்தேகத்துடன் செல்லும்படியாக இருந்தது."

"ஏன்...?"

அதுதான் நம் செய்வினை! உயர் குடியில் செல்வத்துடன் பிறந்திருந்த நான், வாழக் கொடுத்துவைக்கவில்லை. ஐந்தாறு வருஷங்களுக்கு முன் இதே கிராமத்தில்தான் சுடர் போல் ஒரு பெண்ணை எனக்கு மணமுடித்து வைத்தனர். ஆனால் ஏனோ என் மனம் அப்போது அப் பெண்ணை நாடவில்லை. பொருளீட்டுவதிலேயே முனைந்திருந்த நான், மணமான மறுதினமே யாரிடமும் சொல்லாமல் அயல்நாடு சென்று விட்டேன். ஆனால் கடல் கடந்து சென்றவர்கள் எல்லாம் குபேரனாகத் திரும்பி விடுவதில்லை என்பது அப்போதுதான் எனக்குத் தெரிந்தது. கைப்பொருளெல்லாம் போய், ஐந்து வருடம் பசியையும் பட்டினியையும் அனுபவித்து விட்டு, பிணியும் துன்பமும் நிறைந்தவனாய்த் தாய் நாடுவந்து சேர்ந்தேன். பதைக்கும் நெஞ்சுடனே கிராமத்தையடைந்து வீட்டை நெருங்கியபோது என் கண்களையே நம்ப முடியவில்லை. அரண்மனை போன்றிருந்த அவ்வில்லம் நொறுங்கி மண்வீடாகக் காட்சியளித்ததுடன் வறுமையில் அவதியுற்றிருந்த என் இளம் மனைவி தன் உற்றாரையெல்லாம் இழந்து, தன் வாழ்க்கையில் எலும்புந்தோலுமாகக் காணப்பட்டாள். ஆயினும் அவள் எனக்களித்த வரவேற்பு மகத்தானது. நோயுற்றிருந்த எனக்கு அவள் செய்த பணிவிடைகள் மறக்க முடியாதவை. பல காலம் அவளைத் துன்பம் அனுபவிக்க விட்டுச் சென்ற என்னையே நான் வெறுத்தேன். அதற்கெல்லாம் தக்க ஈடு செய்யவேண்டுமென எத்தனையோ சபதம் செய்துகொண்டதுடன், 'படகு ஓட்டியாவது உன் வாழ்வைப் புதுப்பிக்கிறேன்' என்று அவளுக்கு வாக்களித்தேன்...!"

படகோட்டியின் கதையில் தன்னை மறந்திருந்தவன் உணர்வு பெற்றபோது, இருள் சூழ்ந்து, படகும் எதிர் கரையை அடைந்து விட்டிருந்தது. தன்னிடத்தை விட்டு மெல்ல எழுந்து கரையில் இறங்கிய அவன் மடியில் இருந்து பணத்தை எடுத்துப் படகோட்டிக்கு அளிக்கத் திரும்பியவுடன், உண்மையில் அசந்து நின்று விட்டான். ஒரு வினாடிக்கு முன் அங்கிருந்த படகோட்டியோ அல்லது அப்படகோ இப்பாது காணப்படவில்லை! கலவரத்துடன் சுற்றும் முற்றும் பார்த்தவனின் செவிகளில் கலகலவென்ற சிரிப்பொலி மட்டும் நீரின் மேலிருந்து கிளம்பித் தாக்கியது!

அவன் முள்ளம் தண்டு ஒரு கணம் சில்லிட்டு அவனுடலை உலுக்கியது. மறுகணம் அவன் அங்கு நிற்கவில்லை. தன் கால்களின் சக்தி கொண்ட மட்டும் கிராமத்தை நோக்கி விரைந்தோடினான். மார்பு பிளந்துவிடும் போல் களைப்பேற்பட்டபோதும் அவன் நிற்காமல் ஓடி, கிராமத்தின் எல்லையை எட்டினான். அங்கிருந்த இரண்டொரு விளக்கொளியும், மனித சஞ்சாரமும்தான் அவன் பதைப்பைச் சற்று அடக்கின.

ஒருவாறு சமாளித்தபடி கிராமத்தின் கோடியை அடைந்து ராஜியின் இல்லத்தைக் கண்டு பிடித்தபோது அவன் வியப்பு மறுபடியும் துளிர்த்தது! இரண்டடுக்கு மாடியுடன் இருக்கவேண்டிய அவ்விடு பாழடைந்து கூரை தாழ்ந்து காணப்பட்டது.

அச்சத்துடனேயே அதை நெருங்கியவன் ஒருவாறு துணிந்து கதவைத் தட்டினான்.



சிறிது நேரத்திலேயே கிரீச்சிட்ட ஒலியுடன் அக்கதவு திறக்க, கையில் பற்றிய விளக்குடன் ராஜி அங்கு நின்று கொண்டிருந்தாள்.

அவனே ஒரு நிமிடம் வெறித்துப் பார்த்தவளின் உலர்ந்த அதரங்கள் "அத்தான்" என்று விசும்பலுடன் புலம்பின.

அவளேயே நோக்கிக்கொண்டிருந்த அவன் ஒன்றுமே பேசாமல் நின்றுவிட்டான். "ஐயோ! மலர்ச்சியும் மணமும் வீசிய அந்த ராஜியா இவள்!

உள்ளே சென்று கிழிந்த பாயில் அமர்ந்த அவனுக்குக் கடைசியில்தான் குரலைக் கண்டு பிடிக்க முடிந்தது.

"ராஜீ! இதென்ன இப்படிப் போய்விட்டாய்...? மாமா எங்கே...!"

அதெல்லாம் பழங்காலம், அத்தான், அப்பா போய் நாலைந்து வருஷங்களுக்கு மேலாகின்றன...!"

அவள் தொனி எதனாலோ அவனைப் பேச முடியாமல் செய்து விட்டது சற்று நேரம்.

"ராஜீ! மாமா போய் விட்டாரா...!. ஐயோ உன் கல்யாணம்...? கணவன்...?"

அவள் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டே பதிலளித்தாள்.

"அப்பா போகும் முன்பே ஒருவரிடம் என்னைக் கட்டிவிட்டுத்தான் போனார்! ஆனால் அவர் கல்யாணத்திற்கு மறுநாளே அயல் தேசம் போய் விட்டார்...!"

"அப்புறம்...!"

"இரண்டு வருஷத்திற்கு முன் நோயுடன் திரும்பி வந்தார்! என்னாலானவரையில் பாடு பட்டேன்! ஆனால் என் பாபம், அவர் பத்து நாள்கூட உயிர் தாங்கி நிற்கவில்லை...! அப்பாவைப் பின்பற்றிப் போய்விட்டார்...!"

"ஹா...!"

ஆனால் அயல் தேசம் போகுமுன் அவருக்கிருந்த மனோபாவம் அவர் திரும்பியபோது ஏனோ மாறிவிட்டிருந்தது! "படகோட்டியாவது உன் வாழ்வைப் புதுப்பிக்கிறேன்' என்று கூறிக்கொண்டே இருந்தார், அவர் உயிருடன் இருந்த அந்தப் பத்து நாளும்...!"

அவள் உள்ளே சென்று விட்டாள். அவனுக்கு ஆகாரம் தயாரிக்க. பேச்சடைத்துச் சமைந்துவிட்ட அவன் அங்கேயே சாய்ந்து விட்டான். அவள் வாழ்வும் விரக்தியும் அவனே மௌனியாக்கின.

ஹோம் காமிரா பிரொஜெக்டர்

இந்த எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய பிரொஜெக்டர் டார்ச் எலெக்டிரிக் இரண்டினாலும் இயங்கக் கூடியது. திரையில் காணப்படும் உருவங்கள் உயிருள்ளன போல் காணப்படும். உங்கள் வீட்டையே சிறிய சினிமாக் கொட்டகையாகச் செய்து கொள்ளலாம். பிலிம்கள் மிகவும் புதியவை. எங்கும் எளிதில் கிடைக்கும் (35 m.m.) விலை ரூ. 12—8—0 வி. பி. பி. 2—8—0 பிரத்யேகம் உபரி பிலிம்ஸ் கஜத்திற்கு 8 அணா.

ஆடோமாடிக் 6 ரவைகள் கொண்ட பிஸ்டல்

(லைஸன்ஸ் தேவையில்லை)

இந்த பிஸ்டலில் ஆறு ரவை குண்டுகள் கொள்ளக்கூடிய டயல் உள்ளது. வெடிக்கும் பொழுது பெரிய சப்தமும், பொரிகளும் உண்டாவதால் திருடர்களும் துஷ்ட மிருகங்களும் பயந்து ஓடுவார்கள். ஸர்கஸ் டிராமாக்களுக்கு மிகவும் உபயோகப்படக்கூடியது எதிரிகளைப் பயமுறுத்த இன்றியமையாத கூட்டாளி, விலை ரூ, 8—8—0 வி. பி. பி. ரூ. 1—12—0 பிரத்யேகம். 12 ரவைகள் இனம். உபரி ரவைகள் டஜன் ஒன்றுக்கு ரூ. 1—4—0. பிஸ்டல் பெட்டி விலை ரூ. 2—8—0.

அமெரிக்கன் மாடல் ரோல் பிலிம் பாக்ஸ் காமிரா



மிக அருமையான போட்டோக்களை பிலிம் நெ 120ல் எடுக்கக்கூடியது. ஸைஸ் 2½" X 3½" வியூ பயிண்டர் மிக்க சக்தி வாய்ந்தது. விலை ரூ. 11—8—0. வி. பி. பி. 1—8—0 பிரத்யேகம், இதற்கு தோல் காமிரா உரை ரூ. 3—0—0.

எலெக்டிரிக் & ரேடியோ கயிட்

ரூ. 15 செலவில் நீங்களே ரேடியோ தயாரிக்கலாம். வீட்டு எலெக்டிரிக் வயரிங், ரேடியோவைப் பழுதுபார்ப்பது, எலெக்ட்ரிஸிடியைப் பற்றிய எல்லாம் தெரிந்து கொள்ளலாம். மாதம் ரூ. 200 சம்பாதிக்க உதவும். விலை ரூ. 4—0—0 தபால் செலவு 0—12—0 அணா பிரத்யேகம்.

14 பாஷைகள் கற்க—குஜராத்தி, மராத்தி, தமிழ் பஞ்சாபி, ஹிந்தி முதலிய 14 பாஷைகள் 48 மணிகளில் கற்றுக்கொள்ளலாம், விலை ரூ 5—0—0 போட்டோத் தொழில் ரூ 3—0—0 ஸோப் செய்வது ரூ 3—0—0 சென்ட் செய்வது ரூ 3—0—0 டெய்லரிங் & கட்டிங் ரூ 3-0-0 டிராயிங் & பெயிண்டிங் டீசர் ரூ 4-0-0 லக்ஷிய மணம் ரூ 3—0—0 வி. பி. பி. புத்தகம் ஒவ்வொன்றுக்கும் 0—12—0 அணா அதிகம்.

கடிதங்கள் ஆங்கிலத்தில்தான்

MILAP TRADING Co. (128 c) P. O. 21,
ALIGARH U. P. (India)

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam